
# THE WISDOM ACADEMY
# TNPSC &TNUSRB

## வரலாறு

## ஆறாம் வகுப்பு முதல்
## பத்தாம் வகுப்பு வரை



The Wisdom Academy™
We Guide... you Succeed.

**உங்களுக்குத் தெரியுமா?**

வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு.

வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான 'இஸ்டோரியா' (Istoria) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "விசாரிப்பதன் மூலம் கற்றல்" என்பதாகும்.

*நாணயவியல்* – நாணயம், அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறையாகும்.

கல்வெட்டியல் – கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை.

**உங்களுக்குத் தெரியுமா?**

'தம்மா' என்பது பிராகிருத சொல். இது சமஸ்கிருதத்தில் 'தர்மா' எனப்படுகிறது. இதன் பொருள் 'அறநெறி' ஆகும்.

*மானுடவியல் (anthropology)*

மனிதர்களையும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி படிப்பது மானுடவியல் ஆகும்

மானுடவியல்(anthropology) என்னும் சொல் இரண்டு கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. anthropos என்பதன் பொருள் மனிதன். logos என்பதன் பொருள் எண்ணங்கள் அல்லது காரணம். மானுடவியல் ஆய்வாளர்கள், மனித குலத்தின் வளர்ச்சியையும், நடத்தையையும் ஆராய்ந்து மனிதனின் கலாச்சார மற்றும் சமூக நிகழ்வுகள் பற்றிய முழு விளக்கத்தையும் அடைவதற்கு முயல்கின்றனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- *இந்திய தொல்லியல் துறை* – ASI (Archaelogical Survey of India).



- 1861 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற நிலஅளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.

செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக் களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்தில் உள்ள ராகிகர்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முதிர்ச்சியடைந்த ஹரப்பா காலத்தைச் சார்ந்தது.

மனிதர்களால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட உலோகம் – செம்பு.

**உங்களுக்குத் தெரியுமா?**

தீப்பெட்டியைப் பயன்படுத்தாமல் நெருப்பை உருவாக்கும் பழக்கம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் இன்றைக்கும் உள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

*மனிதர்களும் அவர்களது வாழ்விடங்களும்*

| | |
|---|---|
| 1. ஆஸ்ட்ரலோபிதிகஸ் | – கிழக்கு ஆப்பிரிக்கா |
| 2. ஹோமோ ஹெபிலிஸ் | – தென் ஆப்பிரிக்கா |
| 3. ஹோமோ எரக்டஸ் | – ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா |
| 4. நியாண்டர்தால் | – யூரோசியா (ஐரோப்பா மற்றும் ஆசியா) |
| 5. குரோ–மக்னான்ஸ் | – பிரான்ஸ் |
| 6. பீகிங் மனிதன் | – சீனா |
| 7. ஹோமோ சேப்பியன்ஸ் | – ஆப்பிரிக்கா |
| 8. ஹைடல்பர்க் மனிதன் | – லண்டன் |

**உங்களுக்குத் தெரியுமா?**


மனிதர்கள் பரிணாம வளர்ச்சி அடைந்த கதையைத் தொல்லியல், மானுடவியல் ஆகியவற்றின் உதவியுடன் நாம் அறிவியல் நோக்கில் பயில முடியும்.

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றிப் படிப்பது தொல்லியல் ஆகும். தொல்லியல் ஆய்விற்கு முக்கிய ஆதாரமாக அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் உதவுகின்றன.




**உங்களுக்குத் தெரியுமா?**

மொஹஞ்சதாரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடம் உலகப் பாரம்பரியத் தளமாக யுனெஸ்கோ அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




**உங்களுக்குத் தெரியுமா?**

உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் மெசபடோமியா நாகரிகம். இது 6500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

சிந்துவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணிக்கற்களைப் (carnelian) பயன்படுத்தினர்.

சிந்துவெளி மக்களுக்கு இரும்பின் பயன் பற்றி தெரியாது.

**உங்களுக்குத் தெரியுமா?**

முதல் எழுத்து வடிவம் சுமேரியர்களால் உருவாக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறை – தொல்லியல் ஆய்வாளர்களுக்கான தரப்படுத்தப்பட்ட முறை**

கார்பனின் கதிரியக்க ஐசோடோப் ஆன கார்பன்$_{14}$ ஐப் பயன்படுத்தி, ஒரு பொருளின் வயதை அறியும் முறை கதிரியக்க கார்பன் முறை அல்லது கார்பன் $_{14}$ முறை என்று அழைக்கப்படுகிறது.

*மெஹெர்கர் – சிந்து வெளி நாகரிகத்துக்கு முன்னோடி*

மெஹெர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம் ஆகும். இது பாகிஸ்தான் நாட்டில் பலுச்சிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது தொடக்க கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்ட இடங்களுள் ஒன்று. மக்கள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டதற்கான சான்று இங்கு கிடைத்துள்ளது. பொ.ஆ.மு. 7000–ஐ ஒட்டிய காலத்திலேயே மெஹெர்கரில் நாகரிகத்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

குகையில் வாழ கற்றுக் கொண்ட குரோமக்னான்ஸ் மனிதர்கள் பிரான்சில் உள்ள லாஸ்காஸ் என்னுமிடத்தில் உள்ள குகைகளில் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இவர்களிடம் இறந்தவர்களை புதைக்கும் பழக்கம் இருந்தது.

புகார் துறைமுக நகரம்
மதுரை வணிக நகரம்
காஞ்சி கல்வி நகரம் ஆகும்

சோழநாடு – சோறுடைத்து,
பாண்டியநாடு – முத்துடைத்து ,
சேரநாடு – வேழமுடைத்து,
தொண்டைநாடு – சான்றோருடைத்து.

உங்களுக்குத் தெரியுமா?

*கே.வி.டி (கொற்கை – வஞ்சி – தொண்டி) வளாகம்:* பாகிஸ்தானில் இன்றும் கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை, உறை, கூடல்கர் என்ற பெயர் கொண்ட இடங்கள் உள்ளன. கொற்கை, பூம்புகார் போன்ற சங்க கால நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் பெயர்களுடன் உள்ள இடங்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளன. ஆப்கானிஸ்தானில் உள்ள ஆறுகளான காவ்ரி, பொருண்ஸ் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஆறுகளான காவிரி வாலா மற்றும் பொருனை ஆகிய பெயர்கள் தமிழ்ச் சொற்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.

**வேதகாலம்** – இந்திய வரலாற்றில் கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 600 காலகட்டம். 'வேதங்கள்' என்பதில் இருந்து இப்பெயரைப் பெற்றது.

**சபா** – மூத்தோர்களைக் கொண்ட மன்றம்.

**சமிதி** – மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு.

பாலி – இது ஒரு வரி ஆகும். ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் 1/6 பங்கை இவ்வரியாகச் செலுத்த வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithc Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, lith என்றால் 'கல்' என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் பெரிப்ளிஸ் குறிப்பிடுகிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

**நான்கு வேதங்கள்:**
ரிக், யஜுர், சாம, அதர்வன.

மோட்சம் என்பது பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுதல் ஆகும்.

உங்களுக்குத் தெரியுமா?

### அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண்முறை (Slash and Burn Agriculture)

இம்முறையில் நிலத்தின் மீதுள்ள மரங்கள் மற்றும் செடி, கொடிகள் அனைத்தும் வெட்டப்பட்டு எரிக்கப்படும். அந்நிலத்தில் குறுகிய காலகட்டத்திற்கு வேளாண்மை செய்து அதன்பின் அந்நிலம் கைவிடப்படும். பின்னர் மக்கள் மற்றொரு இடத்தில் இதே போன்று வேளாண்மை செய்யத் தொடங்குவர்.

### வேதகாலத்தை வகைப்படுத்துதல்

வேதகாலத்தின் இரண்டு கட்டங்கள்

- தொடக்க வேத காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 1000
- பின்வேதகாலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 – 600

| காலம், பரப்பு, சான்றுகள் | |
|---|---|
| புவியியல் பரப்பு | வட இந்தியா |
| காலப்பகுதி | இரும்புக் காலம் |
| கால அளவு | கி.மு (பொ.ஆ.மு) 1500– 600 வரை |
| சான்றுகள் | வேதகால இலக்கியங்கள் |
| நாகரிகத்தின் இயல்பு | கிராம நாகரிகம் |

இடை வழி (நடுவு நிலை வழி): உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

### இந்தியாவின் தேசிய குறிக்கோள்

"சத்யமேவ ஜெயதே" ("வாய்மையே வெல்லும்") என்ற வாக்கியம் முண்டக உபநிடதத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

### சிந்துவெளி நாகரித்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி உனக்குத் தெரியுமா?



பழங்கால எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் அக்கால நாகரிகத்தை நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால் சிந்துவெளி எழுத்துகளை இன்று வரை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, சிந்துவெளி மக்களின் வாழ்க்கை முறையை அறிவதற்கு வேறு ஏதாவது சான்றுகளையே நாம் நோக்க வேண்டி உள்ளது.

உடை

- பொதுவாக பருத்தி ஆடைகளே பயன்பாட்டில் இருந்தன.
- அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நூலைச் சுற்றி வைப்பதற்கான சுழல் அச்சுக்கள் மூலம் அவர்கள் நூற்கவும் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.
- கம்பளி ஆடைகளும் உபயோகப்படுத்தப்பட்டன.

### அன்பும் அமைதியும்



- குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன.
- சிந்துவெளி மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஏனென்றால் அவர்களிடம் படை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. மேலும் சில ஆயுதங்கள் மட்டுமே அங்கிருந்து கிடைத்துள்ளன.
- அவர்கள் தங்களின் மேம்பட்ட நிலையை அவர்களுடைய ஆடைகள், விலைமதிப்பற்ற நகைகள் மற்றும் மேம்பட்ட நகர வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தினர்.

### அணிகலன்கள்



- ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருக்கின்றனர்.
- கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள், மோதிரங்கள், காதணிகள் மற்றும் காலணிகள் முதலியவற்றையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டிருந்தன.





**தெளிந்து தெரிவோம்**

### வலிமைமிக்க பேரரசர் அசோகர்

பண்டைய இந்திய அரசர்களில் பேரும் புகழும் பெற்ற அரசர் அசோகர் ஆவார். இவரது ஆட்சியில் தான் புத்த மதம் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது. கலிங்கப் போருக்குப் பின் பல உயிர்கள் மடிவதைக் கண்டு வருந்தி, போர் தொடுப்பதைக் கைவிட்டார். அதற்குப் பிறகு புத்த சமயத்தைத் தழுவி, அமைதியையும் அறத்தையும் பரப்புவதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார். பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய சேவை முன் மாதிரியாக விளங்கியது. வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர் அசோகர்தான். உலகிலேயே முதன்முதலாக விலங்குகளுக்கும் தனியே மருத்துவமனை அமைத்துத் தந்தவரும் ஆவார். இன்றும் அவர் உருவாக்கிய சாலைகளை நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறோம். நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள முத்திரையிலிருந்தே பெறப்பட்டது. இதிலிருந்து அசோகரது முக்கியத்துவத்தை நாம் அறியலாம். ஆனால், இத்தகைய சிறப்புகளைக் கொண்ட அசோகர் குறித்த தகவல்கள், வரலாற்றின் பக்கங்களில் 20 ஆம் நூற்றாண்டு வரை இடம்பெறவே இல்லை. ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களான வில்லியம் ஜோன்ஸ், ஜேம்ஸ் பிரின்செப், அலெக்ஸாண்டர் கன்னிங்காம் போன்றவர்கள் வரலாற்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள்தான் மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகுக்கு கொண்டு வந்தன.

இதன் அடிப்படையில் சார்லஸ் ஆலன் எனும் ஆங்கிலேய எழுத்தாளர் அசோகர் குறித்த அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்துத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அந்த நூலின் பெயர் The Search for the India's Lost Emperor. அதற்குப் பிறகு பல ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகள் மூலம் அசோகரின் பொற்கால ஆட்சி குறித்த செய்திகளை வெளிக்கொணர்ந்தனர். இதற்கான சான்றுகள் சாஞ்சி ஸ்தூபியிலும், சாரநாத் கற்றூணிலும் காணப்படுகின்றன. இவை அசோகரின் பெருமையை நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன.

9DGK92







### அவர்களை நிர்வகித்தது யார்?

நகரகத் திட்டமிடலை நிர்வகிக்கவும், வணிகத்தை மேம்படுத்தவும், நகரத்தில் அமைதியை நிலைநாட்டவும், வடிகால் அமைப்பைப் பராமரிக்கவும், ஓர் அதிகார மையம் இருந்து இருக்கவேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றனர்.

### தொழில்



- சிந்துவெளி மக்களின் முதன்மையான தொழில் பற்றி எதுவும் தெரியவில்லை, எனினும் வேளாண்மை, கைவினைப் பொருட்கள் செய்தல், பானை வனைதல், அணிகலன்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர் என தெரிகிறது.
- அங்கு வர்த்தகர்கள், வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களும் இருந்துள்ளனர்.
- கால்நடை வளர்ப்பும் அவர்களது தொழிலாக இருந்தது.
- அவர்கள் சக்கரத்தின் பயனையும் அறிந்திருந்தனர்.



### மட்பாண்டங்கள்

- மட்பாண்டங்களைச் சக்கரங்கள் கொண்டு உருவாக்கினர். அவை தீயிலிட்டுச் சுடப்பட்டன.
- மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணத்தில் இருந்தன. அதில் கருப்பு வண்ணத்தில் அழகிய வேலைப்பாடுகளைச் செய்தனர்.
- அங்கு கிடைத்த உடைந்த பானைத் துண்டுகள் விலங்குகளின் உருவங்களுடனும், வடிவியல் வடிவமைப்புகளுடனும் காணப்படுகின்றன.



### சமய நம்பிக்கை

- சிந்துவெளி மக்களின் வழிபாடு மற்றும் அவர்களின் மத நடைமுறைகள் பற்றி அறிய எந்த ஓர் ஆதாரமும் கிடைக்க வில்லை .
- அங்கு கிடைக்கப்பெற்ற பெண் சிலைகள் மூலம் சிந்து வெளி மக்களிடையே தாய் தெய்வ வழிபாடு இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது .

**உங்களுக்குத் தெரியுமா?**



மொஹெஞ்ச–தாரோவில் வெண்கலத்தால் ஆன இந்த சிறிய பெண் சிலை கிடைத்தது. 'நடன மாது' என்று குறிப்பிடப்படுகிற இந்தச் சிலையைப் பார்த்த சர் ஜான் மார்ஷல் "முதலில் இந்தச் சிலையை நான் பார்த்த பொழுது இது வரலாற்றிற்கு முந்தைய காலத்தின் உருவாக்க முறையைச் சார்ந்தது என்று நம்புவதற்குக் கடினமாக இருந்தது. ஏனெனில் இதுபோன்று உருவாக்கம் பண்டைய மக்களுக்கு கிரேக்க காலம் வரை தெரியவில்லை. இவை ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என நினைத்தேன். இச்சிலைகள் அக்கால கட்டத்துக்கு உரியதாகவே இருந்தன" என்றார்.

## தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்

புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும். ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும். இந்த பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.



முதுமக்கள் தாழிகள் இவை இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண் பானைகள் ஆகும்.

### கற்திட்டைகள் (Dolmens):



பாண்டவன் திட்டு, தருமபுரி

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்) கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்) நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.



புலிமான் கோம்பை
கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டு

### நடுகற்கள்

இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும் தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும். திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

சமணம் (Jain) என்னும் சொல் ஜினா (Jina) என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

மகாவீரரின் தலைமைச் சீடரான கௌதமசுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். அதன் பெயர் ஆகம சித்தாந்தம் எனப்படும்.

உங்களுக்குத் தெரியுமா?

### கர்மா அல்லது கர்மவினை என்றால் என்ன?

இப்பிறவியில் ஒருவர் செய்யும் செயல்களே அவருடைய/ அவளுடைய இப்பிறவியின் பிற்பகுதி வாழ்க்கையையும், அடுத்த பிறவியில் அவர் வாழப்போகும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்ற நம்பிக்கை ஆகும்.

### பௌத்த மாநாடுகள் – இடம்

| | | |
|---|---|---|
| முதலாவது | – | இராஜகிருகம் |
| இரண்டாவது | – | வைசாலி |
| மூன்றாவது | – | பாடலிபுத்திரம் |
| நான்காவது | – | காஷ்மீர் |

உங்களுக்குத் தெரியுமா?

பேராணை – அரசரால் அல்லது உயர் பதவியில் இருப்பவரால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது பிரகடனம் ஆகும்.

இடை வழி (நடுவு நிலை வழி): உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | வர்த்தமானர் |
| பிறப்பு | – | வைசாலிக்கு அருகேயுள்ள குந்தகிராமம், பீகார் |
| பெற்றோர் | – | சித்தார்த்தர், திரிசலா |
| இறப்பு | – | பவபுரி–பீகார் |



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | சித்தார்த்தா |
| பிறப்பு | – | லும்பினி தோட்டம் நேபாளம் |
| பெற்றோர் | – | சுத்தோதனா, மாயாதேவி |
| இறப்பு | – | குசி நகரம், உ.பி |

**சுவரோவியங்கள்**

மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள அஜந்தா குகைகளின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதக கதைகளை சித்தரிக்கின்றன.



'**முடியாட்சி**' அரசு என்பது ஒரு நிலப்பகுதியை அரசனோ அல்லது அரசியோ ஆள்வதாகும். முடியாட்சி முறை அரசில் ஒரு குடும்பம் நீண்ட காலம் ஆட்சி செய்யும்போது அது அரச வம்சமாக மாறுகிறது. இந்த அரசுகள் வைதீக வேத மரபுகளைப் பின்பற்றின.

**16 மகாஜனபதங்கள்**

அங்கம், மகதம், வஜ்ஜி, காசி, மல்லம், குரு, கோசலம், அவந்தி, சேதி, வத்சம், பாஞ்சாலம், மத்சயம், சூரசேனம், அஸ்மகம், காந்தாரம் மற்றும் காம்போஜம்.

**யக்ஷன்** என்பது நீர், வளம், மரங்கள், காடுகள், காட்டுச் சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் ஆவார். **யக்ஷி** என்பது யக்ஷாவின் பெண்வடிவமாகும்.

| பண்டைய பெயர் | தற்போதைய பெயர் |
|---|---|
| ராஜகிரகம் | ராஜ்கிர் |
| பாடலிபுத்திரம் | பாட்னா |
| கலிங்கா | ஒடிசா |

"அசோகர் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல இன்று வரை ஒளிர்கிறார்"

H.G. வெல்ஸ் – வரலாற்றறிஞர்

**மெகஸ்தனிஸ்**

கிரேக்க ஆட்சியாளர் செலுக்கஸ் நிகேட்டரின் தூதுவராக, சந்திரகுப்த மௌரிய அரசவையில் இருந்தவர். பதினான்கு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார். அவர் எழுதிய நூலின் பெயர் இண்டிகா. மௌரியப் பேரரசைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு முக்கியச் சான்றாகும்.

**அசோகர் கல்வெட்டுகளில் எழுத்துமுறை**

சாஞ்சி – பிராமி

காந்தகார் – கிரேக்கம் மற்றும் அராமிக்

வடமேற்குப் பகுதிகள் – கரோஸ்தி

**நாளந்தா–யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னம்**

நாளந்தா பண்டைய மகத நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஆகும். குப்தர்களின் காலத்தில் அது மிகப் புகழ் பெற்ற கல்வி மையமாகத் திகழ்ந்தது. நாளந்தா என்னும் சமஸ்கிருதச் சொல் நா+அலம்+தா என்ற மூன்று சமஸ்கிருத சொற்களின் இணைப்பில் உருவானது. இதன் பொருள் 'வற்றாத அறிவை அளிப்பவர்' என்பதாகும்.

ருத்ரதாமனின் ஜுனாகத்/கிர்னார் கல்வெட்டு சுதர்சனா ஏரி எனும் நீர்நிலை உருவாக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் தொடங்கப்பட்டது. அசோகரின் காலத்தில் பணிகள் நிறைவு பெற்றன.

'**கண**' என்னும் சொல் 'சரிசமமான சமூக அந்தஸ்தைக் கொண்ட மக்களைக் குறிக்கும். 'சங்கா' என்றால் 'மன்றம்' என்று பொருள். கண சங்கங்கள் சிறிய நிலப்பகுதியில் மேட்டுக்குடி மக்களைக் கொண்ட குழுவால் ஆளப்பட்டது. கண சங்கங்கள் சமத்துவ மரபுகளைப் பின்பற்றின.

## மௌரியப் பேரரசு

**சான்றுகள்**

| | |
|---|---|
| தொல்லியல் சான்றுகள் | முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள் |
| கல்வெட்டுகள் | அசோகரின் கல்வெட்டுப் பேராணைகள், ஜூனாகத் கல்வெட்டு ஆகியவை. |
| மதச்சார்பற்ற இலக்கியங்கள் | கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்<br>விசாகதத்தரின் முத்ராராட்சஷம்<br>மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் |
| மதம் சார்ந்த இலக்கியங்கள் | சமண, பௌத்த நூல்கள், புராணங்கள் |
| வெளிநாட்டுச் சான்றுகள் | தீபவம்சம், மகாவம்சம், இண்டிகா. |

உங்களுக்குத் தெரியுமா?

### சிங்கமுகத் தூண்

சாரநாத்திலுள்ள அசோகருடைய தூணின் சிகரப் பகுதியில் அமைந்துள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், வட்ட வடிவ அடிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சக்கரம் இந்தியாவின் தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



## மௌரியப் பேரரசு – இந்தியாவின் முதல் பேரரசு

| | |
|---|---|
| **தலைநகர்** | பாடலிபுத்திரம் (தற்போதைய பாட்னா) |
| **அரசு** | முடியாட்சி |
| **வரலாற்றுக் காலம்** | ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு.) 322 முதல் 187 வரை |
| **முக்கிய அரசர்கள்** | சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர். |

உங்களுக்குத் தெரியுமா?

### பாடலிபுத்திரத்தின் பிரம்மாண்டம்

மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரான பாடலிபுத்திர நகருக்கு 64 நுழைவு வாயில்களும் 570 கண்காணிப்பு கோபுரங்களும் இருந்தன.

ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) தாமோதரம் பிள்ளை (யாழ்ப்பாணம்) உ.வே. சாமிநாத அய்யர் ஆகியோர் அரும்பாடுபட்டு பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் செவ்வியல் இலக்கியங்களையும் பண்டைக்காலத் தமிழ் நூல்களையும் மீட்டு வெளியிடுவதில் பல ஆண்டுகளைச் செலவிட்டனர்.


### முக்கியத்துவம் மிகுந்த சேர அரசர்கள்

- உதயன் சேரலாதன்
- இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
- சேரன் செங்குட்டுவன்
- சேரல் இரும்பொறை



சீனப்பெருஞ்சுவர்

இது பழங்காலத்தில் கட்டப்பட்ட தொடர்ச்சியான பல கோட்டைச் சுவராகும் குன்–சி–ஹங் என்னும் பேரரசர் தனது பேரரசின் வட எல்லையை பாதுகாப்பதற்காக கி.மு.(பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சுவர்களை இணைத்தார்.



ஒலிம்பியாவின் ஜியஸ் (zeus) கோயில்

கிரிஸ் நாட்டில் உள்ள ஒலிம்பியாவில் கி.மு (பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் ஜியஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.

**மூவேந்தர்கள் சூட்டிக்கொண்ட பட்டங்கள்**

| சேரன் | சோழன் | பாண்டியன் |
|---|---|---|
| ஆதவன் | சென்னி | மாறன் |
| குட்டுவன் | செம்பியன் | வழுதி |
| வானவன் | கிள்ளி | செழியன் |
| இரும்பொறை | வளவன் | தென்னர் |

### முக்கியத்துவம் வாய்ந்த பாண்டிய அரசர்கள்

- நெடியோன்
- நன்மாறன்
- முதுகுடுமிப் பெருவழுதி
- நெடுஞ்செழியன்

**கல்லணை**

இது கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும். பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டது. கல்லணை கட்டப்பட்டபோது 69,000 ஏக்கர் நிலத்திற்கு அது நீர்ப்பாசன வசதியை வழங்கியது.

DUXHKR



இந்திய வணிகர்களால் ரோமப் பேரரசுக்கு விநியோகம் செய்யப்பட்ட பட்டு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. ரோமப்பேரரசர் ஆரிலியன் அந்தபட்டு, எடைக்கு எடை தங்கம் கொடுத்துப் பெற தகுதியானது என அறிவித்தார்.

**மலபார் கருமிளகு**

எகிப்து அரசன் இரண்டாம் ராம்செஸின் பதப்படுத்தப்பட்ட உடல் திறக்கப்பட்டபோது, தொல்லியல் அறிஞர்கள் அவருடைய நாசியினுள்ளும் அடிவயிற்றிலும் கருமிளகுக்கதிர் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். (இவ்வாறு பதப்படுத்தி உடலைப் பாதுகாப்பது பண்டைய நாட்களில் பின்பற்றப்பட்ட முறையாகும்).

**முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள்**



- இளஞ்சேட்சென்னி
- கரிகால் வளவன்
- கோச்செங்கணான்
- கிள்ளிவளவன்
- பெருநற்கிள்ளி

சமஸ்கிருத மொழியின் இரண்டாவது இலக்கண அறிஞரான பதஞ்சலியைப் புஷ்யமித்திரர் ஆதரித்தார்.

லிச்சாவி பழமையான கன சங்கங்களில் ஒன்றாகும். அதனுடைய ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாள நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

**சங்க காலப் பெண்பாற்புலவர்கள்**

அவ்வையார், வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார், ஆதி மந்தியார், பொன்முடியார்.

| மூவேந்தர் | மாலை | துறைமுகம் | தலைநகர் | சின்னம் |
|---|---|---|---|---|
| சேரர் | பனம்பூ மாலை | முசிறி / தொண்டி | வஞ்சி / கரூர் |  வில், அம்பு |
| சோழர் | அத்திப்பூ மாலை | புகார் | உறையூர் / புகார் |  புலி |
| பாண்டியர் | வேப்பம்பூ மாலை | கொற்கை | மதுரை |  இரண்டு மீன்கள் |

| திணை | நிலம் | தொழில் | மக்கள் | கடவுள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | வேட்டையாடுதல்/ சேகரித்தல் | குறவர், குறத்தியர் | முருகன் |
| முல்லை | காடும், காடு சார்ந்த இடமும் | ஆநிரை மேய்த்தல் | ஆயர், ஆய்ச்சியர் | மாயோன் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வேளாண்மை | உழவன், உழத்தியர் | இந்திரன் |
| நெய்தல் | கடலும் கடல் சார்நத பகுதியும் | மீன்பிடித்தல்/ உப்பு உற்பத்தி | பரதவர், நுளத்தியர் | வருணன் |
| பாலை | வறண்ட நிலம் | வீரச் செயல்கள் | மறவர், மறத்தியர் | கொற்றவை |


**முசிறி – முதல் பேரங்காடி**

ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு (Natural History) எனும் நூலில் முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி' எனக் குறிப்பிட்டுள்ளார். ரோமானியரின் குடியிருப்பு இருந்த முசிறியில் அகஸ்டஸ் கடவுளுக்காகக் கோவிலொன்று கட்டப்பட்டிருந்தது.

கி.மு. (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பிரஸ் இலையில் எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் (வியன்னாவிலுள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது) அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த வணிகர் ஒருவருக்கும் முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வணிக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பார்குத், சாஞ்சி ஆகிய இடங்களிலுள்ள பௌத்த ஸ்தூபிகளில் காணப்படுவது போல ஸ்தூபிகளின் சுற்றுச்சுவர்களிலும் வாயில்களிலும் கற்களுக்குப் பதிலாக மரத்தைப் பயன்படுத்தும் முறை சுங்கர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது.

கலிங்க அரசர் காரவேலர் சுங்க அரசர்களின் சமகாலத்தவர் ஆவார். காரவேலர் பற்றிய செய்திகளை நாம் ஹதிகும்பா கல்வெட்டிலிருந்து பெறுகிறோம்



ஹதிகும்பா யானை குகை கல்வெட்டு

உலகப் புகழ்பெற்ற புத்தரின் ஆளுயரச் சிற்பங்கள் பாமியான் பள்ளத்தாக்கிலுள்ள மலைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இம்மலைகள் பண்டைய இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் அமைந்திருந்தது. (தற்போது இப்பகுதி ஆப்கானிஸ்தானின் மையத்தில் உள்ளது. அண்மையில் இவற்றைத் தாலிபான்கள் உடைத்து நொறுக்கினர்.) இச்சிற்பங்கள் மௌரியர் காலத்துக்கு பின்னரான காந்தாரக் கலைப்பள்ளியைச் சேர்ந்த அர்ப்பணிப்பு மிக்க கலைஞர்களால் திடமான பாறைகளில் செதுக்கப்பட்டவை ஆகும்.



பாமியான் பள்ளத்தாக்கிலுள்ள புத்தரின் சிற்பம்

அஸ்வகோஷர் 'புத்தசரிதம்' என்னும் முதல் சமஸ்கிருத நாடகத்தின் போற்றப்படும் ஆசிரியர் ஆவார்.

**இந்தோ–பார்த்திய (பகலவர்) அரசர்கள்**

இந்தோ–கிரேக்கர், இந்தோ–சித்தியர் ஆகியோருக்குப் பின்னர் இந்தோ–பார்த்தியர் வந்தனர். அதனைத் தொடர்ந்து இவர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பாதியில் குஷாணர்களால் தோற்கடிக்கப்பட்டனர். இந்தோ–பார்த்திய அரசு அல்லது கோன்டோபரித் வம்சம் கோண்டோ பெர்னஸால் நிறுவப்பட்டது. இந்தோ–பார்த்தியர் ஆட்சி செய்த பகுதி காபூல், காந்தாரா ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். கோண்டோ பெர்னெஸ் எனும் பெயர் கிறித்துவ உபதேசியார் புனித தாமஸிடன் தொடர்புடையதாகும். கிறித்துவ மரபின்படி புனித தாமஸ், கோண்டோ பெர்னெஸின் அரசவைக்கு வந்து கிறித்துவத்திற்கு அவரை மதம் மாற்றினார்.

**இந்தோ–கிரேக்க அரசர்கள்**



டெமிட்ரியஸ்




**மினான்டர்**

முதலாம் டெமிட்ரியஸ்: இவர் கிரேக்கோ–பாக்டீரிய அரசர் யுதி டெமஸ் என்பாரின் மகனாவார். இவர் கி.மு.(பொ.ஆ.மு) 294 முதல் 288 வரை மாசிடோனியாவின் மன்னராக இருந்தார். டெமிட்ரியஸ் சதுர வடிவிலான இரு மொழி வாசகங்களைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டார் என்பதை நாணயச் சான்றுகள் உறுதி செய்கின்றன. நாணயத்தின் தலைப் பகுதியில் கிரேக்க மொழியும் பூப்பகுதியில் கரோஷ்தி மொழியும் இடம் பெற்றுள்ளன. டெமிட்ரியஸ் எனும் பெயரில் மூவர் இருந்துள்ளனர். எனவே, இம்மூவருள் யார் கி.மு. (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் தொடங்கும் யவன சகாப்தத்தைத் தொடங்கிவைத்தவர் என்பதை வரலாற்றுஅறிஞர்களால் முடிவு செய்ய முடியவில்லை.

**மினான்டர்:** இவர் நன்கறியப்பட்ட இந்தோ–கிரேக்க அரசர்களில் ஒருவராவார். வடமேற்குப் பகுதியில் பெரியதொரு அரசை இவர் ஆண்டதாகக் கூறப்படுகிறது. இவர் வெளியிட்ட நாணயங்கள் பரந்து விரிந்த பகுதியில் கிடைக்கின்றன. காபூல் பள்ளத்தாக்கில் தொடங்கி சிந்துநதி கடந்து மேற்கு உத்தரப் பிரதேசம் வரையிலான பகுதிகளில் கிடைத்தன. மிலிந்த பன்கா எனும் நூல் ஒன்று உள்ளது. பாக்டீரிய அரசன் மிலிந்தா என்பவருக்கும் பௌத்த அறிஞர் நாகசேனாவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலே அந்நூலாகும். இந்த மிலிந்தாவே மினான்டர் என அடையாளப்படுத்தப்படுகிறது. மினான்டர் பௌத்தராக மாறி பௌத்தத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றியதாகக் கருதப்படுகிறது.

## உலகம் அந்நாளில்

குஷாணப் பேரரசு ஜூலியஸ் சீசர் வாழ்ந்த ரோமானியக் குடியரசின் இறுதி நாட்களின் சமகாலத்தியதாகும். குஷாணப் பேரரசர் அகஸ்டஸ் சீசரின் அவைக்கு ஒரு பெரும் தூதுக் குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.


அகஸ்டஸ் சீசர்

### உலகம் அந்நாளில்



பொ.ஆ.மு 2500 ல் குஃபு மன்னனால் சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்ட கிசே பிரமிடு.(ஒவ்வொன்றும் 15 டன் எடை உடையது)



மெசபடோமியா (சுமேரியர் காலம்) ஊர் நம்மு என்ற அரசனால் சின் என்ற சந்திர கடவுளுக்கு கட்டப்பட்ட ஊர் ஜிகரட்.



அபு சிம்பல் – எகிப்து அரசன் இரண்டாம் ராமெசிஸ் என்பவரால் கட்டப்பட்ட இரட்டைக் கோயில்கள் உள்ள இடம்.

**பிரசஸ்தி/மெய்க்கீர்த்தி:** பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் 'புகழ்வதாகும்'. அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்துபாடி அவர்தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர். இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.

சமுத்திரகுப்தர் ஒரு விஷ்ணு பக்தராவார். போர்களில் வெற்றி பெற்றதன் நினைவாக நடத்தப்படும் வேதகாலச் சடங்கான குதிரைகளைப் பலியிடும் வேள்வியைச் சமுத்திரகுப்தர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார். அவர் தங்க நாணயங்களை வெளியிட்டார். அவற்றுள் ஒன்றில் அவர் வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் மிகச் சிறந்த படையெடுப்பாளர் மட்டுமல்ல; கவிதைப் பிரியரும் இசைப் பிரியருமாவார். அதனால் 'கவிராஜா' எனும் பட்டம் பெற்றார்.

இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ மேகவர்மன் எனும் பௌத்த அரசன் சமுத்திரகுப்தரின் சமகாலத்தவராவார்.

குப்தர்களால் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள்: இரும்பு, தங்கம், தாமிரம், தகரம், ஈயம், பித்தளை, செம்பு, மணி வெண்கலம், மைக்கா, மாங்கனீசு, சிகப்புச் சுண்ணம் ஆகியவையாகும்.

ஹர்ஷர் சீனப்பயணி யுவான் சுவாங்கை முதன்முதலாக ராஜ்மகாலுக்கு (ஜார்கண்ட்) அருகேயுள்ள கஜன்கலா என்ற இடத்தில் சந்தித்தார்.

| விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள் | |
|---|---|
| காளிதாசர் | சமஸ்கிருதப் புலவர் |
| ஹரிசேனர் | சமஸ்கிருதப் புலவர் |
| அமர சிம்ஹர் | அகராதியியல் ஆசிரியர் |
| தன்வந்திரி | மருத்துவர் |
| காகபானகர் | சோதிடர் |
| சன்கு | கட்டடக் கலை நிபுணர் |
| வராகமிகிரர் | வானியல் அறிஞர் |
| வராச்சி | இலக்கண ஆசிரியர் மற்றும் சமஸ்கிருதப் புலவர் |
| விட்டல்பட்டர் | மாயவித்தைக்காரர் (Magician) |

**பாகியான்**



இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில், சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி பாகியான் இந்தியாவிற்கு வந்தார். அவருடைய பயணக் குறிப்புகள் குப்தர் காலத்து மக்களின் சமூக– பொருளாதார, மத, ஒழுக்க நிலைகள் பற்றிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன. பாகியான் கூற்றுப்படி மகதத்து மக்கள் மகிழ்ச்சியோடும் செழிப்போடும் வாழ்ந்தனர். கடுமையான தண்டனையின்றி நீதி வழங்கப்பட்டது. மரணதண்டனை வழங்கப்படவில்லை. கயா பாழடைந்திருந்தது. கபிலவஸ்து காடாகியிருந்தது. ஆனால் பாடலிபுத்திரத்தில் மக்கள் செல்வத்தோடும் செழிப்போடும் வாழ்ந்தனர்.

**இரண்டாம் சந்திரகுப்தரின் பட்டப் பெயர்கள்:**

விக்கிரமாதித்தியர், நரேந்திர சந்திரர், சிம்ம சந்திரர், நரேந்திர சிம்மர், விக்கிரம தேவராஜர், தேவ குப்தர், தேவஸ்ரீ

| சிரேஸ்தி | சார்த்தவாகா |
|---|---|
| சிரேஸ்தி பிரிவைச் சார்ந்த வணிகர்கள் ஓரிடத்தில் நிலையாக இருந்து வணிகம் செய்தவர்கள் | சார்த்தவாகா வணிகர்கள் எருது பூட்டிய வண்டிகளில் சரக்குகளை ஏற்றி பல்வேறு இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தவர்கள். |

| குப்தர் காலத்தில் நிலங்களை வகைப்படுத்துதல் | |
|---|---|
| க்ஷேத்ரா | வேளாண்மைக்கு உகந்த நிலங்கள் |
| கிலா | தரிசு நிலங்கள் |
| அப்ரகதா | வனம் அல்லது காட்டு நிலங்கள் |
| வஸ்தி | குடியிருப்பதற்கு உகந்த நிலங்கள் |
| கபத சரகா | மேய்ச்சல் நிலங்கள் |

**நாளந்தா பல்கலைக்கழகம்**



நாளந்தா பல்கலைக்கழகம்

- நாளந்தா பல்கலைக்கழகம் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் குப்தப் பேரரசின் ஆதரவில் தழைத்தோங்கியது. பின்னர் கன்னோசியைச் சேர்ந்த பேரரசர் ஹர்ஷரின் ஆதரவில் சிறப்புற்றது
- நாளந்தாவில் பௌத்தத் தத்துவமே முக்கியப் பாடப்பிரிவாக இருந்தது. யோகா, வேத இலக்கியங்கள், மருத்துவம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன
- அப்பல்கலைக்கழகத்தில் யுவான்–சுவாங் பௌத்த தத்துவத்தைப் பற்றிப் படிப்பதில் பல ஆண்டுகள் செலவழித்தார்
- அந்த வளாகத்தில் எட்டு மகாபாடசாலைகளும் மூன்று மிகப்பெரிய நூலகங்களும் இருந்தன
- நாளந்தா பல்கலைக்கழகம் பக்தியார்கில்ஜி என்பாரின் தலைமையில் வந்த மம்லுக்குகள் என அழைக்கப்பட்ட துருக்கிய இஸ்லாமிய அடிமை வீரர்களால் அழித்துத்தரைமட்டம் ஆக்கப்பட்டது
- நாளந்தா யுனெஸ்கோவின் உலகப்பாரம்பரியச் சின்னமாகும்

ஹர்ஷர் சீனப்பயணி யுவான் சுவாங்கை முதன்முதலாக ராஜ்மகாலுக்கு (ஜார்கண்ட்) அருகேயுள்ள கஜன்கலா என்ற இடத்தில் சந்தித்தார்.

'புனித யாத்ரீகர்களின் இளவரசன்' என்றழைக்கப்படும் யுவான் சுவாங், ஹர்ஷரின் ஆட்சியின்போது இந்தியாவுக்கு வந்தார். சி–யூ–கி எனும் அவரது பயணக் குறிப்புகள் அடங்கிய ஆவணங்களின் தொகுப்பு, ஹர்ஷர் காலத்து இந்தியாவின் சமூக பொருளாதார, மத, பண்பாட்டு நிலைகள் குறித்து விரிவான செய்திகளை வழங்குகிறது. ஹர்ஷர் ஒரு பௌத்தராக இருந்தபோதும், பிரயாகையில் நடைபெற்ற மாபெரும் கும்பமேளா விழாவில் கலந்துகொள்ளச் சென்றார் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.



யுவான் சுவாங்

கன்னோசி பௌத்தப் பேரவையில் 20 அரசர்கள் பங்கேற்றனர். பெரும் எண்ணிக்கையில் பௌத்த, சமண, வேத அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். பௌத்த மடாலயம் ஒன்றில் புத்தரின் தங்கச் சிலையொன்று நிறுவப்பட்டது. புத்தரது மூன்றடி உயரம் கொண்ட வேறொரு சிலை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

பிரயாகைப் பேரவையில் ஹர்ஷர் தனது செல்வங்களைப் பௌத்தத் துறவிகளுக்கும் வேத வித்தகர்களுக்கும் ஏழைகளுக்கும் கொடையாக விநியோகித்தார். நான்கு நாட்கள் நடைபெற்ற அந்த நிகழ்வில் அனைத்து நாட்களிலும் அவர் பௌத்தத் துறவிகளுக்கு, அளவிடமுடியாத பரிசுகளை அள்ளிக் கொடுத்தார்.

**சான்றுகள்**

| | |
|---|---|
| **கல்வெட்டுகள்** | மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு |
| **செப்பேடுகள்** | காசக்குடிச் செப்பேடுகள் |

முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதி, சிறுத்தொண்டர் (63 நாயன்மார்களில் ஒருவர்) எனப் பிரபலமாக அறியப்பட்டார். பரஞ்சோதி வாதாபிப் படையெடுப்பில் பல்லவர் படைக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அதன் வெற்றிக்குப் பின்னர் மனமாற்றம் பெற்ற அவர் சிவ பக்தராக மாறினார்.

– பெரியபுராணம்

| | |
|---|---|
| **இலக்கியங்கள்** | மத்தவிலாசப் பிரகசனம், அவந்தி சுந்தரி கதை, கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், நந்திக் கலம்பகம். |
| **அயலவர் குறிப்புகள்** | யுவான் சுவாங்கின் குறிப்புகள் |

| அரசர்களின் பெயர்கள் | பட்டங்கள் |
|---|---|
| சிம்ம விஷ்ணு | அவனிசிம்மர் |
| முதலாம் மகேந்திரவர்மன் | சங்கீரணஜதி, மத்தவிலாசன், குணபாரன், சித்திரகாரப் புலி, விசித்திர சித்தன் |
| முதலாம் நரசிம்மவர்மன் | மாமல்லன், வாதாபி கொண்டான் |

## உலகம் அந்நாளில்

முதலாம் சந்திரகுப்தர், கான்ஸ்டாண்டிநோபிள் நகரை உருவாக்கிய ரோமானியப் பேரரசர் மகா கான்ஸ்டன்டைனின் சமகாலத்தவர் ஆவார்.

ஹர்ஷரின் காலப்பகுதி சீனாவின் தாங் அரசவம்சத்தின் தொடக்க காலப் பகுதியோடு இணைந்து செல்கிறது. சீனர்களின் தலைநகரான சியான் (Xi–an) மாபெரும் கலை மற்றும் கல்விக்கான மையமாகத் திகழ்ந்தது.



பேரரசர் மகா கான்ஸ்டன்டைன்



தாங் வம்ச அரசர்

# சாளுக்கியர்

**சான்றுகள்**

| | |
|---|---|
| கல்வெட்டுகள் | மங்களேசனின் வாதாபி குகைக் கல்வெட்டு, காஞ்சி கைலாசநாதர் கோவில் கல்வெட்டு, பட்டடக்கல் விருப்பாக்ஷா கோவில் கல்வெட்டு, முதலாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு. |
| அயலவர் குறிப்புகள் | யுவான் சுவாங்கின் குறிப்புகள் |

**அய்கோல் கல்வெட்டு:** இக்கல்வெட்டு அய்கோலிலுள்ள (பாகல்கோட் மாவட்டம், கர்நாடகா) மேகுதி கோவிலில் உள்ளது. இது சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு ஹர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.



**பட்டடக்கல்** – யுனெஸ்கோ உலகப்பாரம்பரியச் சின்னம். பட்டடக்கல் கர்நாடக மாநிலம் பாகல்கோட் மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர் ஆகும். அங்கு 10 கோவில்கள் உள்ளன. அவற்றில் நான்கு வட இந்திய பாணியான நாகாரா பாணியிலும் மற்றுமுள்ள ஆறு தென்னிந்திய திராவிட பாணியிலும் கட்டப்பட்டுள்ளன. விருப்பாக்ஷா கோவிலும் சங்கமேஸ்வரா கோவிலும் திராவிடப் பாணியிலும் பாப்பநாதர் கோவில் நாகாரா பாணியிலும் அமைந்துள்ளன. விருப்பாக்ஷா கோவில் காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணியில் காஞ்சிபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.



**ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்த காஃபிகானின் புகழ் பெற்ற கூற்று உங்களுக்குத் தெரியுமா?**
"விசுவாசம் உள்ளவராக இருத்தல், லாப நோக்கம் இன்மை, ஆபத்துக்கு அஞ்சாமை, ஒருதலைபட்சமாக இல்லாதிருத்தல், விருப்பு வெறுப்பின்றி இருத்தல், நண்பருக்கும் அந்நியருக்குமிடையே வேற்றுமை பாராமை, நேர்மையுடன் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆசிரியரின் கடமைகள்" என அவர் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| **வேளாண் வகை** | - | பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள். |
| **பிரம்மதேயம்** | - | பிராமணர்க்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள். |

| | | |
|---|---|---|
| **சாலபோகம்** | - | கல்விநிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள். |
| **தேவதானம்** | - | கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள். |
| **பள்ளிச் சந்தம்** | - | சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்கள். |




ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும். 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.



தபகத் – அராபியச் சொல் – தலைமுறைகள் அல்லது நூற்றாண்டுகள் என்று பொருள்.

தஜூக் – பாரசீகச் சொல் – சுயசரிதை எனப்பொருள்.

தாரிக் அல்லது தாகுயூக் – அராபியச் சொல் – இதன் பொருள் வரலாறு என்பதாகும்.

பிருதிவிராஜ் சௌகானின் மறைவுக்குப் பின் சிலநூற்றாண்டுகள் கழிந்த பின்பு சந்த் பார்தை எனும் கவிஞர் "பிருதிவிராஜ ராசோ" எனும் பெயரில் ஒரு நீண்ட காவியத்தை இயற்றினார். காவியம் கூறும் கதை பின்வருமாறு : கன்னோஜின் அரசனுடைய மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். அவள் தனது கணவனைத் தேர்வு செய்வதற்கெனச் சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏற்கெனவே பிருதிவிராஜனிடம் காதல்வயப்பட்டிருந்த இளவரசி அவரையே மணந்துகொள்ள விரும்பினாள். ஆனால் பிருதிவிராஜ் அவள் தந்தையின் எதிரியாவார். பிருதிவிராஜை அவமானப்படுத்தும் நோக்கத்தில் கன்னோஜின் அரசர் அவருக்கு அழைப்பு அனுப்பவில்லை. மேலும் பிருதிவிராஜ் சௌகானைப் போன்று ஒரு சிலை செய்து தனது அரச சபையின் வாயிலில் வாயிற்காப்போனைப் போல நிறுத்தி வைத்தார். கூடியிருந்தோரெல்லாம் அதிர்ச்சி அடையும் வண்ணம் இளவரசி அங்கிருந்த இளவரசர்களை மறுத்து பிருதிவிராஜின் சிலைக்கு மாலையிட்டுத் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினாள். சற்று தொலைவில் மறைந்திருந்த பிருதிவிராஜ் இளவரசியை அழைத்துக்கொண்டு குதிரையில் தப்பினார். பின்னர் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

மாளவத்தின் கூர்ஜரப் பிரதிகாரர்கள், தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்கள், வங்காளத்துப் பாலர்கள் ஆகிய மூவருள் ஒவ்வொருவரும் வளம் நிறைந்த கன்னோஜின் மீது அவர்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர். இதனால் ஏற்பட்ட நீண்ட, நெடிய மும்முனைப் போட்டியில் இம்மூன்று சக்திகளும் பலவீனமடைந்தன.

முதலாம் ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் சோழர்களுக்கும் கீழைச் சாளுக்கியர்களுக்கும் இடையிலான திருமணஉறவு தொடங்கியது. அவருடைய மகளான குந்தவை சாளுக்கிய இளவரசர் விமலாதித்தனை மணந்தார். அவர்களின் மகனான ராஜராஜ நரேந்திரன் முதலாம் ராஜேந்திரனின் மகளான அம்மங்கா தேவியை மணந்தார். அவர்களின் மகனே முதலாம் குலோத்துங்கன் ஆவார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய பின்னர் அரிகேசரி சுமார் 8000 சமணர்களைக் கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. எண்ணிக்கை மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பினும், சைவத்திற்கு மாறிய பின்னர் அரிகேசரியின் சமண எதிர்ப்புப் போக்கு சந்தேகத்திற்கு இடமில்லாதது.

பாண்டிய அரசு "செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என மார்க்கோ போலோ புகழாரம் சூட்டுகிறார். இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக்கற்களையும் முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார். தன்னுடைய பயணக் குறிப்புகளில் 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும் அரசர்களின் பலதார மணத்தையும் பதிவு செய்துள்ளார்.

## இஸ்லாமியக் கலை, கட்டடக்கலை



அலெய் தர்வாசா

உயர்வகுப்பைச் சேர்ந்த முஸ்லீம் பிரபுக்கள், அதிகாரிகள், வீரர்கள் ஆகியோர் தங்கள் குடியிருப்புக் கட்டடங்களை முதலில் நகரங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் கட்டிக் கொண்டனர். அவற்றைச் சுற்றிப் பேரரசு பாணியிலான அழகு மிக்க மசூதிகளை டெல்லி முஸ்லீம் ஆட்சியாளர்கள் கட்டினர். மசூதிகளும் மதரசாக்களும் (கல்வி நிலையங்கள்) கட்டட வடிவத்தில் வேறுபட்டிருந்தன. குரானிலுள்ள வரிகளைச் செதுக்கி நேர்த்தியாகவும் நளினமாகவும் அலங்கரிக்கப்பட்ட கதவுகளும், சுவர்களும் அக்கட்டடங்களுக்குத் தனித்தன்மையான தோற்றத்தை வழங்கின. அக்கட்டடங்களின் வடிவங்கள் பாரசீகப் பாணியிலும் அலங்கார வேலைப்பாடுகள் இந்தியப் பாணியிலும் அமைந்திருந்தன. எனவே அப்பாணி இந்தோ – சாராசானிக் கலைவடிவம் என அழைக்கப்பட்டது. குதுப்மினார். அலெய் தர்வாசா, குவ்வத் உல் இஸ்லாம் மசூதி, மோத்தி மசூதி, இல்துமிஷ், பால்பன் ஆகியோரின் கல்லறைகள், தௌலதாபாத், பிரோஷ் ஷா பாத் ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகள் என அனைத்தும் அப்பாணியில் அமைக்கப்பட்டனவாகும்.



தௌலதாபாத் கோட்டை

**சித்தூர் சூறையாடல் (1303)**

சித்தூரில் ராஜபுத்திரப் படைகளை அலாவுதீனின் படைகள் திணறடித்த நிலையில் தோல்வியடைந்துவிடுவோம் என்ற சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும் பெண்டிரும் தங்களது பண்டைய மரபின்படி "ஜவ்ஹர்" எனப்படும் சடங்கை நடத்தினர். இதன்படி ஆடவர் கோட்டையை விட்டு வெளியேறிப் போர்க்களத்தில் மாள்வர். பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்.

U7YXQ3




சித்தூர் கோட்டை

முதலாம் புக்கருடைய மகனான குமார கம்பணா மதுரை சுல்தானியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு அங்கு ஒரு நாயக்க அரசை நிறுவுவதிலும் வெற்றி பெற்றார். குமார கம்பணாவின் மனைவி கங்காதேவியால் எழுதப்பெற்ற மதுரா விஜயம் என்னும் நூலில் விஜயநகரப் பேரரசால் மதுரை கைப்பற்றப்பட்டதைத் தெளிவாக விளக்குகிறது.

'அமுக்தமால்யதா' தெலுங்கு இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. இது, பெரியாழ்வாரின் மகளான கோதை தேவியைப் பற்றியதாகும். கடவுள் ரங்கநாதருக்கு அணிவிப்பதற்காகத் தொடுக்கப்பட்ட மாலைகளை அவருக்குச் சூடுவதற்கு முன்பாக இவ்வம்மையார் சூடிக்கொள்வார். அமுக்தமால்யதா என்பதற்கு தான் அணிந்த பின்னர் கொடுப்பவர் எனப்பொருள்.

கிழக்குக் கர்நாடகத்தில், துங்கபத்ரா நதியின் கரையில் உள்ள விஜயநகரம் இருந்த இடம் தற்போது 'ஹம்பி' என அழைக்கப்படுகிறது. ஹம்பி சீர்குலைந்து இடிபாடுகளாகக் காணப்படுகிறது. யுனெஸ்கோ ஹம்பியை பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.

செங்கோட்டை



லால் குய்லா என்று அழைக்கப்படும் டெல்லியிலுள்ள 'செங்கோட்டை' முகலாயப் பேரரசர்களின் வாழ்விடமாகும். இது 1639 இல் பேரரசர் ஷாஜகானால் மதில்களால் சூழப்பெற்ற தனது தலைநகர் ஷாஜகானாபாத்தில் கட்டப்பட்ட அரண்மனையாகும், இக்கோட்டை சிவப்புநிறக் கற்களால் கட்டப்பட்டுள்ளதால் இது செங்கோட்டை என அழைக்கப்படுகிறது.

சத்ர (குடை) பதி (தலைவன் அல்லது பிரபு) எனும் சமஸ்கிருதச் சொல் அரசன் அல்லது பேரரசன் என்பதற்கு இணையானது. இச்சொல்லை மராத்தியர்கள் குறிப்பாக சிவாஜி பயன்படுத்தினார்.

## அஷ்டபிரதானின் பொறுப்புகள்

| | |
|---|---|
| பந்த்பிரதான் / பேஷ்வா | பிரதம அமைச்சர் |
| அமத்தியா / மஜீம்தார் | நிதியமைச்சர் |
| சுர்நாவிஸ் / சச்சீவ் | செயலர் |
| வாக்கிய–நாவிஸ் | உள்துறை அமைச்சர் |
| சர்–இ –நௌபத் / சேனாபதி | தலைமைத் தளபதி |
| சுமந்த் / துபிர் | வெளியுறவுத்துறை அமைச்சர் |
| நியாயதிஸ் | தலைமை நீதிபதி |
| பண்டிட்ராவ் | தலைமை அர்ச்சகர் |

## முக்கிய மராத்தியக் குடும்பங்கள்

- கெய்க்வாட் – பரோடா
- பான்ஸ்லே – நாக்பூர்
- ஹோல்கார் – இந்தூர்
- சிந்தி அல்லது சிந்தியா – குவாலியர்
- பேஷ்வா – புனே

**ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்த கா.ஃபிகானின் புகழ் பெற்ற கூற்று உங்களுக்குத் தெரியுமா?**
"விசுவாசம் உள்ளவராக இருத்தல், லாப நோக்கம் இன்மை, ஆபத்துக்கு அஞ்சாமை, ஒருதலைபட்சமாக இல்லாதிருத்தல், விருப்பு வெறுப்பின்றி இருத்தல், நண்பருக்கும் அந்நியருக்குமிடையே வேற்றுமை பாராமை, நேர்மையுடன் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆசிரியரின் கடமைகள்" என அவர் கூறியுள்ளார்.

பச்சை கலந்த நீலவண்ணக் கல்லானது விலையுயர்ந்த அணிகலன்களில் பயன்படுத்தப்படும் கல்லாகும். பாரசீக அரசர்களின் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனங்களில் இத்தகைய வண்ணக்கல்லால் ஆன அரியணையும் ஒன்றாகுமெனப் பிர்தௌசி தன்னுடைய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கோல்கொண்டா கோட்டையானது ஹைதராபாத்திலிருந்து 11 கி.மீ தொலைவில், ஒரு குன்றின் மீது 120 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஒலி தொடர்பான கட்டடக்கலை அம்சங்களுக்கு இக்கோட்டை பெயர் பெற்றதாகும். கோட்டையின் மிக உயரமான இடம் பால ஹிசார் ஆகும். தர்பார் மண்டபத்திலிருந்து குன்றின் கீழே அமைந்துள்ள அரண்மனைக்குச் சுரங்கப்பதை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**பாமினி அரசின் எட்டு அமைச்சர்கள்:**

1. வக்கீல் – உஸ் – சல்தானா அல்லது அரசின் பிரதம அல்லது முதலமைச்சர் அரசருக்கு அடுத்த நிலையில் துணையதிகாரியாகச் செயல்பட்டவர்.
2. பேஷ்வா நாட்டின் பிரதம மந்திரியோடு இணைந்து செயல்பட்டவர்.
3. வஸிரி–குல்ஏனையஅமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிட்டவர்.
4. அமிர் – இ – ஜூம்லா நிதியமைச்சர்
5. நஷீர் – உதவி நிதியமைச்சர்
6. வஷிர் – இ – அசாரப் – வெளியுறவுத்துறை அமைச்சர்
7. கொத்தவால் – காவல்துறைத் தலைவர் மற்றும் நகர குற்றவியல் நடுவர்
8. சதார்–இ–ஜகான்–தலைமை நீதிபதி, சமயம் மற்றும் அறக்கொடைகளின் அமைச்சர்.




1690ல் புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்டது.

சாம்பாஜி, தம்முடைய குடும்ப அர்ச்சகரான கவிகலாஷ் என்பவரின் ஒழுக்கக்கேடான செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தார். சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பியபோது வாரணாசியில் கவிகலாஷ் சாம்பாஜியின் பாதுகாவலராய் இருந்தார். பின்னர், சாம்பாஜியைப் பத்திரமாக ரெய்கார்க்கு அழைத்து வந்தார். அனைத்து விடயங்களுக்கும் சாம்பாஜி அவரின் வழிகாட்டுதலை எதிர்பார்த்ததால் அரச சபையில் அவரின் முழுமையான மேலாதிக்கம் நிலவியது. கவிகலாஷ் புகழ்பெற்ற அறிஞரும் கவிஞருமாவார்; ஆனால், அவர் மாந்திரீகம் செய்பவராகவுமிருந்தார். இதனால் அரசவையில் இருந்த வைதீக இந்துக்கள் அவர்மீது ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்தனர். முகலாயப் படைகள் சாம்பாஜியைக் கைது செய்தபோது கவிகலேஷும் உடனிருந்தார். ஆகவே, இருவரும் ஔரங்கசீப்பின் கட்டளையின்படி அனைத்து வகைப்பட்ட சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்யும் நோக்கில் 1731ல் ஜோதன்பர்க் என்பவர் சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினார். டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றி சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியின் தோற்றத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது.

**உங்களுக்குத் தெரியுமா?**

வங்காளத்தின், வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.

மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாளூர் முத்துசாமி ஆவார்.

| கலகம் நடைபெற்ற இடங்கள் | இந்திய தலைவர்கள் | கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரிகள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ஜான் நிக்கல்சன் |
| லக்னோ | பேகம் ஹஸ்ரத் மகால் | ஹென்றி லாரன்ஸ் |
| கான்பூர் | நானா சாகிப் | சர் காலின் கேம்பெல் |
| ஜான்சி & குவாலியர் | ராணிலட்சுமிபாய், தாந்தியா தோபே | ஜெனரல் ஹுக்ரோஸ் |
| பரெய்லி | கான் பகதூர் கான் | சர் காலின் கேம்பெல் |
| பீகார் | கன்வர் சிங் | வில்லியம் டைலர் |

**உங்களுக்குத் தெரியுமா?**



பண்டைய காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி.(பொ.ஆ) 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. (பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டு வரை கற்றலின் மையமாக இருந்தது. தற்போதைய பீகாரில் உள்ள ராஜகிருகத்தில் அமைந்துள்ள நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். நாளந்தா மகா விகாராவின் இடிபாடுகளை ஐ.நா. சபையின் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் உலக பாரம்பரிய தளமாக அறிவித்துள்ளது. தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள நாளந்தா பல்கலைக்கழகம் நாகரிகங்களுக்கிடையிலான தொடர்பு மையமாக கருதப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர். சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார். அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1863 ல் ஐசிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரவீந்தரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார்.



மத்திய இந்தியாவில் புரட்சி ஜன்சியின் இராணி இலட்சுமிபாய் அவர்களால் வழிநடத்தப்பட்டது. இந்தியாவின் மாபெரும் தேசபக்தர்களுள் அவரும் ஒருவர். சர் ஹக்ரோஸ் ஜான்சியை ஆக்கிரமித்தார். ஜான்சியிலிருந்து தப்பிய இராணி லட்சுமிபாய், குவாலியரில் படையை தலைமையேற்று வழிநடத்திய தாந்தியா தோபேவுடன் இணைந்தார். ஆனால் ஆங்கிலப் படை ஜுன் 1858ல் குவாலியரை கைப்பற்றியது. போரில் ராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார். தப்பிய தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி 1857 புரட்சியில் கலந்து கொண்ட தலைவர்களில் மிகவும் துணிச்சலானவர் இராணி லட்சுமிபாய் ஆவார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இடைக்காலத்தில் பல சமய மடங்களும் மடாலயங்களும் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் உள்ள அஹோபில மடம் அவற்றுள் ஒன்றாகும். அங்கு ஸ்ரீராமானுஜர் கல்விக்காக தன்னுடைய குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். மடாலயக் கல்வி தவிர, சமணப் பள்ளிகளும் மற்றும் பௌத்த விகாரங்களும் மக்களுக்கு கல்வி வழங்குவதில் முக்கிய பங்காற்றின. அனைத்து துறைகளைச் சார்ந்த புத்தகங்கள் கொண்ட நூலகத்தினை அவைகள் பெற்றிருந்தன.

உங்களுக்குத் தெரியுமா?

### வார்தா கல்வித் திட்டம் (1937)

1937ஆம் ஆண்டு பிரபலமான அடிப்படைக் கல்வித் திட்டமான வார்தா கல்வித் திட்டத்தை காந்தியடிகள் உருவாக்கினார். காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித் திட்டத்தின் அச்சாணியாக அகிம்சை கொள்கை இருந்தது. அக்கல்வித் திட்டத்தின் மூலம் அகிம்சைக் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார். அதன்மூலம் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவது அவசியமென கருதினார். காந்தியடிகள் இத்திட்டத்தின் மூலம் சுரண்டலையும், சமூக மையப்படுத்துதலையும் நீக்கிவிட்டு வன்முறையற்ற சமூகநிலையை உருவாக்க விரும்பினார்.

### டாக்காவின் மஸ்லின் ஆடைகள்

கி.மு. (பொ.ஆ.மு) 2000ஆம் ஆண்டுகள் பழமையான எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் மிகச் சிறந்த தரம் வாய்ந்த இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு சுற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


50 மீட்டர் அளவு கொண்ட மெல்லிய இந்த மஸ்லின் துணியை ஒரு தீப்பெட்டிக்குள் அடக்கிவிடலாம்.

### தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு

ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதுமே இந்திய மக்களின் வறுமைக்கு காரணம் என்பதை முதலில் ஏற்றுக் கொண்டவர் தாதாபாய் நௌரோஜி ஆவார்.

### பௌத்த சமய காலத்தில் விகாரங்களும் பல்கலைக்கழகங்களும்

உங்களுக்குத் தெரியுமா?



பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. இது ஒரு முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியாகும். இதனை 1980இல் யுனெஸ்கோ, உலக பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், தனது அர்த்தசாஸ்திரத்தை இப்பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து தொகுத்ததாக கூறப்படுவது இதன் சிறப்பாகும். 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இப்பல்கலைக்கழகத்தின் இடிபாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்.

உங்களுக்குத் தெரியுமா?

1813இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டு தோறும் 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தது.

உங்களுக்குத் தெரியுமா?

உட்ஸ் கல்வி அறிக்[கை] (1854) இந்தியா[வின்] ஆங்கிலக் கல்வியி[ன்] "மகாசாசனம்" என்[று] அழைக்கப்படுகிறது. ஏனெனில் அனை[த்து] நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வி[யை] வழங்கும், ஆங்கில கல்விக் கொள்கையி[ன்] முதல் அறிக்கை இதுவாகும். ஆன[ால்] இது இந்தியர்களின் கொள்கைகளை

| பண்டைய தமிழகத்தின் பண்பாடுகள் பற்றிய காலவரிசை | | |
|---|---|---|
| பண்பாடு | காலம் | பண்பாட்டுக் கூறு |
| பழங்கற்காலம் | 20,00,000 ஆண்டுகள் முன்பு முதல் பொ.ஆ.மு. 8,000 வரை | கைக்கோடரி, வெட்டுக்கத்தி<br>வேட்டையாடுதல்– உணவுசேகரித்தல் |
| இடைக்கற்காலம் | பொ.ஆ.மு. 8,000 முதல் பொ.ஆ.மு. 1,300 வரை | நுண்கற்கருவிகள்<br>உலோகம் பற்றி இவர்களுக்குத் தெரியாது.<br>விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடுதல் |
| புதியகற்காலம் | பொ.ஆ.மு. 2,000 முதல் பொ.ஆ.மு. 1,000 வரை | மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள்<br>நுண்கற்கருவிகள்<br>விலங்குகளைப் பழக்குதல்<br>பயிரிடுதல்<br>குழுக்களின் பெருக்கம்<br>வேட்டையாடுவோர்– உணவு சேகரிப்போர், மேய்ச்சல் சமூகத்தினர் என இருவிதமான குழுக்களும் ஒரே சமயத்தில் வாழ்ந்தன |
| இரும்புக் காலம் | பொ.ஆ.மு. 1,300 முதல் பொ.ஆ.மு. 500 வரை | பெருங்கற்கால ஈமச்சடங்கு முறை<br>உணவு சேகரிப்போரும் மேய்ச்சல் சமூகத்தினரும் ஒரே சமயத்தில் வாழ்தல்<br>குழுத் தலைவர் உருவாதல்<br>இரும்பின் பயன்பாடு அறிதல்<br>கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள் உருவாக்குதல்<br>கைவினைத் திறன்களில் சிறப்பு நிபுணர்கள் உருவாகுதல் – குயவர்கள், கொல்லர்கள் |
| பண்டைய வரலாற்று மற்றும் சங்ககாலம் | பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ. 300 வரை | இரும்புக் கால மரபுகளோடு சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வளர்ச்சி, வீரர்களை வழிபடுதல், இலக்கிய மரபு, கடல்வழி வணிகம் |

தெரியுமா?

அதிரம்பாக்கத்திலும் குடியம் குகைகளிலும் பழைய மற்றும் இடைக்கற்காலத் தொல்பொருள்கள் கிடைத்துள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

1976ஆம் ஆண்டு டிசம்பர் வரை கல்வித்துறை மாநிலப் பட்டியலில் இருந்தது. ஆனால் தற்போது கல்வித்துறை பொதுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தெரியுமா?

சிம்பன்சி இனத்தின் மரபணுவை (டி.என்.ஏ) எடுத்து ஆய்வு செய்ததில் அதன் பண்புகள் மனித இனத்துடன் 98% ஒத்து உள்ளதாம்!

தெரியுமா?

புதியகற்கால மனிதர்கள்தான் முதலில் மட்பாண்டங்களைச் செய்திருக்க வேண்டும். மட்பாண்டங்களை அவர்கள் கையாலோ அல்லது மெதுவாகச் சுற்றும் சக்கரத்தைக் கொண்டோ வனைந்தார்கள். மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்னால் அவற்றைக் கூழாங்கற்கள் கொண்டு மெருகேற்றினார்கள். இதனைத் தேய்த்து மெருகிடுதல் (burnishing) என்பர்.

தெரியுமா?

தொல்பழங்காலத்திற்கு எழுத்துப்பூர்வ சான்றுகள் கிடையாது. வரலாற்றுக் காலத்திற்கு எழுத்துப்பூர்வமான சான்றுகளும் உண்டு, தொல்லியல் சான்றுகளும் உண்டு.

தெரியுமா?

பேப்பர் என்ற சொல் 'பாப்பிரஸ்' (Papyrus) என்ற தாவரத்தின் பெயரிலிருந்து வந்தது. எகிப்தியர்கள் காகித நாணல் (பாப்பிரஸ்) என்ற தாவர தண்டிலிருந்து தாள்களைத் தயாரித்தனர். இத்தாவரம் நைல் பள்ளத்தாக்கில் அதிகமாக வளர்ந்தது.

தெரியுமா?

கில்காமெஷ் காவியம் தான் உலகின் முதல் காவியமாக இருக்கலாம். பண்டைய சுமேரியாவில் கியூனிஃபார்ம் எழுத்து முறையைக் கொண்டு 12 களிமண் பலகைகளில் இது எழுதப்பட்டிருந்தது.


கில்காமெஷ்


தெரியுமா?

### சிகுராட் என்றால் என்ன?

சிகுராட்கள் என்பது பண்டைய மெஸபடோமியாவில் (தற்போதைய ஈராக்) காணப்படும் பிரமிட் வடிவ நினைவிடங்கள் ஆகும். மிகவும் புகழ்பெற்ற சிகுராட் ஊர் என்ற நகரில் காணப்படுகிறது.

தெரியுமா?

ஹரப்பாதான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால், சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாகரிகம் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக சிந்துவெளி நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.



சர் இராபர்ட் புரூஸ் பூட், இந்தியாவில் முதல் பழங்கற்காலக் கருவியை பல்லாவரத்தில் கண்டுபிடித்தார்.

*எகிப்திய மம்மிகள்*

பதப்படுத்தப்பட்ட இறந்த உடல் மம்மி எனப்படும். இறந்தவர்களின் உடல்களை சோடியம் கார்பனேட், சோடியம் பைகார்பனேட் ஆகியவற்றின் கலவையான நாட்ரன் உப்பு என்ற ஒரு வகை உப்பை வைத்துப் பாதுகாக்கும் வழக்கம் எகிப்தியரிடையே இருந்தது. நாற்பது நாட்களுக்குப் பிறகு, உப்பு உடலின் ஈரப்பதம் அனைத்தையும் உறிஞ்சிய பிறகு, உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்துவிடுவார்கள். உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.

DNRHTV

தெரியுமா?

அக்காட் நகரம் தான் பின்னர் பாபிலோன் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு ஆசியாவின் வணிக, பண்பாட்டு மையமாக திகழ்ந்தது.

தெரியுமா?

*அசிரிய பேரரசு உலகின் முதல் இராணுவ அரசு எனக் கருதப்படுகின்றது. அவர்கள் ஒரு வலிமையான இராணுவ சக்தியாக உருவாவதற்கான காரணம், இரும்புத் தொழில் நுட்பத்தை நன்கு பயன்படுத்தியமைதான்.*

*சுடுமண் பொம்மை இராணுவம்*

சீனாவில் பல நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களின் சுடுமண் பொம்மை சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை முதல் சீனப் பேரரசரான குவின் ஷி ஹுவாங்கின் இராணுவத்தை பிரதிபலிப்பதாகக் கருதப்படுகிறது. இவை பொ.ஆ.மு. 210–209 காலகட்டத்தில் அரசருடன் அவருடைய கல்லறையில் புதைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவை ஷான்கி மாகாணத்தில் சியான் என்ற ஊரிலிருந்து 35கி.மீ. வடகிழக்கே உள்ள லிஷான் மலையடிவாரத்தின் வடக்கில் உள்ள அரசரின் கல்லறையில் உள்ளன.



*சுடுமண் பொம்மை இராணுவம்*

### புலிமான் கோம்பை நடுகற்கள்

தேனி மாவட்டத்தின் வைகை ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள ஊர் புலிமான்கோம்பை (புள்ளிமான் கோம்பை) ஆகும். 2006ஆம் ஆண்டில் இந்த ஊரிலிருந்து தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன. புலிமான்கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது.

"கூடல்ஊர் ஆகோள் பெடு தியன் அந்தவன் கல்"

இதன் பொருள்: "கூடலூரில் ஆநிரை கவர்ந்தபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தீயன் அந்தவனின் கல்"



புலிமான் கோம்பை நடுகல்

**தெரியுமா?**

கர்நாடகாவில் உள்ள சிரவண – பெலகொலாவில் உள்ள பாகுபலியின் சிலைதான் (இவர் கோமதீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்) இந்தியாவில் செதுக்கப்பட்ட மிக உயரமான (57 அடி) சமணச் சிலை இதுவேயாகும்.




**தெரியுமா?**

சமணக் காஞ்சி: ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்த முக்கியமான சமயங்களில் சமணமும் ஒன்று. பல்லவ மன்னரான மகேந்திர வர்மன் சமண சமயத்தைச் சார்ந்தவர். அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசரின் தாக்கத்தால் அவர் சைவ சமயத்துக்கு மாறினார். தற்போதைய காஞ்சி நகரத்துக்கு அருகில் சமணக் காஞ்சி அமைந்திருக்கிறது. அங்கே சமணக் கோயில்களை நீங்கள் காணலாம். அவற்றுள் முக்கியமானது திருப்பருத்திக்குன்றம் சமணக் கோயிலாகும். இக்கோயிலின் கூரையில் மகாவீரரின் வாழ்க்கைக் கதை ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

### கொடுமணல்

கொடுமணல், தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் கொடுமணம்தான் இவ்வூர் எனக் கருதப்படுகிறது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள், சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இந்த ஊரில் கிடைத்துள்ளன.



கொடுமணல் அகழாய்வில் தோண்டி எடுக்கப்பட்ட பெருங்கற்காலக் கல்லறை



குதிரைச் சேணத்தில் பயன்படும் இரும்பு வளையங்கள், கொடுமணல்

### கீழடி

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கே பள்ளிச் சந்தைத்திடல் என்று அழைக்கப்படும் பரந்த தென்னந்தோப்பில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. செங்கற் கட்டுமானங்கள், கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்பு பொருள்கள், விளையாட்டுப்பொருள்கள், கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் அகழாய்வுகளை மேற்கொண்டால், கைத்தொழில் முறைகள் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் பல தகவல்கள் வெளிவரும்.



கீழடியில் கிடைத்த பலவிதமான பொருள்களும் அணிகலன்களும்



செங்கல் கட்டுமானங்கள், கீழடி

வட இந்தியா, வடக்கே காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கே கோதாவரி வரை பரவியிருந்தது. இங்கு காசி, கோசலம், அங்கம், மகதம், வஜ்ஜி, மல்லா, சேதி, வட்சா, குரு, பாஞ்சாலம், மத்சயம், சூரசேனம், ஆசாகம், அவந்தி, காந்தாரம், காம்போஜம் என்று பதினாறு மஹாஜனபதங்கள் தோன்றின.


நான்கு சிங்கங்களைக் கொண்ட நமது தேசியச் சின்னம் சாரநாத்தில் உள்ள அசோகர் தூணை பிரதிபலிக்கும் விதமாகவே தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தெரியுமா?

சந்திரகுப்தரின் அமைச்சரான சாணக்கியர் அர்த்தசாஸ்திரம் என்ற நூலை எழுதினார். இது மௌரிய ஆட்சி நிர்வாகம் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

கிரேக்கத்தில் ஆளும் வர்க்கம் நிலங்களைக் கட்டுப்படுத்தியது. அடிமைகள் நிலங்களில் பாடுபட்டனர். அடிமைகளைக் கொண்டிருப்பது என்பது ஒரு நாகரிக வாழ்வின் அவசியம் என கிரேக்க எழுத்தாளர்களும் தத்துவ ஞானிகளும் கருதினர். ஆண்டானுக்கும் அடிமைக்குமான உறவை அரிஸ்டாட்டில் கணவனுக்கும் மனைவிக்குமான, தந்தைக்கும் பிள்ளைகளுக்குமான உறவுகளோடு ஒப்பிடுகின்றார்.

பெரிகிளிஸுக்குப் பின்னர் வந்த அரசாங்கம் உண்மையைக் கண்டறிய சாக்ரடீஸ் முன்வைத்த வழிமுறைகளை விரும்பவில்லை. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கடவுள்களை சாக்ரடீஸ் ஏற்றுக் கொள்ள மறுத்தார் என்றும் இளைஞர்களைத் தவறான சிந்தனைக்கு இட்டுச் சென்றார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். நீதிமன்றக்குழு நடுவர் சாக்ரடீஸை குற்றவாளி எனத் தீர்மானித்து அவரை விஷம் (hemlock) அருந்தி உயிர்விடும்படி தீர்ப்பு வழங்கியது.



சாக்ரடீஸ்

**பண்பாட்டில் பின் தங்கியவர்கள்:** முற்றிலும் வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த அல்லது பண்பாட்டைக் கொண்ட மக்கள் குழுவினர். தங்களைக் காட்டிலும் குறைவான பண்பாட்டு வளர்ச்சியைக் கொண்டவர்கள் எனவும் தங்களைக் காட்டிலும் அதிக வன்முறை குணம் கொண்டவர்கள் எனவும் ரோமானியர்களால் கருதப்பட்டவர்கள்.



தெரியுமா?

ஈரானில் அசிரியப் பேரரசும் இந்தியாவில் மகதப் பேரரசும் உருவாக இரும்புக் கலப்பை சார்ந்த விவசாயம் வழிவகுத்தது.

மொத்தம் உள்ள 33 கல்வெட்டுகளில் 14 முக்கியமான பாறைக் கல்வெட்டுகள், 7 தூண் பிரகடனங்கள், 2 கலிங்கக் கல்வெட்டுகள். இவை போக, சிறு பாறைக் கல்வெட்டுகளும், தூண் பிரகடனங்களும் உண்டு. மௌரியப் பேரரசு பற்றி, குறிப்பாக அசோகரின் தம்ம ஆட்சியைப் பற்றி அறிய இவை மிகவும் நம்பகமான ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

பண்டைய கிரீஸ் மற்றும் ரோமை உள்ளடக்கியதே செவ்வியல் உலகமென்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பண்டைய கிரேக்க, ரோமானிய நாகரிகங்களை உள்ளடக்கிய காலமே செவ்வியல் காலமென்றும், கிரேக்கோ–ரோமானிய கால உலகமென்றும் அறியப்படுகின்றது.

மக்களாட்சி என்னும் சொல்லின் நேர்பொருள் "மக்களே ஆட்சி புரிவது" என்பதாகும். ஆனால் நடைமுறையில் மெடிக்ஸ் (metics) என்று அழைக்கப்பட்ட அடிமைகள், பெண்கள், நகரில் தங்கியிராதவர்கள் (வணிகர்கள், கைவினைஞர்கள்) ஆகியோர் விலக்கியே வைக்கப்பட்டிருந்தனர்.

அலெக்ஸாண்டரின் இறப்பிற்குப் பின்னர் பண்பாடு மிக விரைவாக வளர்ந்தது. வரலாற்று அறிஞர்கள் இதனை (கி.மு. (பொ.ஆ. மு.) 323) ஹெலனிஸ்டிக் நாகரிகம் என அழைக்கின்றனர்.

## அடிமைகளின் கிளர்ச்சிகள்

கிரேக்கத்தைக் காட்டிலும் ரோமில்தான் அடிமைகளின் கிளர்ச்சிகள் அதிகம் நடந்தன. ஸ்பார்டகஸின் கிளர்ச்சியே அவற்றுள் புகழ் பெற்றதாகும். 70,000 அடிமைகள் பங்கேற்ற அக்கிளர்ச்சி கி.மு. (பொ.ஆ.மு) 73இல் தொடங்கியது. இப்புரட்சி ரோமின் அதிகாரத்தை அச்சங்கொள்ள வைத்தது. ஆனாலும் இறுதியில் ஸ்பார்டகஸ் கொல்லப்பட்டு புரட்சி ஒடுக்கப்பட்டது. ஸ்பார்ட்டகஸை பின்பற்றிய 6000 புரட்சியாளர்களும் கொல்லப்பட்டனர்.

## பட்டு வழித்தடம் அல்லது பட்டுப்பாதை:

சீனாவிலிருந்து ஆசியா மைனர் மற்றும் இந்தியா வரையிலான வணிக வழித்தடம், *பட்டுப்பாதை/பட்டுச் சாலை/ பட்டு வழித்தடம்* என்று அறியப்படுகிறது. இது சீனாவை மேலை நாடுகளோடு இணைக்கின்றது. இப்பாதை வழியாக இருபெரும் நாகரிகங்களான சீனா மற்றும் ரோம் ஆகியவற்றுக்கிடையே பண்டங்களும், கருத்துக்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பட்டு மேற்கு நோக்கிச் செல்ல, கம்பளி, தங்கம், வெள்ளி ஆகியன கிழக்கு நோக்கிச் சென்றன. சீனா பௌத்தத்தை இந்தியாவிலிருந்து இவ்வழியின் மூலமே பெற்றது.



நெய்யப்பட்ட பட்டுத்துணி

### புனித சோபியா ஆலயம்

புனித சோபியா ஆலயம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டதாகும். அக்கால ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடமான இத்தேவாலயம் அதன் புதுமையான கட்டடக்கலை நுணுக்கங்களுக்கு பெயர் பெற்றதாகும். கான்ஸ்டாண்டிநோபிள் நகரை உதுமானிய துருக்கியர் கைப்பற்றியபோது இத்தேவாலயம் ஒரு மசூதியாக மாற்றப்பட்டது.



புனித சோபியா ஆலயம்

### சீனப் பெருஞ்சுவர்

கி.மு. (பொ.ஆ.மு) 8 மற்றும் 7 ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலப் பகுதியில் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்த சீன அரசுகள், வடக்கேயிருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுவர்களை எழுப்பிக் கொண்டன. சின் அரசவம்சத்தின் காலத்தில் தனித்தனியாக இருந்த பல சுவர்கள் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 5000 கிலோ மீட்டர் நீளமுடைய பெருஞ்சுவர் உருவானது. இச்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாடோடிப் பழங்குடியினர் உள்ளே நுழைய முடியாதவாறு இச்சுவர் தடுத்தது. பின்னர் ஆட்சிபுரிந்த பல அரச வம்சத்தினர் காலத்தில் இச்சுவர் விரிவு செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டது. தற்போது சீனப்பெருஞ்சுவரின் மொத்த நீளம் 6700 கிலோ மீட்டர் ஆகும்.



ஜப்பான் என்னும் பெயரே *சீனப்* பேரரசரால் கொடுக்கப்பட்டதாகும். *சீனப்* பேரரசர் ஜப்பானிய அரசருக்கு அனுப்பிய செய்தியில் ஜப்பானை 'மாபெரும் சூரியன் உதிக்கும் நாடு' (தாய்-நியா-புங்-காக்) என விளித்திருந்தார். யமட்டோ என்ற பெயரைக் காட்டிலும் இப்பெயர் சிறப்பாக இருப்பதாக ஜப்பானியர் கருதினர். எனவே அவர்கள் தங்கள் நாட்டை டாய்-நிப்பான் (சூரியன் உதிக்கும் நாடு) என அழைக்கத் தொடங்கினர். காலப்போக்கில் நிப்பான் மருவி ஜப்பான் ஆனது.

### சன்னி, ஷியா பிரிவுகளின் தோற்றம்

அராபியத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளே இஸ்லாமின் இருபிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று. அப்பிரிவுகள் சன்னி மற்றும் ஷியா என்றழைக்கப்பட்டன. சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், இஸ்லாமிய நாடுகளின் தலைமையும், நபிகளுக்குப்பின் அப்பொறுப்புக்கு வருவோரும் இஸ்லாத்தில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். மாறாக ஷியா பிரிவைச் சேர்ந்தோர் இவ்வரசியல், மத தலைமைப் பொறுப்புகளை ஏற்போர் நபிகள் நாயகத்துடன் ரத்த உறவு கொண்டவர்களாகவும் அல்லது மண உறவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். மற்றவர்களை அனுமதிக்க முடியாது என்ற நிலைபாட்டைக் கொண்டிருந்தனர்.

### மங்கோலியர்கள் மற்றும் செங்கிஸ்கான்



செங்கிஸ்கான்

மங்கோலியர்கள் நாடோடிகள். ஆசிய ரஷ்யாவின் ஸ்டெப்பிஸ் மேய்ச்சல் நிலப் பகுதிகளிலிருந்து ஐரோப்பாவிற்குள் வந்தவர்கள். அவர்கள் கால்நடை மேய்ப்பர்கள் ஆவர். போர்த்திறன் கொண்ட அவர்கள் செங்கிஸ்கான் எனும் மகத்தான தலைவனை உருவாக்கினார்கள். செங்கிஸ்கான் சிறப்பு மிக்க ராணுவ ஆற்றல் கொண்டவர். அவருடைய மதம் சாமனிசம் என்பதாகும். இது நிரந்தரமான நீல வானத்தை வழிபடுவதாகும். மங்கோலியர்கள் ரஷ்யாவை 300 ஆண்டுகாலம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதன் காரணமாக இடைக்காலத்தின் இறுதிவரை ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் தொழில்நுட்பங்களில் ரஷ்யா வளர்ச்சியடையாது பின்தங்கியிருந்தது.



கி.பி (பொ.ஆ.) 1078இல் சீனா உற்பத்தி செய்த இரும்பு 114,000 டன்னைத் தாண்டியது (1788இல் இங்கிலாந்து 68,000 டன்னே உற்பத்தி செய்தது), சீனா, செராமிக் (Ceramics) ஓடுகள் மற்றும் பீங்கான் பொருட்கள் செய்வதிலும் தனித்திறன் பெற்று விளங்கியது. இத்தொழில் நுட்பத்தை அடுத்து வந்த 700 ஆண்டுகள் வரை ஐரோப்பா அறிந்திருக்கவில்லை வெடிமருந்து 1044லேயே பயன்பாட்டில் இருந்தது. ஐரோப்பாவைக் காட்டிலும் 500 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீனா அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டிருந்தது. (Chris Harman, A Peoples' History of the World, p.111)

**பாக்தாத்:** "அரேபிய இரவுகளின் நகரம்" என அறியப்பட்ட நகரமாகும். இது அரண்மனைகள், பொதுக்கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும். வணிகர்கள் கிழக்கோடும் மேற்கோடும் பெரும் வணிகத்தைச் செய்தனர். உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்கள் குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்தாத்திற்கு வந்தார்கள்". – நேரு, *உலக சரித்திரம்* (Glimpses of World History).



பாக்தாத் நகரம்

பிப் (fief) என்பது ஒருவருக்கு அவரைவிட மேல் நிலையில் இருக்கும் கோமகனால் வழங்கப்படும் நிலம். நிலத்தைப் பெற்றவர் நிலம் கொடுத்தவருக்கு கைமாறாக சில சேவைகளைச் செய்ய வேண்டும். அது அவருடைய கடமையாகும்.

திருச்சபை விலக்கம் என்பது ஒரு மனிதன் கிறித்தவனாக இருப்பதால் என்ன உரிமைகளுக்குத் தகுதியானவரோ அவ்வுரிமைகள் அவருக்கு மறுக்கப்படுவதாகும். அவர் திருச்சபைக்குள் புனிதச் சடங்குகளைச் செய்ய முடியாது. இறந்த பின்னர் அவருடைய உடலைத் திருச்சபைக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் புதைக்க முடியாது. மதவிலக்கம் என்பது ஒரு அரசனுடைய குடிமகனுக்கு அவர் பெறத் தகுதியுள்ள சமயம் சார்ந்த பயன்களை மறுப்பதன் மூலம் அந்நபரை அரசனுக்கு எதிராக வெறுப்பு கொள்ளத் தூண்டுவது.

**அரசு:** ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் ஒரு நாடு.

**பேரரசு:** ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் பல நாடுகளை கொண்ட நிலப்பரப்பு.

### மனிதாபிமானம்

மனிதாபிமானம் என்னும் கருத்து மறுமலர்ச்சியின் மையக்கூறாகும். இது மனித கண்ணியத்தையும் இயல்பையும் வலியுறுத்தியது. இடைக்காலத்தில், மனிதர்கள் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே படைக்கப்பட்ட முகவர்கள் என்ற கருத்து நிலவியது. மறுமலர்ச்சி கால மனிதாபிமானம் பல்வேறு குணநலன்களைப் பெற்றுள்ள மனிதர்கள் அவற்றைப் பயன்படுத்தி உன்னத நிலையை அடைய வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது. மேலுலகம் நோக்கிய அவர்களின் பார்வையை இவ்வுலகம் நோக்கித் திருப்பியது. ஆன்மீக உலகிலிருந்து பொருள் உலகை நோக்கித் திருப்பியது. மரணத்திற்குப் பின்னரான வாழ்வின் மீதான அவர்களின் கவனத்தை இவ்வுலக வாழ்க்கையை நோக்கித் திருப்பியது.

## இதே காலகட்டத்தில் இந்தியா.....

### ஹூன்

ரோமானியப் பேரரசின் சரிவுக்கு பிறகு, ஐரோப்பா சிறிய சிறிய ஜெர்மானிய அரசுகளாக சிதறுற்றிருந்த சமயம், ஹூன் இனத்தவர்களும் கடுமையான போர்குணமுள்ள மத்திய ஆசிய மக்களும் வடகிழக்கு இந்தியா மீது படையெடுத்தனர். ஸ்கந்தகுப்தரால் அவர்கள் முறியடிக்கப்பட்டாலும், அவருடைய மறைவிற்கு பின், இந்தியாவினுள் நுழைந்து, மத்திய இந்தியா முழுதும் குடியேறினர். தோரமானர் மற்றும் மிஹிரகுலர் இருவரும் நன்கு அறியப்பட்ட ஹூன் அரசர்கள் ஆவர்கள். இவ்வரசர்கள் புத்த மதத்தவர்களை தண்டித்தனர். புத்த மடாலயங்களை எரித்தனர். ஏறத்தாழ கி.பி (பொ.ஆ) 528 ஆம் ஆண்டு மாளவத்தைச் சார்ந்த யசோதர்மன் மூலமாக ஹூன் இனத்தவர்களது ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது.



ஸ்கந்தகுப்தரின் தங்க நாணயம்


ஸ்கந்தகுப்தரின் வெள்ளி நாணயம்


யசோதர்மனின் வெற்றி தூண், மாண்டசூர்

### பாரசீகத்துடனான சாளுக்கியர்களின் (பாதாமி மற்றும் வாதாபியை உட்கொண்ட) உறவுமுறை

**சாளுக்கியா (Chalukya)**



பாரசீகத்தில் அமையப் பெற்ற சசாநித் வம்சமும் சாளுக்கிய அரசும் சமகால அரசுகளாகும். சீன வம்சத்தில் டாங் என்ற அரசருடன், சசாநித் வம்சத்தின் கடைசி அரசரான இரண்டாம் குசரவ் நல்ல உறவு முறையைக் கொண்டிருந்தார். மேலும் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் தூதுவர்களையும் பகிர்ந்து கொண்டார். மாகாராஷ்டிரத்தை உள்ளடக்கிய சாளுக்கிய அரசின் தலைநகர் பாதாமியாகும். யுவான் சுவாங் சாளுக்கியர்களின் வீரத்தைப் புகழ்ந்து கூறும்பொழுது "அவர்கள் நன்றி உணர்வு மிக்கவர்களாகவும், போரில் ஈடுபடுவதை பெருமையாகவும், குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்குபவர்களாகவும் திகழ்ந்தார்கள்" என்கிறார்.

### கத்தோலிக்க மத நீதிமன்றம்

கத்தோலிக்க மத நீதிமன்றம் மதநம்பிக்கைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களைக் கையாள்வதற்காக கத்தோலிக்கத் திருச்சபையால் உருவாக்கப்பட்ட அமைப்பே மத நீதிமன்றமாகும். குற்றமிழைத்ததாக கண்டறியப்பட்டவர்கள் தங்கள் கருத்தைக் கைவிட்டுத் திருந்தினால் அவர்களுக்கு எளிய தண்டனைகளும் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டன. தங்களைத் திருத்திக்கொள்ள மறுப்பவர்கள் கட்டி வைக்கப்பட்டு கொளுத்தப்பட்டனர். மத நீதிமன்றங்களிலேயே மிகவும் பழிக்கப்பட்டது ஸ்பானிய மத நீதிமன்றமாகும்.

### புனித இக்னேஷியஸ் லயோலாவும், இயேசு சபையும்

கிறித்தவ மதத்தைப் பரப்புரை செய்வதற்காக இயேசு சபையை புனித இக்னேஷியஸ் லயோலா நிறுவினார். அதனுடைய முக்கியத்துவமிக்க பணி என்பது, ஆதரவற்றோருக்குக் கல்விச் சேவையை வழங்குவதுதான். ஆதரவற்றவர்களுக்கான அது உறைவிடங்கள், அனாதை இல்லங்கள், கல்வி நிலையங்கள் போன்ற எண்ணற்ற அமைப்புகளை இயேசு சபை தொடங்கியது. வெகுவிரைவில் அவர்களுடைய இறைப்பணியாளர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிந்தது.


புனித இக்னேஷியஸ் லயோலா

## இதே காலத்தில் ஐரோப்பாவில்.....

### புனித ரோமானியப் பேரரசும் பேரரசர் சார்லெமக்னே




சார்லெமக்னே மற்றும் போப் அட்ரியன் I

ஐரோப்பிய கண்டத்தில் கி.பி. (பொ.ஆ.) 9–வது நூற்றாண்டுகளின் தொடக்கத்தில் புனித ரோமானியப் பேரரசு தோன்றியது. கி.பி. (பொ.ஆ.) 476 ஆம் ஆண்டுக்கு பிறகு பழைய ரோமானியப் பேரரசு புதிய ரோமானியப் பேரரசுடன் எந்த தொடர்பும் இல்லாமல் இருந்ததால் முடிவுக்கு வந்தது. புதிதாக தோன்றிய ரோமானியப் பேரரசு கிறித்துவத்தையும், கிறித்துவ உலகத்தையும் பிரதிநிதித்துவம் செய்ததால் புனித என்ற அடைமொழி பெற்றது. இப்பேரரசர் போப்பாண்டவரைப் போலவே பூமியில் வாழும் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். இப்பேரரசர் அரசியல் நடைமுறையிலும், போப்பாண்டவர் என்பவர் சமயம் சார்ந்த பொறுப்பாளராகவும் விளங்க எல்லை வகுக்கப்பட்டிருந்தது. பேரரசர் உலகில் மிக உயர்ந்தவராக கருதப்பட்டாலும் போப்பாண்டவருக்கு அடுத்த நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

பிராங்க் நாட்டின் சார்லெமக்னே அரசர், புனித ரோமானிய பேரரசர் என்ற பட்டத்தை (கி.பி. பொ.ஆ. 800) பெற்ற முதல் பேரரசர் ஆவார். இப்பேரரசர் சார்லெமக்னேனும் பல்லவ அரசர் இரண்டாம் நந்திவர்மன் மற்றும் பிரதிகாரா அரசர் முதலாம் நாகபட்டரும் சமக்காலத்தவர் ஆவர்.

### அரசர் ஜான் மற்றும் மகாசாசனமும்




அரசர் ஜான் பாடும் மேக்னா கார்ட்டா

கி.பி. (பொ.ஆ.) 1215 ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சார்ந்த பிரபுக்கள் அரசர் இரண்டாம் ஜான் என்பவரை "சுதந்திர தனியுரிமை பட்டயத்தில்" கையெழுத்திடக் கட்டாயப்படுத்தினார். இங்கிலாந்தின் பிரபுக்கள் மற்றும் மக்களின் சில சுதந்திரங்களை மதிக்க வேண்டும் என்ற கருத்தை அப்பட்டயம் உறுதிபடுத்தியிருந்தது. புனித ரோமானியப் பேரரசில் நிலவிய ஆட்சியாளரின் மேலாதிக்கக் கோட்பாட்டை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கிலாந்து அரசர் ஜான் மற்றும் இந்தியாவை ஆண்ட சுல்தான் இல்டுமிஷ், இருவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். எனவேதான் ஆரம்பக்காலத்திலேயே மன்னரின் அதிகாரம் சோதிக்கப்பட்டதாக அறிகிறோம்.

அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்கு–மிடையே அல்லது புதிய உலகத்திற்கும் பழைய உலகத்திற்குமிடையே, தாவரங்கள், விலங்குகள், தொழில்நுட்பம் பண்பாடு மற்றும் விநோதமான நோய்கள் ஆகியவற்றின் இடப்பெயர்வுக்கு ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் அமெரிக்காவை வெற்றி கொண்டதே காரணமாகும். இது **கொலம்பியப் பரிமாற்றம்** (Columbian Exchange) என்று அறியப்படுகிறது.

இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் செயல்பட்ட மதச் சீர்திருத்த இயக்கத்திற்குத் தலைமையேற்ற சீர்திருத்தவாதிகள், ரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளையும் நடைமுறைகளையும் ஏற்க மறுத்தனர். இவர்களே பியூரிட்டானியர் (தூய நெறியாளர் எனப் பொருள்) என அறியப்பட்டனர். இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய ஸ்ருவர்ட் வம்ச அரசர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வரசர்கள் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளால் பெருவாரியான பியூரிட்டானியர் இங்கிலாந்திலிருந்து புலம் பெயர்ந்து வேறு பகுதிகளில் குடியேறினர். தாங்கள் உருவாக்கிய குடியேற்றங்களில் இவர்கள் பியூரிட்டானியர் வாழ்க்கை முறையை மேற்கொண்டனர்.

## ஐரோப்பிய நவீன கால விடியலின்போது இந்



திருமலை நாயக்கர் மஹால்

கி.பி. (பொ.ஆ.) 1526 ஆம் ஆண்டு மொகலாய அரசு தோற்றுவிக்கப்பட்டது. கி.பி. (பொ.ஆ.) 1336 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட விஜய நகர அரசு கிருஷ்ணதேவராயர் [கி.பி. (பொ.ஆ.) 1509–29] ஆட்சியில் உச்சநிலையை அடைந்தது. போர்த்துக்கீசியர்கள் தங்களது பேரரசைக் கீழ் திசையில் (இந்தியா, மலாக்கா, இலங்கை) நிறுவி, கோவாவைத் தலைநகராகக் கொண்டு கடல் பகுதியையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தமிழ்நாட்டில் மதுரை நாயக்கர்கள் பாண்டிய அரசை 72 பாளையங்களாகப் பிரித்து ஆட்சி நடத்தினார்கள். ஜெசூட் மிஷனரிகளின் வருகையும், இயேசு சங்கத்தின் உறுப்பினரான புனித பிரான்சிஸ் சேவியர் பணிகளும் தூத்துக்குடியில் மீனவச் சமூகத்தைச் சார்ந்தவர்களைக் கத்தோலிக்க கிறித்தவச் சமயத்தைத் தழுவுதற்குக் காரணமாக அமைந்தன.

**குவேக்கர்கள்** இங்கிலாந்தில் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட நண்பர்கள் குழாம் என்னும் கிறித்துவ மதக் குழுவின் உறுப்பினர் ஆவர். புனித ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இவர்கள் சடங்குச் சம்பிரதாயங்களையும், சமயக் குருமார் அமைப்பையும் எதிர்த்தனர். இவர்கள் போருக்கு எதிராகவும் அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்காக நற்பெயர் பெற்றவர்களாவர்.



ஜார்ஜ் பாக்ஸ்

ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறுவதற்கு முன்பாகவே அம்மண்ணின் மைந்தர்களாக அமெரிக்காவைச் சொந்த நாடாகக் கொண்ட பூர்வ குடிகள் பொதுவாகச் செவ்விந்தியர் என அழைக்கப்பட்டவர்கள் (தற்போது அச்சொல் இழிவானதெனக் கருதப்படுவதால் வரலாற்று அறிஞர்கள் அச்சொல்லைப் பயன்படுத்துவதில்லை) அமெரிக்கா முழுவதும் பரவலாக வாழ்ந்துவந்தனர். பல இனக் குழுக்களாகப் பிரிந்திருந்த அவர்கள் தங்களுக்குள்ளே போரிட்டுக்கொண்டிருந்தனர். மேலும் அடிமைச் சூழலில் வேலை செய்யவும் அவர்கள் மறுத்தனர். அரசியல் தந்திரம், வன்முறை ஆகிய இரண்டின் மூலமாக ஐரோப்பியர் அவ்வினக்குழுக்களைத் தோற்கடித்து அவர்களது இடங்களைக் கைப்பற்றினர். எண்ணிக்கையில் மிகக் குறைந்துவிட்ட அவர்கள் இன்றைய தினம் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர்.



அமெரிக்கப் பூர்வகுடிகள்

**சுதந்திரப் பிரகடனத்திலிருந்து....** அனைத்து மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டுள்ளார்கள். வாழும் உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சியை நாடும் உரிமை போன்ற பிரிக்கவோ பறிக்கவோ முடியாத உரிமைகளைப் படைத்தவன் (இறைவன்) அவர்களுக்கு அருளியுள்ளான். இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே மக்களிடையே அரசுகள் அமைக்கப்பட்டன. எப்போதெல்லாம் அரசு இவ்வுரிமைகளை அழிக்க முற்படுகிறதோ... அவ்வரசை மாற்றியோ அல்லது ஒழித்துவிட்டோ மக்களின் பாதுகாப்பையும் மகிழ்ச்சியையும் உறுதிப்படுத்தும் குறிக்கோள்களின் அடிப்படையிலான ஓர் புதிய அரசை உருவாக்கும் அதிகாரம் மக்களுக்கு உண்டு. ஆனால் துஷ்பிரயோகமும் உரிமை அபகரிப்பும் நீடித்துக் கொடுங்கோல் ஆட்சியானால் அத்தகையதோர் அரசை தூக்கி எறிந்து... மேலும் தங்களின் எதிர்காலப் பாதுகாப்பிற்குப் புதிய பாதுகாவலர்களை ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களின் கடமையாகும்.

**மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனம்:** இப்பிரகடனம் லஃபாயட், தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோர்களால் எழுதப்பட்டது. மனிதர்கள் மனிதர்களாய் இருப்பதினாலேயே இயல்பாகவே சில உரிமைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தும் இயற்கை விதியை இது அடிப்படையாகக் கொண்டது. அவ்வுரிமைகள் உலகம் தழுவியவை அனைத்து இடங்களிலும் அனைத்துக் காலங்களிலும் செல்லத்தக்கவை. அறிவொளிக் காலத்துத் தத்துவஞானிகளால் ஈர்க்கப்பட்டு எழுதப்பட்ட இப்பிரகடனம் பிரெஞ்சுப் புரட்சியினுடைய லட்சியங்களின் சாரத்தை விளக்குவதாய் அமைந்தது. உலகளாவிய அளவில் சுதந்திரமும் ஜனநாயகமும் தழைத்தோங்குவதில் பெரும் தாக்கத்தை இப்பிரகடனம் ஏற்படுத்தியது.



மிரபு

**காரன்வாலிஸ்:** பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் ஈட்டனிலும், கேம்பிரிட்ஜிலும் கல்வி கற்றார். 1757இல் இராணுவத்தில் சேர்ந்தார். 1762இல் தந்தையார் இறந்தபோது இவர் கோமான் காரன்வாலிஸ் ஆன பின்னர் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் மேலவையான பிரபுக்கள் அவையில் இடம்பெற்றார். அமெரிக்க விடுதலைப் போரின்போது இவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவையாக இருந்தன. சில இடங்களில் அமெரிக்கப் படைகளைத் தோற்கடித்த இவர் இறுதியில் யார்க்டவுனில் தனது படைகளுடன் சரணடைந்தார். இத்தோல்விக்குப் பின்னும் அடுத்தடுத்து வந்த இங்கிலாந்து அரசாங்கங்களின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்து, தொடர்ந்து முக்கியப் பணிகளில் பணியமர்த்தப்பட்டார். 1786இல் நைட் (knight) பட்டம் சூட்டப்பட்ட அவர் அதே ஆண்டில் இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாகவும், இராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பணியமர்த்தப்பட்டார்.



*சீனப் பெருஞ்சுவர்*

உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் வடக்கிலிருந்து (மங்கோலியர்களிடமிருந்து) வரும் ஊடுருவல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட மிகப் பெரும் முயற்சியாகும். பொ.ஆ.மு. 220ல் குவின் ஷி ஹுவாங் படையெடுப்புகளைத் தடுப்பதற்காக, அதற்கு முன்னர் கட்டப்பட்டிருந்த ஏராளமான பழைய கோட்டைச் சுவர்களை இணைத்தார். பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பொ.ஆ. 17ஆம் நூற்றாண்டு வரை இதன் விரிவாக்கப் பணிகள் நீடித்தன. கிழக்கே கொரிய எல்லையிலிருந்து மேற்கே ஆர்டோஸ் பாலைவனம் வரை மலைகள், சமவெளிகளை இணைத்தபடி இது 20,000 கிமீ தூரம் நீள்கிறது.

இங்கிலாந்தில் 1750இல் 4.7 மில்லியன் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி 1900இல் 250 மில்லியன் டன்களாக அதிகரித்தது.

1806இல் பிரான்சில் வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்ட மக்கள்தொகை 65.1 விழுக்காடாக இருந்தது. 1896இல் இது 42.5 விழுக்காடாகக் குறைந்தது. அதே காலகட்டத்தில் தொழில் துறையில் வேலைவாய்ப்புகளின் பங்கு 20.4 விழுக்காட்டில் இருந்து 31.4 விழுக்காடாக அதிகரித்தது.

போட்டிகளைக் கட்டுப்படுத்தவும் விலை உயர்வைத் தக்கவைக்கவும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகிப்பாளர்கள் ஏற்படுத்திக்கொள்ளும் கூட்டமைப்பே கார்டெல் ஆகும்.

## காலவரிசை

| | |
|---|---|
| மே 5, 1789 | ஸ்டேட்ஸ் ஜெனரல் கூடிய நாள் |
| ஜூன் 17, 1789 | மூன்றாம் பிரிவினர் தேசியச் சட்டமன்றமாதல் |
| ஜூன் 20, 1789 | டென்னிஸ் மைதான உறுதிமொழி |
| ஜூலை 9, 1789 | தேசியச் சட்டமன்றம், சட்டமன்றமாக மாறுதல் |
| ஜூலை 14, 1789 | பாஸ்டில் சிறைத் தகர்ப்பு |
| ஆகஸ்டு 27, 1789 | மனிதன், குடிமகன் உரிமைகள் பிரகடனம் |
| அக்டோபர் 5 & 6, 1789 | வெர்சே அணிவகுப்பு |
| ஜூன் 20 &21, 1790 | வெர்னேக்கு அரசர் தப்பியோடல் |
| ஆகஸ்டு 10, 1792 | தேசியப் பேரவை கூடியது |
| செப்டம்பர் 2 & 3, 1792 | செப்டம்பர் படுகொலை |
| ஜனவரி 21, 1793 | பதினாறாம் லூயி கொல்லப்பட்ட நாள் |
| ஜூலை 27, 1794 | ரோபஸ்பியர் கொல்லப்பட்ட நாள் |

நீராவி இயந்திரப் பயன்பாட்டால் 1837இல் 419 ஆக இருந்த பிரஷ்ய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1849இல் 1,444 ஆக உயர்ந்தது. 1820இல் பத்து இலட்சம் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி, அடுத்த 30 ஆண்டுகளில் அறுபது இலட்சம் டன்களுக்கும் அதிகமாக உயர்ந்தது. 1810இல் 46,000 டன்களாக இருந்த இரும்பு உற்பத்தி, 1850 வாக்கில் 5,29,000 டன்களாக அதிகரித்தது. 1850இல் 3,638 மைல் நீளமாக இருந்த ரயில்பாதை 1870இல் 11,600 மைல் நீளமாக அதிகரித்தது.

1884–85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத் தீரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது. காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

1846இல் எலியாஸ் ஹோவே என்ற அமெரிக்கர் துணி தைக்கும் தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். துணிகளை வெண்மையாக்குவது, சாயமிடுவது, அச்சிடுவது போன்ற புதிய முறைகளின் கண்டுபிடிப்புகளால் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் பல்வேறு நிறங்களில் துணிகளைத் தயாரிக்க முடிந்தது.

இந்தியாவில் முதன்முதலில் தொழிலாளர் தினம் 1923இல் மே 1 அன்று சென்னையில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டம் இந்திய விவசாயத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கியவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்ககாலத் தலைவர்களில் ஒருவருமான சிங்காரவேலரால் ஏற்பாடு செய்யப்பட்டது.



சென்னைக் கடற்கரையிலுள்ள உழைப்பாளர் சிலை

| கண்டுபிடிப்பு | கண்டுபிடித்தவர் | ஆண்டு |
|---|---|---|
| ஊது உலை (இரும்பு மற்றும் எஃகு) | ஆப்ரஹாம் டார்பி | 1709 |
| நீராவி இயந்திரம் | தாமஸ் நியூகோமன் | 1712 |
| பறக்கும் நாடா (ஜவுளி) | ஜான் கே | 1733 |
| மேம்படுத்தப்பட்ட டார்பி முறை (இரும்பு மற்றும் எஃகு) | ஜான் ஸ்மீட்டன் | 1760 |
| இயந்திர நூற்புக் கருவி (ஜவுளி) | ஜேம்ஸ் ஹர்க்ரீவ்ஸ் | 1764 |
| நூற்பு நீர்ச்சட்டகம் (ஜவுளி) | ரிச்சர்ட் ஆர்க்ரைட் | 1769 |
| நியூகோமனின் நீராவி இயந்திர மறுவடிவாக்கம் | ஜேம்ஸ் வாட் | 1769 |
| ஸ்பின்னிங் மியூல் (ஜவுளி) | சாமுவேல் கிராம்ப்டன் | 1779 |
| விசைத்தறி (ஜவுளி) | எட்மண்ட் கார்ட்ரைட் | 1785 |
| பருத்தியிலிருந்து கொட்டை நீக்கம் (ஜின்) (ஜவுளி) | எலி விட்னி | 1793 |
| காற்றுப் பம்பு (சுரங்கங்களில்) | ஜான் பண்டில் | 1807 |
| பஃபிங் டெவில் – முதல் நீராவி ரயில் என்ஜின் | ரிச்சர்ட் ட்ரித்விக் | 1801 |
| தி புட்சர் – ரயில் என்ஜின் | ஜார்ஜ் ஸ்டீஃபன்ஸன் | 1814 |
| சுரங்கப் பாதுகாப்பு விளக்கு | ஹம்ப்ரி டேவி | 1815 |
| தையல் இயந்திரம் | எலியாஸ் ஹோவே | 1846 |
| தந்தி – மோர்ஸ் கோட் (தகவல் தொடர்பு) | சாமுவேல் மோர்ஸ் | 1844 |
| குறைந்த செலவிலான எஃகு தயாரிக்கும் முறை | ஹென்றி பெஸ்ஸிமர் | 1856 |
| தொலைபேசி | அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் | 1876 |
| கம்பியில்லாத் தகவல்தொடர்பு | மார்க்கோனி | 1899 |
| ஒளிரும் மின்விளக்கு | தாமஸ் ஆல்வா எடிசன் | 1888 |

1884–85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத் தீரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது. காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகல் கூட்டிய இம்மாநாட்டில் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

**வணிக முதலாளித்துவம்** (Mercantalism): ஒரு நாடு செல்வத்தையும் அதிகாரத்தையும் அடையும் முயற்சியில் அது பின்பற்றும் நடைமுறையிலுள்ள பல பொருளாதாரக் கோட்பாடுகளை வணிக முதலாளித்துவம் குறிக்கின்றது. பதினாறாம் நூற்றாண்டில் ஸ்பெயின் உலகத்திலேயே மிகவும் செல்வச் செழிப்பு மிக்க நாடாகவும் வலிமை மிக்க நாடாகவும் திகழ்ந்தது. ஸ்பெயின் நாட்டின் செல்வமும் அதிகாரமும் காலனிகளிலிருந்து ஸ்பெயின் நாட்டினுள் கொட்டப்பட்ட செல்வத்தை அடித்தளமாகக் கொண்டிருந்தன. ஒரு நாடு அதிகமான காலனிகளைப் பெற்றிருப்பதற்கு ஏற்றவாறு அது செல்வச் செழிப்புமிக்கதாக இருக்கும். சுருக்கமாகச் சொல்வதெனில், ஐரோப்பிய நாடுகள் இக்கொள்கையை ஒரு தேசியப் பொருளாதாரக் கொள்கையாக, தங்களது வணிகத்தைப் பெருமளவிற்குப் பெருக்கிக்கொள்வதற்கும் குறிப்பாகத் தங்கம், வெள்ளி ஆகியவற்றை உச்சபட்ச அளவிற்குக் குவித்துக்கொள்வதற்கும் ஏற்றவாறு வடிவமைத்தன.

| | |
|---|---|
| போர்த்துகீசியர் | 1505 – 1961 |
| டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி (நெதர்லாந்து) | 1605 – 1825 |
| டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி (டென்மார்க்) | 1620 – 1869 |
| பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி | 1668 – 1954 |
| ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி | 1612 – 1757 |
| ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி | 1757 – 1857 |
| ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சி | 1858 – 1947 |

**கர்னல் பென்னிகுயிக்:** பென்னிகுயிக் ஓர் இராணுவப் பொறியாளரும், குடிமைப்பணியாளரும், சென்னை மாகாணச் சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆவார். மேற்கு நோக்கி ஓடும் பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்குநோக்கித் திருப்பினால் வைகை ஆற்றைச் சார்ந்திருக்கும் இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி கொண்டவையாக மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார். பென்னிகுயிக்கும் ஏனைய ஆங்கிலேயப் பொறியாளர்களும் இயற்கையின் சீற்றத்தையும் வனவிலங்குகள், விஷ உயிரினங்கள் ஆகியவற்றின் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு அணையின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டபோது இடைவிடாத மழையால் இடையூறுகள் ஏற்பட்டன. ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு நிதியைப் பெறமுடியாத நிலையில் பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்பச் சொத்துக்களை விற்று, அப்பணத்தைக் கொண்டு அணையைக் கட்டி முடித்தார். அணைகட்டும் பணிகள் 1895இல் முடிவுற்றன. முல்லைப் பெரியார் அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட வேளாண் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளித்து வருகிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் பஞ்சங்கள்: 1770ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சம் மிகப் பெருமளவில் ஒரு கோடி மக்களின் அல்லது ஏறத்தாழ வங்காள மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் உயிரைக் குடித்தது. இவ்வாறுதான் ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் தொடங்கியது. இதைப் போலவே ஆங்கிலேயரது ஆட்சி முடியும் தருவாயில் 1943இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் முப்பது இலட்சம் மக்களைப் பலி கொண்டது. 1998இல் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் ஒரு சிறுவனாகக் கொல்கத்தாவின் வீதிகளில் பஞ்சத்தால் மனிதர்கள் செத்து மடிந்ததைப் பார்த்தார். அது குறித்து அவர் வழக்கமான ஆய்வுப்பாதையிலிருந்து விலகிப் புதிய பரிமாணத்தில் ஆய்வு செய்துள்ளார்.



சென்னையில் பஞ்ச நிவாரண முகாம் சமையலறை 1876–1878)

புகைப்படம் எடுத்தவர்: *W.W ஹூப்பர்*

ஒப்பந்தக் கூலிமுறை என்பது தண்டனைக்குரிய ஓர் ஒப்பந்த முறையாகும். இவ்வொப்பந்தத்தின்படி ஒப்பந்தக் கூலியான ஒருவர் வேலை செய்ய மறுத்தாலோ, வேலைக்கு வராமல் போனாலோ, அவருடைய முதலாளியின் ஆணைகளுக்குப் பணிய மறுத்தாலோ பணியிடத்தில் காணப்படாவிட்டாலோ அவர் ஊதியம் மறுக்கப்படுதல் அல்லது சிறைத் தண்டனைகளுக்கு உள்ளாவார்.



இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்கள் (டிரினிடாட்)

1842–1870 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மொத்தம் 5,25,482 இந்தியர்கள் இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றுக்குச் சொந்தமான காலனிகளில் குடியேறினர். அவர்களில் 3,51,401 பேர் மொரீசியசுக்கும், 76,691 பேர் டிமெராராவுக்கும், 42,519 பேர் டிரினிடாடுவுக்கும், 15,169 பேர் ஜமைக்காவுக்கும், 6,448 பேர் நேட்டாலுக்கும், 15,005 பேர் ரீயூனியனுக்கும் சென்றனர். ஏனைய பிரெஞ்சு காலனிகளுக்கு 16,341 பேர் சென்றனர். ஏற்கெனவே மொரீசியஸ் சென்ற 30,000 நபர்களையும் இலங்கை, மலேசியா ஆகிய இடங்களுக்கு சட்டத்திற்குப் புறம்பாகப் பிரெஞ்சுக் காலனிகளுக்கும் அனுப்பப்பட்டவர்களையும் மேற்சொன்ன புள்ளிவிவரக் கணக்கில் சேர்க்கவில்லை. இவ்வாறாக 1870களில் ஒப்பந்தக் கூலிமுறை, இந்தியத் தொழிலாளர்களைக் கடல் கடந்த காலனிகளுக்கு அனுப்புவது, சட்டரீதியாக ஐரோப்பியக் காலனிகளிலுள்ள பெரும் பண்ணைகளுக்கு அடிமை உழைப்பை வழங்கியது.

கூட்டு நிறுவனம் என்பது பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழில்சார் நிறுவனமாகும். தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது அந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.
கார்டெல் எனும் சொல், ஒரே வணிகத்துறையில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களிடையே தொழில் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதன் அடிப்படையில் உருவாகும் அமைப்பைக் குறிப்பதாகும். சந்தையின் மீது முற்றுரிமைச் செல்வாக்கைச் செலுத்துவதே இதன் நோக்கமாகும்.

**பதுங்குக் குழிப்போர்**



போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின. முதல் உலகப்போரின்போது இப்பதுங்குக் குழியானது ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும் இரண்டு முதல் நான்கு குழிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பதுங்குக் குழியும் குறுக்குமறுக்காக வெட்டப்பட்டிருந்ததால், ஒரு முனையிலுள்ள எதிரியால் சிலஅடி தூரத்துக்கு மேல் சுட இயலாது. பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர். காற்றின் ஊடாகப் பறந்து செல்லும் பெரும் எண்ணிக்கையிலான குண்டுகள், ரவைகள் ஆகியன வீரர்களை மண்ணுக்குள் பதுங்கிப் பாதுகாத்துக்கொள்ளவும் உயிர் தப்பவும் கட்டாயப்படுத்தின.



லெனின்

1870இல் மத்திய வோல்கா பகுதி அருகே கற்றறிந்த பெற்றோர்க்கு லெனின் பிறந்தார். கார்ல்மார்க்ஸின் சிந்தனைகளால் கவரப்பட்ட அவர், விடுதலைக்கான வழி, பெருந்திரளான மக்களின் போராட்டமே என நம்பினார். புனித பீட்டர்ஸ்பர்க் நகரில், தொழில்கூடங்களில் பணியாற்றும் தொழிலாளர் இடம்பெற்றிருந்த வாசிப்புக்குழுக்களுக்கு லெனின் மார்க்ஸிஸம் குறித்து வகுப்புகள் எடுத்து தனதுநேரத்தைச் செலவிட்டார். 1895இல் அவர் கைதுசெய்யப்பட்டு சைபீரியாவில் சிறைவைக்கப்பட்டார். கட்சியின் அமைப்பு, யுக்திகள் குறித்த கருத்து மாறுபாட்டால் கட்சி பிளவுபட்டது. அவர்களில் பெரும்பாலானோரின் (போல்ஷின்ஸ்ட்வோ) ஆதரவைப் பெற்ற லெனினும் அவரது ஆதரவாளர்களும் போல்ஷ்விக் கட்சி என்று அறியப்பட்டனர். இவருக்கு எதிரான சிறுபான்மையினர் (மென்ஷின்ஸ்ட்வோ) மென்ஷ்விக்குகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

இக்காலத்தில் நிலவிய ஏகாதிபத்திய வேட்கையைத் தென்னாப்பிரிக்காவின் பிரதம அமைச்சர் சிசில் ரோட்ஸ் ஒரு சமயம் கூறிய கூற்று சிறப்பாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. "உலகம் ஏறத்தாழ பொட்டலங்களாகக் கட்டப்பட்டுவிட்டன. அதில் விடுபட்டவையும் பிரிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டு காலனிகளாக்கப்பட்டுவிட்டன. இரவில் மேலே நீங்கள் காணும் நட்சத்திரங்களை நினைத்துப் பார்க்கையில் அப்பரந்த உலகங்களை நம்மால் எப்போதும் சென்றடைய இயலாது. என்னால் முடிந்தால் கோள்களைக் கைப்பற்றுவேன். அதை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் அவை தெளிவாக அதேசமயம் தொலைவில் இருப்பதை பார்க்கையில் எனக்குத் துக்கம் ஏற்படுகிறது".



ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்

ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் உச்சபட்ச ஆற்றல் கொண்டனவாகத் திகழ்ந்தன. 1917 மார்ச், ஏப்ரல் ஆகிய இரு திங்கள்களில் சுமார் அறுநூறு வணிகக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் தனது பதினான்கு அம்சத் திட்டத்தை நேசநாடுகள் பின்பற்றுவதற்காக முன்வைத்தார். அவற்றில் மிகமுக்கியமானதாக அவர் கோடிட்டுக்காட்டியது "மிகப்பெரும் நாடுகள் சிறிய நாடுகள் எனும் பேதமில்லாமல் அனைத்து நாடுகளின் அரசியல் சுதந்திரத்திற்கும் அந்நாடுகளின் நிலப்பரப்பின் ஒருமைப்பாட்டிற்கும் எல்லைகளின் உறுதிப்பாட்டிற்கும் பரஸ்பரம் உத்தரவாதம் அளிக்கக்கூடிய நாடுகளைக் கொண்ட பொதுஅமைப்பை உருவாக்க வேண்டும்" என்பதாகும்.
அவருடைய மற்றுமொரு ஆர்வத்தை தூண்டக்கூடிய கவனிக்கப்பட வேண்டிய கருத்து ரஷ்யாவிற்கு கொடுக்கப்பட்ட "தனது தேசியக் கொள்கைகளையும் தனது அரசியல் வளர்ச்சியையும் தானே வடிவமைத்துக் கொள்ளும், தனக்குத் தேவையான அல்லது தான் விரும்புகின்ற எவ்வகைப்பட்ட உதவிகளையும் பெற்றுக்கொள்ளும் சுயநிர்ணய உரிமையாகும்".

பிராவ்தா என்பது ஒரு ரஷ்யமொழிச் சொல். அதன் பொருள் "உண்மை" என்பதாகும். இது 1918 முதல் 1991 வரை சோவியத்யூனியனின் கம்யூனிஸக் கட்சியினுடைய அதிகாரபூர்வ நாளேடாகும்.

பாசிஸம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும். சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும். இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது.

சமூக ஜனநாயகக்கட்சியானது ஜெர்மன் பொதுத்தொழிலாளர் கழகம் என்ற பெயரில் 1863 மே 23 இல் லிப்சிக் நகரத்தில் நிறுவப்பட்டது. அதனை நிறுவியவர் பெர்டினன்ட் லாஸ்ஸல்லி என்பவராவார். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியைச் சேர்ந்த ஜெர்மானிய மேட்டுக் குடியினர் ஒரு சோசலிசக்கட்சியின் இருப்பையே புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட ரெய்க்கின் (குடியரசு) பாதுகாப்புக்கும் உறுதிப்பாட்டிற்கும் ஒரு அச்சுறுத்தலாகக் கருதினர். எனவே பிஸ்மார்க் 1878 முதல் 1890 வரை இக்கட்சியைத் தடைசெய்திருந்தார்.

கூட்டங்கள் நடத்தக்கூடாது, துண்டுப் பிரசுரங்கள் வெளியிடக்கூடாது எனச் சட்டங்கள் இருந்தாலும் சமூக ஜனநாயகக்கட்சிக்கு ஆதரவு பெருகியது. முதல் உலகப்போரைத் தொடர்ந்து வெய்மர் குடியரசை உருவாக்குவதில் இக்கட்சி முக்கியப்பங்கு வகித்தது. ஆனால் நேசநாடுகளிடமிருந்து சாதகமான முடிவுகளைப் பெறத் தவறியதாலும், கடுமையானப் பொருளாதார நெருக்கடியாலும் மக்களின் ஆதரவை இழக்க நேரிட்டது.

தொழிலாளர்களுக்கிடையே அக்கட்சிக்கான ஆதரவு அப்படியே இருந்தபோதிலும் அலுவலகப் பணியாளர்கள், சிறு வியாபாரிகள் ஆகியோரின் ஆதரவையிழந்தது. அவர்கள் முதலில் மிதவாதிகளுக்கும் பின்னர் நாசிகளுக்கும் விசுவாசிகளாக மாறிவிட்டனர். நாசி கட்சி ஆட்சி அமைத்தவுடன், சமூக ஜனநாயகக்கட்சி தடை செய்யப்பட்டது. முக்கிய சமூக ஜனநாயகவாதிகள் கைது செய்யப்பட்டு நாசிகளின் சித்ரவதை முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இருந்த போதிலும் 1945இல் ஹிட்லரின் மூன்றாவது ரெய்க்கின் (குடியரசின்) வீழ்ச்சியைத் தொடர்ந்து இக்கட்சி புத்தெழுச்சி பெற்றது. ஹிட்லரை எதிர்த்த கட்சி என்ற பெயருடன் வெய்மர் காலத்திலிருந்து செயல்படும் ஒரேகட்சி இதுவேயாகும்.

காலனிய நீக்கம் என்பது காலனியாதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

தென்னாப்பிரிக்காவில் குடியேறிய, டச்சுக் குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கநேர்கள் என்றும் அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ்.

ஹோ சி மின் 1890இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவுவிடுதியொன்றில் சமையல்கலைஞராய்ப் பணியாற்றியபின் அவர் பாரிஸ் சென்றார். பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது. 1921 இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925இல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவினார். 1930 இல் இவர் தலைமையேற்ற விவசாயிகளின் புரட்சி நசுக்கப்பட்ட பின்னர் இவர் மீண்டும் மாஸ்கோ சென்றார். மா சே துங்கினால் எழுச்சியூட்டப்பட்ட இவர் இந்தோ சீனாவின் மீது ஜப்பானியர் படையெடுத்த பின்னர் இந்தோசீனா திரும்பி கம்யூனிஸ்டுகளை ஒருங்கிணைத்துத் தனது காலனிய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார். அமெரிக்காவிற்கு எதிராகப் போருக்குத் தலைமை ஏற்று எழுச்சியூட்டும் பாத்திரத்தை வகித்தார்.

**டொமினியன் அந்தஸ்து:** 1939க்கு முன்னர் பின்னாளையப் பொது நல நாடுகளான கனடா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்க ஒன்றியம், அயர்லாந்து ஆகியவற்றிற்கு டொமினியன் தகுதி வழங்கப்பட்டது. 1926 இல் நடைபெற்ற இங்கிலாந்து அரசு மாநாடு பிரிட்டனையும் டொமினியன்களையும் ஆங்கிலப்பேரரசின் உள்ளே உள்ள சுயாட்சி சமூகங்களாகவும் தகுதியில் சமமாகவும், பேரரசுடன் பற்றுறுதி கொண்டிருப்பதில் இணைந்து இருந்தாலும் எந்த வகையிலும் அது உள்நாட்டு விஷயங்களிலோ அல்லது வெளியுறவு சார்ந்தனவற்றிலோ ஒருவருக்கு ஒருவர் கீழானவர்கள் அல்லர் என விவரித்தது.

அஸ்டெக்குகள் நாடு இராணுவமயமான நாடாகும். அவர்கள் ராணுவக் குடியிருப்புகளையும் கோட்டைப் பாதுகாப்புப் படைகளையும் வலைப் பின்னலை போன்ற ராணுவச் சாலைகளையும் கொண்டிருந்தனர். பேரரசில் மேலெழுந்தவாரியாய் அமைதியும் பாதுகாப்புமிருந்தாலும், மக்கள் இரக்கமின்றி ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் இன்னலுக்குள்ளாயினர்.

டாலர் ஏகாதிபத்தியம்: இச்சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவிசெய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

"கொடுக்க வேண்டிய விலை என்னவாக இருந்தாலும் நாம் நமது தீவைக் காப்போம் கடற்கரைகளில் போரிடுவோம். வயல்வெளிகளிலும் வீதிகளிலும் போரிடுவோம்.... ஒருபோதும் சரணடைய மாட்டோம்" 1940 ஜூன் மாதத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் ஆற்றிய எழுச்சியுரை ஜெர்மானியப் படையெடுப்பு பற்றிய அச்சம் நிலவிய அத்தருணத்தில் பிரிட்டன் மக்களின் நம்பிக்கையை ஊக்கப்படுத்துவதாய் அமைந்தது.

### காலக்கோடு

- 1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
- 1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
- 1929 – பொருளாதாரப் பெருமந்தம்
- 1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
- 1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

**தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல்:**

DLL7KK

இனஒதுக்கல் என்பதன் பொருள் தனிமைப்படுத்துதல் அல்லது ஒதுக்கிவைத்தல் என்பதாகும். இது 1947இல் தேசியவாதக் கட்சியின் கொள்கையாயிற்று. 1950 முதல் வரிசையாகப் பல சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. ஒட்டுமொத்த நாடும் பல்வேறு இடங்களுக்கான தனித்தனிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டன. வெள்ளை இனத்தவருக்கும் வெள்ளையரல்லாத இனத்தவருக்கும் இடையில் திருமணங்கள் தடைசெய்யப்பட்டன ஏறத்தாழ அனைத்துப் பள்ளிகளும் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதன்மூலம் வெள்ளையருக்கு வழங்கப்படும் கல்வியில் இருந்து மாறுபட்ட கல்வியை ஏனைய ஆப்பிரிக்கர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகக் கல்வியும் பிரித்து வைக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் வெள்ளை கறுப்பின மக்களுக்கிடையிலான அரசியல் சமத்துவம் என்பது மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் கறுப்பின மக்களின் ஆட்சியைக் குறிக்கும் உண்மையின் அடிப்படையிலேயே இனஒதுக்கல் உருவானது. இவ்வுண்மை ஐரோப்பியர் நலன்களுக்கு இடர்ப்பாடாக அமைந்துவிடும் என்ற எண்ணத்தால் ஆப்பிரிக்கர்களை நிரந்தரமாகவே அடக்கிவைப்பது என முடிவு செய்யப்பட்டது. 1958 முதல் 1966 முடிய தென்ஆப்பிரிக்காவின் பிரதமராக இருந்த வெர்வோர்டு என்பவரே இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டார். 1912 இல் நிறுவப்பட்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி (ANC) இனவாதம் நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்த்தது. இருந்தபோதிலும் ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸின் தலைவர்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. நெல்சன் மண்டேலா அரசியல் வானில் பிரகாசிக்கத் தொடங்கிப் பொதுமக்களின் பேராதரவைப் பெற்றபோது ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தடைசெய்யப்பட்டு நெல்சன் மண்டேலா சிறை வைக்கப்பட்டார். உலக அளவிலான எதிர்ப்பலைகள் தென் ஆப்பிரிக்காவில் இனவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர உதவியது. 1990 இல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டு மண்டேலா 27 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் ஆப்பிரிக்க மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேர்தலில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றிபெற்று மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவரானார். இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவுக்கு வந்தாலும் ஆப்பிரிக்காவின் பொருளாதார மண்டல முழு ஆதிக்கமும் வெள்ளை இனத்தவரிடமே உள்ளது.



வேண்டாம் இனஒதுக்கல்


நெல்சன் மண்டேலா

இரண்டாவது உலகப் போரின்போது ஜெர்மானியர்களால் ஆறு மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்ட இனஅழிப்பை விளக்குவதற்கு பேரழிவுப்படுகொலை (Holocaust) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஹிட்லர் மற்றும் நாஜிகளுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களின் ஒன்று யூதர்களை அழிப்பதாகும். ஜெர்மனியில்சாதாரணமாகவும்சொல்லப்போனால் ஐரோப்பா முழுவதும் ஏற்கனவே நிலவிவந்த யூத எதிர்ப்பு உணர்வுகளை ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். யூதர்கள் ஐரோப்பா முழுவதிலும் சிதறிக்கிடந்தனர். அவர்களில் பலர் வணிகத்துறையிலும் கலைகளிலும் தொழில்துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினர். வட்டித்தொழில் யூதர்களிடையே முக்கிய வணிக நடவடிக்கையாக இருந்தது. இது அவர்களுக்கு எதிரான வெறுப்பை மேலும் வலுவடையச் செய்தது. ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகர வணிகர் (Merchant of Venice)எனும் நாடகம் மக்களிடையே யூதர்களின் மீதிருந்த வெறுப்பையும் அவநம்பிக்கையையும் படம் பிடித்துக் காட்டியது. ஷைலாக்கின் பாத்திரம் யூதர்கள் குறித்த மாறாத கருத்தாகும். ஃபிட்லர் ஆன் ரூஃப் (Fiddler on Roof) எனும் திரைப்படம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட யூத–எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பற்றியதாகும். சார் மன்னனின் ஆணைப்படி ஒரு யூத கிராமத்திலிருந்த யூதர்கள் அனைவரும் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டதை இத்திரைப்படம் காட்சிப்படுத்தியது.

"ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாங்கள் எதிர்கால சந்ததியினரை போரின் துயரங்களிலிருந்துக் காப்போம் என உறுதி கூறுகிறோம். அது நம்முடைய வாழ்நாளில் இருமுறை மனிதகுலத்திற்குச் சொல்லமுடியாத துயரங்களைக் கொண்டுவந்துள்ளது. மேலும் அடிப்படை மனித உரிமைகள், மனிதப்பண்புகளைப் பெற்றுள்ள தனிநபர்களின் கண்ணியம், மதிப்பு, ஆணுக்கும்பெண்ணுக்கும்,சிறிய நாட்டிற்கும்பெரிய நாட்டிற்கும் சம உரிமை ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்வோம்".... – ஐக்கிய நாடுகள் சபையின் முகவுரையிலிருந்து

பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள்: உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல், பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, வேலை வாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி, உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.


### காலக்கோடு

- 1939 – இரண்டாம் உலகப்போரின் தொடக்கம்
- 1940 – பிரிட்டன் போர்
- 1941 – முத்துத் துறைமுக நிகழ்வு
- 1942 – ஸ்டாலின் கிரேடு போர்
- 1945 – இரண்டாம் உலகப்போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை துவக்கம்



**டாக்டர் சன் யாட் சென் (1866–1925)**

ஒரு ஏழ்மையான குடும்பத்தில் காண்டன் நகரத்தின் அருகே பிறந்த டாக்டர் சன்யாட் சென், நவீன சீனாவின் தந்தை, ஒரு கிறித்தவப் பள்ளியில் கல்வி பெற்றதோடு கிறித்தவராகவும் மாறினார். ஹாங்காங் நகரில் மருத்துவப் பயிற்சி பெற்றார். அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அவர் 1895இல் மஞ்சுக்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அவ்வெழுச்சி தோற்றதால் அடுத்த பதினாறு ஆண்டுகளுக்கு அவர் நாடுதுறந்து வாழும் நிலை ஏற்பட்டது. இக்காலத்தை சீனாவிற்கு வெளியே கல்வி பயின்று கொண்டிருந்த சீன மாணவர்களிடையேயும் அயல்நாட்டில் வசித்தோரிடமும் தேசியச் சிந்தனையை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோவில் வைத்து ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார். அதுவே 1912இல் கோமிங்டாங் என்றும் தேசிய மக்கள் கட்சி என்றும் உருவெடுத்தது. தேசியம், ஜனநாயகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகிய மூன்று கூறுகளைக் கொண்ட அவர்தம் கொள்கை சோஷியலிசச் சிந்தனையையே உச்சமாகக் கருத்தில் கொண்டது.



மார்ஷல்

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இடம்பெயர்வு போன்ற பிரச்சனைகளே மேற்கு ஐரோப்பாவிற்குள் பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமையும் என்று அமெரிக்க ஐக்கிய நாடு கருதியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் செயலர் ஜார்ஜ் சி.மார்ஷல் ஐரோப்பாவின் சுய முன்னேற்ற முயற்சிக்குத் தம் நாடு பணஉதவி செய்யுமென்று அறிவித்தார். பதினாறு நாடுகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தன. நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் அமெரிக்க ஐக்கியப் பொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகள் 13 பில்லியன் டாலர்கள் என்ற அளவிற்கு உணவுப் பொருள்கள், எரிசக்தி மற்றும் எந்திரங்களைப் பெற்றுக் கொண்டதோடு இதுவே ஐரோப்பாவின் தொழில் முன்னேற்றத்திற்கான முதலீடாகவும் அமையப்பெற்றது. நிதியுதவி வழங்கும் மார்ஷலின் திட்டமானது 1951இல் முடிவுக்கு வந்தது.



**மா சே –துங் (1893 – 1976)**

தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஹனான் நகரில் மா சே–துங் பிறந்தார். அவரது தந்தையார் செல்வச்செழிப்பான விவசாயிகளில் ஒருவர் என்பதோடு மஞ்சுக்களின் ஆட்சியை ஆதரித்தவராவார். வாசிப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்ட மா சே–துங் தன் திறமையால் சாங்ஷியாவிலிருந்த இளையோர் கல்லூரியில் இடம்பிடித்தார். அதே ஆண்டு (1911) சீனாவில் புரட்சி வெடித்தது. புரட்சிப்படை ஒன்றை உருவாக்கிய போதும் விரைவில் அதிலிருந்து விலகி சாங்ஷியாவிலிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கிருந்து நகர்ந்து பீகிங் நகரைச் சென்று சேர்ந்த அவர் பீகிங் பல்கலைக்கழக நூலகத்தில் உதவி நூலகராகப் பணியில் சேர்ந்தார். அதிலிருந்து ஓராண்டுக்குப் பின் ஹனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறியிருந்தார்.

**பனிப்போர்:** இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இந்நாடுகளின் நட்பு நாடுகளுக்குமிடையே மூண்ட விரோதம், பரபரப்பையே பனிப்போர் என்கின்றனர். இரு வல்லரசுகளும் இருபெரும் இராணுவசக்தியாகப் பிரிந்து விரோத மனப்பான்மையை வளர்த்துக் கொண்டன. அவை நேரடியாக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை மாறாக அவர்கள் அரசியல் பொருளாதார சிந்தனைத் தளங்களைத் தேர்வு செய்துகொண்டனர். பனிப்போர் என்ற சொல்லாடலை முதன்முறையாக ஜார்ஜ் ஆர்வெல் (1945) என்ற ஆங்கில எழுத்தாளர் கையாண்டார்.



அரேபியக் கூட்டமைப்பு மாநாடு

**அரேபிய தேசியவாதம்:** இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து சிரியாவிலும் ஈராக்கிலும் தேசியஉணர்வு வளர ஆரம்பித்தது. அதன் நீட்சியாக எகிப்திலும் தேசியஉணர்வு சுடர்விட்டுப் பரவியது. அரேபிய கூட்டமைப்பு மார்ச் 1945இல் கெய்ரோவில் உருவாக்கப்பட்டது. அதைத் தோற்றுவித்த உறுப்பினர்களாக எகிப்து, ஈராக், சிரியா, லெபனான், சவுதிஅரேபியா, ஜோர்டான், ஏமன் ஆகிய நாடுகள் வீற்றிருந்தன.

**சீயோனிய இயக்கம்**


யூதர்களின் பூர்வீகப்பகுதியான பாலஸ்தீனத்தில் 1900இல் ஆயிரம் யூதர்களே குடியிருந்தனர். இவ்வினத்தின் பதினைந்து மில்லியன் மக்கள் ஐரோப்பாவிலும் வடக்கு அமெரிக்காவிலும் பரவிக்கிடந்தனர் (இதுவே 'புலம்பெயர்' சமூகம் என்று குறிக்கப்படுகிறது). இந்த யூத இனம் திட்டமிட்ட கொடுமைப்படுத்தலுக்கு காலம்காலமாக உட்படுத்தப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தகைய கொடுமைகள் ரஷ்யாவிலும் (உலக யூத ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் இங்கு வாழ்ந்து வந்தார்கள்) பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் உச்சத்தை அடைந்தது. சில யூதர்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்றபோது வேறுசிலர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் பிரிட்டனுக்கும் சென்றனர். வியன்னாவில் பத்திரிகையாளராக இருந்த தோடோர் ஹெர்சல் யூத நாடு என்ற பெயரில் 1896ஆம் ஆண்டு ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டார். அதற்கு அடுத்த ஆண்டு (1897) உலக சீயோனிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனியின் வேந்தராக (Chancellor) 1982 முதல் 1990 வரை பொறுப்புவகித்த ஹெல்மட் கோல் கிழக்கு ஜெர்மனியையும், மேற்கு ஜெர்மனியையும் 1990இல் இணைக்கப் பெரும் பங்காற்றினார், அதன் மூலம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் ஒன்றுபட்ட ஜெர்மனியின் வேந்தரானார். அவர் கிறித்தவ ஜனநாயக ஐக்கியத்தின் தலைவராக 1973 முதல் 1998 வரை பதவிவகித்தார். அவர் ஐரோப்பியப் பொருளாதார ஒருங்கிணைவையும், பிரெஞ்சு, ஜெர்மானியர்கள் இணக்கமானநல்லுறவு கொண்டிருப்பதையும் நாடினார். அவர் பிரெஞ்சு குடியரசுத்தலைவரான மிட்டரண்டோடு இணைந்து மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தத்தை உருவாக்கி அதன் மூலமாக ஒருங்கிணைந்த ஐரோப்பாவிற்கும் (European Union), யூரோ பண உருவாக்கத்திற்கும் வித்திட்டார்.

எல்சின் ஆரம்ப காலத்தில் கோர்பசேவின் நண்பராகவே இருந்தார். மாஸ்கோ நகரின் மேயராக இருந்த அவர் அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தை ஆதரித்ததின் மூலமாகப் பெரும்புகழ் பெற்றார். சோவியத் பாராளுமன்றத்திற்கு 1989இல் ஜனநாயக முறைப்படி கோர்பசேவ் நடத்திய தேர்தலில் மாஸ்கோ தொகுதியில் போட்டியிட்ட அவர் பெரும் வெற்றி பெற்று அதிகாரத்திற்குத் திரும்பினார். அதற்கு அடுத்த ஆண்டு கோர்பசேவின் எதிர்ப்பையும் மீறி அவர் ரஷ்யாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரஷ்யக்குடியரசின் தன்னாட்சியை வலியுறுத்திய அவர், பாராளுமன்றத்திற்கு கட்டுப்படாத முழு நிர்வாகப் பொறுப்பை கைகொள்ளும் அதிபர் முறையை முன்வைத்தார்.



எல்சின்



கோர்பசேவ்

**பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு**

இஸ்ரேல் என்ற தேசம் 1948இல் உருவாவதற்கு முன் பாலஸ்தீனில் வாழ்ந்த அரேபியர்களுக்கும் அவர்கள் வம்சாவளியினருக்குமாக உருவாக்கப்பட்ட ஒரு பரந்த அமைப்பு இதுவாகும். இரகசியமாக செயல்பட்டுவந்த எதிர்ப்பு இயக்கங்கள் தங்களை ஒருங்கிணைக்க 1964இல் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். எனினும் 1967 ஜூனில் நடந்த அரபு இஸ்ரேல் போருக்குப் பின்பே இவ்வமைப்பு கவனத்தை ஈர்க்கலாயிற்று. இவ்வமைப்பு 1960கள், 70கள், 80களில் – இஸ்ரேலுக்கு எதிராக நேரடி கொரில்லாப் போரை நிகழ்த்தி வந்தாலும் 1990களில் அந்நாட்டோடு அமைதி உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது. இவ்வமைப்பின் முக்கிய தலைவர் யாசர் அராபத் ஆவார்.



**யாசர் அராபத் (1924–2004)**

யாசர் அராபத் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் செயற்குழுவிற்கு 1969இல் தலைமையேற்று 2004இல் அவர் இறக்கும் வரை அப்பொறுப்பில் வீற்றிருந்தார். அவர் அனைத்துப் பாலஸ்தீன அரபு கொரில்லாப்படைகளுக்கும் முதன்மைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இக்காலகட்டத்தில் பாலஸ்தீனியப் பிரிவினை வாதிகள் மன்னர் ஹுசைனின் அரசைக்கவிழ்க்க முயன்றதோடு பாலஸ்தீன விடுதலை அமைப்பு ஜோர்டான் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டது. எனினும் அராபத்தும் அவர்தம் பாலஸ்தீன விடுதலை அமைப்பும் பெய்ரூட்டைச் சென்று சேரவும் அந்நகரம் 1982 வரை இஸ்ரேலுக்கு எதிரான செயல்பாடுகளுக்குத் தளமாகவும் அமைந்தது. ஒரு தலைப்பாகையுடனும் மறைவாக அவர் வைத்திருந்த துப்பாக்கியும் ஆலிவ் மரக்கிளையின் பகுதியும் அவர்தம் இராணுவச்சீருடையும் காண்போர் மனதில் பாலஸ்தீனப் பிரச்சனையின் தீவிரத்தை நினைவூட்டுவதாக அமைந்தது. அவர் 2 ஏப்ரல் 1989 அன்று பாலஸ்தீன விடுதலை அமைப்பின் நடுவண்குழுவால் பாலஸ்தீன தேசத்தின் முதல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வைகுண்டசுவாமிகள் ஆங்கிலஆட்சியையும் திருவிதாங்கூர் அரசரின் ஆட்சியையும் முறையே "வெள்ளைப் பிசாசுகளின் ஆட்சியென்றும்" கறுப்புப் பிசாசுகளின் ஆட்சியென்றும்" விமர்சித்தார்.

பெரிஸ்ட்ரோய்கா (மறுகட்டமைப்பு) என்பது மிக்கேல் கோர்பசேவால் சோவியத் நாட்டின் பொருளாதாரத்தையும், அரசியல் அமைப்பையும் மறுசீரமைப்பிற்கு உட்படுத்த 1980களின் கடைசியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் முன்னேற்றத்திற்கு சோவியத்தின் பொருளாதாரம் ஈடுகொடுக்கும்படி அதற்குப் புத்துணர்வு ஊட்ட வெளிப்படைத்தன்மை (Glasnost) கொள்கையோடு அறிமுகப்படுத்தபட்டதே பெரிஸ்ட்ரோய்கா ஆகும். அதன்கீழ் பொருளாதாரம் ஒரு நடுவண் அரசால் கண்காணிக்கப்பட்டாலும், சந்தையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப கட்ட சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும், அவை வெற்றியடையாமல் பொருளாதாரத்தில்காணப்பட்ட முரண்பாடுகளை கடுமையானப் பாதைக்கு எடுத்துச்சென்றன. அதனால் சோவியத் பொருளாதாரம் சந்தித்து வந்த சரிவை நிலைநிறுத்த முடியவில்லை.

வெளிப்படைத்தன்மை என்ற கொள்கை மிக்கேல் கோர்பசேவால் பெரிஸ்ட்ரோய்காவோடு அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்படையான ஒரு கருத்தியல் கொள்கையாகும். நிகிதா குருசேவின் உயிரோட்டத்திற்குப் பின் 1960களில் லியோனிட் பிரஸ்னேவ்வின் காலகட்டத்தில் விமர்சனங்களையும், எதிர்ப்பையும் அடக்கி ஒடுக்கும் போக்கு உருவாகி அது சிந்தனைத் தளத்தையும், கலாச்சார சூழலையும் தடுமாற்றத்திற்கு உட்படுத்தியது. வெளிப்படைத்தன்மை எழுத்தாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசையும், அரசியலையும் விமர்சிக்க உரிமை வழங்கியது.

**ஒண்டிவீரன்**

ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப் பிரிவுகளில் ஒன்றனுக்குத் தலைமையேற்றிருந்தார். பூலித்தேவரோடு இணைந்து போரிட்ட அவர் கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். செவிவழிச் செய்தியின்படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும், அதனால் பூலித்தேவர் பெரிதும் வருந்தியதாகவும் தெரிகிறது. ஆனால் ஒண்டிவீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்று கூறியுள்ளார்.

**விருப்பாட்சியின் பாளையக்காரரான கோபால நாயக்கர்**

கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் (Dindigul League) மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர். தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார். கோயம்புத்தூரை மையமாகக்கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையோடு இணைந்தார். அவர் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடும் போர் புரிந்தார். ஆயினும் பிரிட்டிஷ் படைகளால் அவர் 1801இல் வெற்றிகொள்ளப்பட்டார்.

**காலக்கோடு**

- 1934 – நீண்ட பயணம்
- 1949 – வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ NATO)
- 1954 – தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைவு (சீட்டோ SEATO)
- 1955 – வார்சா ஒப்பந்தம்
- 1956 – சூயஸ் கால்வாய் சிக்கல்
- 1961 – பெல்கிரேட் மாநாடு

1860இல் முதல்முறை திருமண வயதுச் சட்டம் இயற்றப்பட்டது. அப்பெருமை ஈஸ்வர் சந்திர வித்யாசாகரையேச் சாரும். திருமணத்திற்கான வயது பத்து என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அது 1891இல் பன்னிரெண்டாகவும், 1925இல் பதிமூன்றாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் கவலைக்குரிய விதத்தில் திருமண வயது ஒப்புதல் கமிட்டி (1929) கூறியபடி இச்சட்டம் காகிதத்தில் மட்டுமேயிருந்தது. நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒருசில படித்த மனிதர்களுமே அதனைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.

ஆரியசமாஜம் சமூக சீர்திருத்தக்களத்திலும் கல்வியைப்பரப்பும் பணியிலும் முக்கிய சாதனைகள் புரிந்தது. சமாஜம் பல தயானந்தா ஆங்கிலோ–வேதப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் உருவாக்கியது.

1893இல் இவ்வியக்கம் தூய்மைக்கோட்பாடு குறித்தக் கருத்து முரண்பாட்டால் இரண்டாகப் பிரிந்தது. தயானந்த சரஸ்வதிக்குப் பின்னர் பொறுப்பேற்ற வசீகர ஆளுமை கொண்ட சுவாமி ஸ்ரத்தானந்தா (1857–1926) DAV பள்ளிகளை நடத்திக்கொண்டிருந்த குழுவினரை நிறுவனரின் தத்துவத்தைப் புறக்கணித்து மிக அதிகமான அளவில் மேற்கத்திய சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் குற்றம்சாட்டினார். 1900 முதலாக அவரேப் பல பள்ளிகளை (குருகுலம்) நிறுவினார். வெளித்தோற்றத்தில் அவை பண்டைய இந்துக்கல்விக்கூட பாணியில் இருந்தன. அங்கு வேதக்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

வேலுநாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாகத் திகழ்ந்த குயிலி, உடையாள் என்ற பெண்களின் படைப்பிரிவைத் தலைமையேற்று வழிநடத்தினார். உடையாள் என்பது குயிலி பற்றி உளவு கூறமறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில்புரிந்த பெண்ணின் பெயராகும். குயிலி தனக்குத்தானே நெருப்புவைத்துக்கொண்டு (1780) அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துத் தளவாடங்களையும் அழித்தார்.



குயிலி

**பழங்குடியினர், யார் அவர்கள்?**

இந்தியாவில் 'பழங்குடியினர்' என்ற வார்த்தையின் நவீனப் பயன்பாடு சாதிய அடிப்படையில் வகுக்கப்பட்ட எஞ்சிய இந்திய சமூகத்தை விடுத்து அவர்களின் அடையாளத்தை விவரிப்பதைக் கட்டுப்படுத்துகிறது. அவ்வப்போது தனிப்பட்ட குழுக்களைக் குறிப்பதற்காக இந்த வார்த்தைப் பெரிதும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் உள்ள பழங்குடியினர் இந்திய சமூகத்தின் ஒரு பகுதியாக இருந்தனர். இந்திய வேளாண்மைச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் இடம்பெயர் வேளாண்மை முறையைப் பின்பற்றினர்.

1857ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும். கான்பூரில் சுற்றிவளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்குத் தயாராக இல்லாததால் நானாசாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர். அவர்கள் அலகாபாத்துக்கு திரும்பிச்செல்ல பாதுகாப்பான வழி அமைக்கப்பட்டது. அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

மானிடவியலாளர் கேத்லீன் கெள கூறும் தகவலின்படி, ஆங்கிலேய ஆட்சி விவசாயிகள் மத்தியில் முகலாயர்களின் காலத்தில் இருந்ததை விட வேதனை மற்றும் இடர்ப்பாடுகளைக் கொண்டுவந்தது.

விவசாயிகளின் பிரச்சனைகள் பல வகைகளில் பல அளவுகளில் உள்ளூர் கலவரங்களில் தொடங்கி போர் போன்ற நிலவரங்கள் வரை பல மாவட்டங்களில் பரவி ஆங்கிலேய ஆட்சியின் முதல் காலாண்டுகளில் கடும் விளைவுகளைச் சந்தித்துப் பின்னர் 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை நீடித்தது என ரனஜித் குகா குறிப்பிடுகின்றார்.

தன்னாட்சி மூலம் இந்த நாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளைக் கொண்ட அரசை கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். கருவூலத்தை செலவு செய்யும் அதிகாரம் கொண்ட தேர்தெடுக்கப்பட்ட சபையும், அந்தச் சபைக்கு கட்டுப்படும் அரசும், அமையும் பிரிட்டிஷ் அரசுக்கு உள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்காமல் அல்லது போரின்போது இந்தியா செய்த சேவைகளுக்கு விருதாகவோ இல்லாமல் தேசிய தன்னுறுதி அடிப்படையில் தன்னாட்சியை இந்தியா கோரவேண்டும்.

— அன்னிபெசன்ட்

(1915ஆம் ஆண்டு செப்டம்பரில்)

1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய், மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஆங்கிலேயர்கள் வசம் ஒதுக்கப்பட்டன. மாற்றப்பட்ட துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொதுசுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள், மற்றும் மீன்வளத்துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன. 1935 ஆம் ஆண்டு மாகாண சுயாட்சி அறிமுகம் செய்யப்பட்ட பிறகு இந்த முறை முடிவுக்கு வந்தது.

ஒருசிலர் அதிகாரத்துக்கு வருவதால் உண்மையான சுயராஜ்ஜியம் கிடைத்துவிடாது, ஆனால் தாங்கள் பெற்ற அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தப்படும்போது நிர்வாகத்தினரை எதிர்க்கும் திறனை அனைவரும் பெறச்செய்வதே சுயராஜ்ஜியமாகும்.

**– காந்தியடிகள்**

**தமிழ்நாட்டின் முக்கிய தொடக்ககால மிதவாத தேசியவாதிகள்**



V.S. சீனிவாச சாஸ்திரி



P.S. சிவசாமி



G.A. நடேசன்

தொடக்ககால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிரச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயல்பாடுகளாக இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பெருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்டுகோள்களாகவும், மனுச்செய்தல், இறைஞ்சுதல், குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு அவர்கள் சமர்ப்பித்தது அரசு அமைத்த பல விசாரணைக் குழுக்களில் காணமுடிகின்றது. வங்கப் பிரிவினையின் போது திலகரும் ஏனைய தலைவர்களும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களை நடத்தியதாலும் மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமொழியைப் பயன்படுத்தியதாலும் தொடக்ககால தேசியவாதிகள் மிதவாதிகளென அழைக்கப்படலாயினர். சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற தமிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள் V.S. சீனிவாச சாஸ்திரி, P.S. சிவசாமி, V. கிருஷ்ணசாமி, T.R. வெங்கட்ராமனார், G.A. நடேசன், T.M. மாதவராவ் மற்றும் S. சுப்பிரமணியனார் ஆகியோராவர். ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அம்பலப்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிப்பாகும். ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினார்கள் என்பதை அம்பலப்படுத்தினர். இங்கிலாந்தில் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர் காலனிகளில் பிரதிநிதித்துவமற்ற அரசை எவ்வாறு திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்டவெளிச்சம் ஆக்கினர்.

ஆங்கிலேயர்கள் 1865ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள். சுள்ளி எடுப்பது, கால்நடைத் தீவனம் மற்றும் தேன், விதைகள், மருத்துவ மூலிகைகள், கொட்டைகள் ஆகிய சிறிய அளவிலான வன உற்பத்திப் பொருட்களையும் வனப்பகுதிகளில் இருந்து சேகரிக்க இந்தச் சட்டம் வனத்தில் வாழ்வோருக்கு தடைவிதித்தது. 1878ஆம் ஆண்டின் இந்திய வனங்கள் சட்டத்தின் படி வனங்களின் உரிமை அரசிடம் இருந்தது. நன்செய் மற்றும் தரிசு நிலங்களும் வனங்களாக கருதப்பட்டன. பழங்குடியினர் பயன்படுத்திய சுழற்சி முறை விவசாயம் தடைசெய்யப்பட்டது. உள்ளூர் மக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வனப்பகுதிகளை தள்ளி வைப்பதற்கு பாதிக்கப்பட்ட ஆதிவாசிகளும் தேசியவாதிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பழங்குடியினர் நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு மிக முக்கிய ஆதாரமாக ராம்பாவில் அல்லூரி சீதாராம ராஜு தலைமையிலான ஆர்ப்பாட்டத்தைக் குறிப்பிடலாம். கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்த (விசாகப்பட்டினம் மற்றும் கோதாவரி மாவட்டங்களைச் சேர்ந்த) ஆதிவாசி பகுதிகளை தனது இல்லமாக கருதிய அவர் அங்கிருந்து ஆதிவாசிகளுக்காக உழைத்தார். அல்லூரி சீதாராம ராஜு அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆதிவாசிகள் கடுமையான வறுமையில் வாடினார்கள். மான்யம் (என்றழைக்கப்பட்ட வனப்பகுதியில்) காவல்துறை, வனத்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளால் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். ராம்பா பகுதி ஆதிவாசிகளின் நலன் காப்பதற்காக ஊழல் அதிகாரிகளுடன் அல்லூரி சீதாராம ராஜு போராடியதால் அவரது உயிரைக் குறிவைத்து ஆங்கிலேய அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. ராம்பா ஆதிவாசிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக (1922–24) மலபார் காவல்துறையின் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டது. வனவாசிகளின் நலனுக்காகப் போராடிய அல்லூரி சீதாராம ராஜு தியாகி ஆனார்.

தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரி, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றும் ஒடிசாவின் (கஞ்சம்) சிலபகுதியையும் உள்ளடக்கியதாக இருந்தது.

**ஜார்ஜ் ஜோசப்**



வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார். செங்கண்ணூரில் (இன்றைய கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம்) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார். தனது நீண்ட பொது வாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார், ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினையாக அவர் கருதினார். தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை 'ரோசாப்பு துரை' என அன்புடன் அழைத்தனர். மதுரை தொழிலாளர் சங்கம் (Madurai Labour Union) (1918) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார். இச்சங்கத்தின் தொடக்ககாலப் போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.

மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் L.N. கோபால்சாமி ஆகியோரால் 1939 ஜூலை 9இல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை, சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக 1939இல் கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

1930இல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் "சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் அர்பணிக்கப்படுவதை தடுப்பது" எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார். பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம் மசோதா, இந்து கோவில் வளாகங்களிலோ அல்லது வேறு வழிபாட்டு இடங்களிலோ "பொட்டுக் கட்டும் சடங்கு" நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானதாகும் என அறிவித்தது. தேவதாசிகள் திருமணம் செய்து கொள்வதற்கு சட்டபூர்வமான அனுமதியை வழங்கியது. மேலும் தேவதாசி முறைக்கு உதவிசெய்கிற தூண்டிவிடுகிற குற்றத்தை செய்வோர்க்கு குறைந்த பட்சம் ஐந்தாண்டு சிறை தண்டனை என ஆணையிட்டது. இம்மசோதா சட்டமாக மாறுவதற்கு 15 ஆண்டுகள் காத்திருந்தது.

### நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927)

ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின்போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்து கொண்டார், பின்னர் நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பலபகுதிகளிலிருந்து வந்திருந்த போராட்டக்காரர்களுக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த S.N. சோமையாஜுலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். 1937இல்ராஜாஜியின்தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பிராமணர் அல்லாதோர் அறிக்கையில் "சென்னை மாகாணத்திலுள்ள 4 கோடியே 1½ லட்சம் மக்களில் 4 கோடிகளுக்கு குறைவில்லாதவர்கள் பிராமணர் அல்லாதவர்களே, சென்னை மாகாணத்தின் அரசியல் சூழல் அவர்களை தங்களுக்கு உரிமையுள்ள பங்கினை எடுத்துக் கொள்ள இடமளிக்கவில்லை" என சுட்டிக் காட்டியது. மேலும் "ஆங்கில அரசின் உண்மையான நீதி மேலும் வாய்ப்புகளுக்கான சமத்துவம்" எனும் ஆங்கிலேயக் கொள்கைகளின்படி நடைபெறும் அரசே இந்தியர்களின் நலன்களுக்கு உகந்தது என வாதிட்டு "நாங்கள் ஆங்கிலேய அரசை ஆழமாக நேசிக்கிறோம் விசுவாதத்துடன் பற்றுக் கொண்டுள்ளோம்" என்று அறிவித்தது.

**1900**

1905– வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது

**1910**

1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம்
1917 – சம்பரான் சத்தியாகிரகம்
1918 – கேதா சத்தியாகிரகம்
1919 – ரௌலட் சட்டம் / ஜாலியன்வாலா பாக் படுகொலை

**1920**

1920 – கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்
1922– சௌரி சௌரா சம்பவம்
1923 – சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்
1927 – சைமன் குழு நியமனம்
1928 – மோதிலால் நேரு அறிக்கை
1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு

**1930**

1930 – உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு
1931– காந்தி–இர்வின் ஒப்பந்தம் / இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932– வகுப்புவாரி பிரதிநிதித்துவம் / பூனா ஒப்பந்தம் / மூன்றாவது வட்டமேசை மாநாடு
1935 – இந்திய அரசு சட்டம்
1937– மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்

**1940**

1940 – ஆகஸ்ட் நன்கொடை / தனிநபர் சத்தியாகிரகம்
1942 – கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945– வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
1946 – ராயல் இந்திய கப்பற்படை புரட்சி / அமைச்சரவை தூதுக்குழு வருகை / இடைக்கால அரசு
1947– மௌண்ட்பேட்டன் திட்டம் / இந்தியா விடுதலை பெறுதல்

**1950**

விஜயநகர அரசர்கள் 'வராகன்' என்று குறிப்பிடப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர். (இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது.) இந்தத் தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை, கன்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை (இரட்டைக் கழுகு வடிவத்தில் உள்ள இந்த உருவம் தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது) ஆகிய விலங்கு உருவங்களையும் தாங்கியுள்ளன. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.



கிருஷ்ணதேவராயர் – தங்க நாணயங்கள்

ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும். இம்மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பிர்தௌசியின் ஷாநாமா குறிக்கின்றது.

சில மரபுக் கதைகளின்படி புகழ்பெற்ற சைவத் துறவியும், சமஸ்கிருத அறிஞருமான வித்யாரண்யரின் அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரரும் புக்கரும் சுல்தான் துக்ளக்கிடம் செய்துவந்த பணியிலிருந்து விலகி, சுல்தானால் சிறை பிடிக்கப்பட்டபோது முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்த இவர்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர் என்று கூறப்படுகிறது. விஜயநகரப் பேரரசு நிறுவியதில் வித்யாரண்யர் முக்கியப் பங்காற்றினார். ஆனால் இது சந்தேகத்திற்குரியது என்பர். ஏனெனில் சில கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அதாவது விஜயநகரப் பேரரசு உருவான அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர்.

## கோல்கொண்டா கோட்டை

ராஜா கிருஷ்ண தேவ் என்ற வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்ட காகத்திய வம்ச அரசர் கட்டிய கோட்டை இது. 1495–1496இல் இக்கோட்டை சுல்தான் குலிகுதப்ஷாவிற்கு ஒரு ஜாகீராகத் (நிலமாக) தரப்பட்டது. அவர் அக்கோட்டையைக் கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார். அதன்பின் இக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது. பிற்காலத்தில் பாமினி அரசின் கைவசமாகி, அதன்பின்னர் குதுப்ஷாகி வம்ச அரசின் தலைநகரானது. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தானான முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது. பாமினி சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குபின் இந்நகரம் வளர்ச்சியடைந்தது. 17ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது. கோஹினூர் வைரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது.

கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் என்றழைக்கப்படுகிறது. இதில் ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது. அது தர்பார் அறையிலிருந்து மலையின் கீழுள்ள அரண்மனைக்குச் செல்வதாகச் சொல்லப்படுகின்றது. இக்கோட்டையில் அரச அவையும் (Durbar Hall) உள்ளது. இதில் ஒரு மாளிகையும் உள்ளது.

கோல்கொண்டா கோட்டையில் குதுப்ஷாகியின் கல்லறையும் உள்ளது. இதில் இருவிதத் தனி வழிகள் உள்ளன. இவை கோல்கொண்டா கட்டடக்கலையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பீரங்கிகள், பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும். இக்கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது. ஔரங்கசீப் எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு 1687இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக கோல்கொண்டா கோட்டையை அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.



கோல்கொண்டா கோட்டை

பீரங்கியைப் பயன்படுத்தும் ராணுவப் படைப்பிரிவு artillery ஆகும். இதை இடம் விட்டு இடம் கொண்டு செல்லலாம். பொதுவாக ஒருவருக்கும் மேற்பட்ட நபர்களால் இவை இயக்கப்படும். வெடிமருந்து முதன்முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இது துப்பாக்கிகளிலும் பீரங்கிகளிலும் பயன்படுத்தப்பட்டது. பாபருக்கு முன்பாக இந்தியாவில் போர்களில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

### ஜாகீர்தாரிமுறை

இது ஒரு நில உடைமை முறையாகும். தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

### ஜமீன்தாரி

இச்சொல் மற்றொரு நில உடைமை முறையைக் குறிப்பதாகும். பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற வார்த்தைக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள். முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார்.

ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.

### தக்காண சுல்தானியம்

மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகியவற்றின் பெரும் பகுதியையும் கர்நாடகத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த பாமினி சுல்தானியம் ஒரு நூற்றாண்டுக் காலம் செல்வச் செழிப்போடு இருந்து பின்னர் சிதைவுற்றது. வலிமை வாய்ந்த பிரபுக்கள் கோல்கொண்டா (குதுப்ஷாஹி), பீஜப்பூர், (அடில்ஷாஹி), பெரார் (இமத்ஷாஹி) பீடார், (பரித் ஷாஹி) அகமதுநகர், (நிஜாம் ஷாஹி) ஆகிய இடங்களில் புதிய அரசுகளைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் கூட்டாகத் தக்காணச் சுல்தானியம் என்றழைக்கப்படுகிறது.

பாபரின் இறப்பைப் பற்றி ஒரு கதையுள்ளது. அவருடைய மகன் ஹுமாயூன் நோய் வாய்ப்பட்டிருந்தார். மகன் மீது கொண்டிருந்த பாசத்தால் மகன் உடல்நலம் பெற்றால் தனதுயிரை ஈவதாக பாபர் பிராத்தனை செய்தாராம். ஹுமாயூன் நோயிலிருந்து மீண்ட பல மாதங்களுக்குப் பின்னரே பாபர் காலமானார். ஆனால் பாபர் தனது மகனது உயிருக்குப் பதிலாக தனது உயிரைக் கொடுத்தார் என்ற கருத்து பிரபலமான மரபுசார் கதையாக வழங்குகிறது.

### மாலிக் ஆம்பர்



எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாகக் கொண்டுவரப்பட்ட மாலிக் ஆம்பர், பல இடங்கள் மாறி இறுதியாக அகமதுநகர் அரசின் பிரதம மந்திரியான செங்கிஸ்கானிடம் வந்து சேர்ந்தார். மாலிக் ஆம்பர் அரசியல் விவேகம், ராணுவம் மற்றும் நிர்வாக விஷயங்களை செங்கிஸ்கானிடமிருந்து கற்றுக்கொண்டார். செங்கிஸ்கானின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மனைவி மாலிக் ஆம்பரை சுதந்தர மனிதராக்கினார். கடுமையான உழைப்பின் மூலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி இறுதியாகத் தென்னிந்தியச் சுல்தானியங்கள் ஒன்றின் இராணுவத் தளபதியாகவும் பகர ஆளுநராகவும் ஆனார்.

தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் பிராந்தியத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இம்முயற்சியின் பின்னே மூளையாகச் செயல்பட்டவர் மாலிக் ஆம்பர். 1626இல் மே 14இல் மாலிக் ஆம்பர் தன்னுடைய 78ஆம் வயதில் மரணமடைந்தபோது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினர்.

**முகலாயர் காலத்து ஐரோப்பியக் குடியேற்றங்கள்.**

**போர்த்துகீசியர்:** 1510இல் அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றி அதைக் கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார். தொடர்ந்து மேற்குக் கடற்கரையில் டாமன், சால்செட், பம்பாய் ஆகிய இடங்களிலும், கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கு அருகே சாந்தோம், வங்காளத்தில் ஹுக்ளி ஆகிய இடங்களிலும் போர்த்துகீசியர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

**டச்சுக்காரர்:** டச்சுக்காரர்கள் மசூலிப்பட்டினம் (1605), புலிக்காட் (பழவேற்காடு 1610), சூரத் (1616), பிமிலிபட்டினம் (1641), காரைக்கால் (1645), சின்சுரா (1653) காசிம்பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் (அனைத்தும் 1658), கொச்சி (1663) ஆகிய இடங்களில் தங்களது வணிகநிலையங்களை ஏற்படுத்தினர்.

**டேனியர்:** டென்மார்க் நாட்டினரும் இந்தியாவில் வணிகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் 1620இல் குடியேற்றத்தை நிறுவினர். வங்காளத்தில் செராம்பூர் அவர்களின் தலைமையிடமாக இருந்தது.

**பிரெஞ்சுக்காரர்:** சூரத் (1668), மசூலிப்பட்டினம் (1669), அப்போது சிறுகிராமமாக இருந்த புதுச்சேரி (1673), வங்காளத்தின் சந்தன்நகர் (1690) ஆகியவை பிரெஞ்சுக்காரரின் தொடக்ககாலக் குடியேற்றங்களாகும். பின்னர் மலபாரில் உள்ள மாஹி, சோழமண்டலக் கடற்கரையில் ஏனாம் (இரண்டும் 1725இல்), காரைக்கால் (1739) ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

**ஆங்கிலேயர்:** முதலில் கம்பெனி சூரத்தில் ஒரு வணிகச்சாவடியை நிறுவியது (1612இல் அங்கு ஒரு வணிக நிறுவனம் அமைக்கப்பட்டது). பின்னர் சென்னை (1639), பம்பாய் (1668), கல்கத்தா (1690) ஆகியவற்றைப் பெற்றது. கம்பெனி பல வணிகக் குடியேற்றங்களைப் பெற்றிருந்தாலும் கல்கத்தா வில்லியம் கோட்டையும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையும், பம்பாயிலுள்ள மாளிகையும் ஆங்கிலேயரின் மிக முக்கியமான வணிகக் குடியேற்றங்களாகும்.

## தாஜ்மஹால்



தாஜ்மஹால்

தாஜ்மஹால் முகலாயக் கட்டடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும். அது இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும். 1612இல் திருமணமானதில் தொடங்கி 1631இல் குழந்தைப்பேறின் போது மரணமடையும் வரை இணைபிரியாமல் உற்ற துணையாய் இருந்த தனது மனைவி மும்தாஜுக்கு அழியாப் புகழை அளிப்பதற்காக ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினார். பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமைக் கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் இவ்வளாகத்திற்கான வரைபடத்தைத் தயாரித்த பெருமை இக்காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும். இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் (மினார் என்றழைக்கப்படும் நான்கு கோபுரங்கள்) ஆகிய அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தனித்தன்மை வாய்ந்ததாக வடிவமைக்கப்பட்டது. 1632இல் கட்டிட வேலைகள் தொடங்கின. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப்பணியை 1638–39இல் முடிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர். அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643இல் முடிவடைந்தன. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1647 வரை தொடர்ந்தது.

## கோல்கும்பாஸ்

1480 முதல் 1686 வரை பீஜப்புரை (தற்போதைய விஜயபுரம்) ஆட்சி செய்த அடில்ஷாஹி மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கட்டடம் ஒரு புகழ்பெற்ற தர்காவாகும். வட்ட வடிவக் குவிமாட வடிவிலான கோல்கும்பாஸ் அடில்ஷாஹி (1627–1656) வம்சத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அடர் சாம்பல் நிறக் கருங்கற்களால் கட்டப்பட்ட இதிலுள்ள 4 மூலைகளும் எண்கோண வடிவில் அமைந்துள்ளன. இக்கட்டடத்தின் மாடிகள் அழகானதாகவும் சாளரங்களைக் கொண்டுமுள்ளன. கோல்கும்பாஸ் உலகின் இரண்டாவது பெரிய குவிமாடக் கட்டடமாகும். (முதலிடம் ரோம் நகரின் புனித பீட்டர் தேவாலயம்.) உயரமான இக்கட்டடம் 135 அடி சராசரி அளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் 178 அடி உயர தளமேடை கொண்டதாகவும் உள்ளது. இதில் முகமது அடில்ஷா அவர் மனைவி அருஸ்பீபி, அவர் மகள், பேரன், பேரனின் பிரிய மனைவி ரம்பா ஆகியோரின் ஐந்து கல்லறைகள் உள்ளன.

"(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை. அமைப்புகள், சடங்குகள், வகுப்பு வேறுபாடுகள், ஆகியவற்றுக்கு எதிரான தனது போராட்டத்தைப் பொறுத்த அளவில் வழக்கத்தில் உள்ள கொள்கைக்கு மாறானதாக அது அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் பிராமண வகுப்பைச் சாராமல் சமூகத்தின் அடிநிலையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்" – நீதிபதி ரானடே

பேஷ்வா என்ற பாரசீக சொல்லின் பொருள் "முதன்மையான" அல்லது "பிரதம அமைச்சர்" என்பதாகும்.

சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது. மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள், 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு–மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து ஆகியன மோடி எழுத்துவடிவ ஆவணங்களாக அமைந்துள்ளன. மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.



சரஸ்வதி மஹால்

ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன. சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின. ஆசிரியர்கள் தாங்களாகவே இலவசமாக மூன்று பள்ளிகளை நடத்தினார்கள். மிக முக்கியமான புனிதத்தல வழித்தடங்களில் அமைந்திருந்த பதிமூன்று சத்திரங்கள் மூலமாக யாத்ரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவும் உறைவிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

கர்நாடகம் என்பது உண்மையில் கன்னடமொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதியைக் குறிப்பதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இது மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள இன்றைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, தெற்கு ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இப்பகுதிகளை ஆற்காட்டு நவாப் கட்டுப்படுத்தினார்.

காலக்கோடு

| | |
|---|---|
| முதலாம் பானிப்பட் போர் | 1526 |
| கான்வா போர் | 1527 |
| சந்தேரிப் போர் | 1528 |
| காக்ரா போர் | 1529 |
| பாபரின் இறப்பு | 1530 |
| சௌசாப் போர் | 1539 |
| கன்னோசி போர் | 1540 |
| ஷெர்ஷாவின் இறப்பு | 1545 |
| இரண்டாம் பானிப்பட் போர் | 1556 |
| அக்பர் குஜராத்தைக் கைப்பற்றுதல் | 1573 |
| ஹால்டிகாட் போர் | 1576 |
| அக்பரின் இறப்பு | 1605 |
| ஔரங்கசீப்பின் இறப்பு | 1707 |

உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

**ராஜா தேசிங்கு:** மராத்திய அரசர் ராஜாராம் முகலாயப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ராய்கரிலிருந்து தப்பியோடி செஞ்சியில் அடைக்கலம் புகுந்தார். படைத்தளபதி சுல்பிகர்கான் தலைமையிலும், பின்னர் தாவுத்கான் தலைமையிலும் அவரைத் தொடர்ந்து சென்ற முகலாயப் படைகள் செஞ்சியைக் கைப்பற்றின. செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் பன்டேலா ரஜபுத்திர தலைவர் சுவரூப் சிங் செஞ்சிக்கோட்டையின் (கோட்டை இராணுவத்தின் தலைவர்) கிலாதாராக 1700இல் பணியில் அமர்த்தப்பட்டார். அதன் பிறகு சுவரூப் சிங் செஞ்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். 1714இல் அவர் மறைந்த பிறகு அவரது மகன் தேஜ் சிங் (தேசிங்கு) செஞ்சியின் ஆளுநராக பொறுப்பேற்றார். முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்–உல்–லா கானின் கோபத்திற்கு ஆளானார். அதனைத் தொடர்ந்து நடந்த சண்டையில் 22 வயதே ஆன ராஜா தேசிங்கு கொல்லப்பட்டார். அவரது இள வயது மனைவி உடன்கட்டை ஏறினார். ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது..




செஞ்சிக்கோட்டை

காலக்கோடு

| | |
|---|---|
| சிவாஜியின் பிறப்பு | 1627 |
| சிவாஜி சூரத் நகரைத் தாக்குதல் | 1664 |
| புரந்தர் உடன்படிக்கை | 1665 |
| சிவாஜி முடிசூட்டப்படுதல் | 1674 |
| சிவாஜியின் இறப்பு | 1680 |
| மூன்றாம் பானிப்பட் போர் | 1761 |
| முதல் ஆங்கிலேய–மராத்தியப் போர் | 1775–1782 |
| இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப் போர் | 1803–1806 |
| மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் | 1817–1819 |
| இரண்டாம் சரபோஜி மறைவு | 1832 |

1623இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள், போர்த்துகீசியர், ஜப்பானியர் அடங்கிய இருபது பேர்களை டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர்கள் இந்தோனேசியாவிலுள்ள அம்பாய்னா என்னும் தீவில் சித்திரவதை செய்து கொன்றனர். இது அம்பாய்னா படுகொலை என்றழைக்கப்படுகிறது.





அம்பாய்னாப் படுகொலை

இக்காலத்தில் நிறுவனம் (factory) என்பது அயல்நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடம் என்னும் பொருளைப் பெற்றது.

லெய்டன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளரான வில் ஓ டிஜிக் (Wil O Dijk) என்பார் ஒரு ஆய்வுக்கட்டுரையில், இங்கிருந்தும் வங்காள விரிகுடாப் பகுதிகளிலிருந்தும் டச்சுக் கப்பல்களில் ஏற்றி அனுப்பப்பட்ட அடிமைப் பயணிகளின் பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார். 1621 ஜூன் முதல் 1665 நவம்பர் வரை மொத்தம் 26,885 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடிமைகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 1379 நபர்கள் உயிரிழந்தனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகளால் உருவான பஞ்சம் போன்ற காரணங்களால் சோழமண்டலத்தில் அடிமை ஏற்றுமதி பெருகியது என அவ்வாய்வாளர் மேலும் குறிப்பிடுகின்றார்.

"நாங்கள் கடந்து சென்ற கிராமப்புறப்பகுதி (புதுச்சேரிக்கு வெளியேயுள்ள பகுதி) மிக நன்றாக விவசாயம் செய்யப்பட்டிருந்தது. மிக அழகாகவும் இருந்தது. அரிசி ஏராளமாகக் காணப்பட்டது. எங்கே நீர் இருந்ததோ அங்கே பருத்தி விளைவிக்கப்பட்டது." புதுச்சேரி நிலப்பரப்பை குறித்து பிரான்ஸிஸ் மார்ட்டின் தனது நாட்குறிப்பில் எழுதியது.

### நாரிஸ் தூதுக்குழு

இங்கிலாந்து அரசர் மூன்றாம் வில்லியம் சர் வில்லியம் நாரிஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். அவர் 1698இல் ஔரங்கசீப்பை சந்தித்தார். ஆங்கிலேயக் குடியேற்றங்கள் மீது ஆங்கிலேயரின் முழுமையான கட்டுப்பாட்டைப் பெறுவதும், ஏற்கனவே பெறப்பட்ட சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்துவதும், வணிக உரிமைகளை மேலும் நீட்டிப்பதும் இச்சந்திப்பின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இவ்வேண்டுகோள் 1714–1717 ஆண்டுகளில் சுர்மன் என்பவரின் தலைமையின் கீழ்வந்த தூதுக்குழு முகலாயப் பேரரசர் பருக்சியாரைச் சந்தித்தபோதுதான் ஏற்கப்பட்டது. சுர்மன் வணிக உரிமைகள் தொடர்பான அரசரின் ஆணையை பருக்சியாரிடமிருந்து பெற்றார். இவ்வாணை குஜராத், ஹைதராபாத், வங்காளம் ஆகிய பகுதிகளின் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

### ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்புகள்

ஆனந்தரங்க பிள்ளை (1709–1761) அக்காலத்தில் தலைசிறந்த வணிகராக விளங்கிய திருவேங்கடம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் பிரெஞ்சு ஆளுநர்களான டூமாஸ், துய்ப்ளே ஆகியோர் கொடுத்த ஆதரவால் புதுச்சேரியில் மாபெரும் வணிகரானார். துய்ப்ளே இவரை தலைமை துபாஷியாகவும் (துபாஷி – இரு மொழிகள் அறிந்தவர்) தலைமை வணிக முகவராகவும் (1746) அமர்த்தினார். இது அவரை புதுச்சேரியில் பெரும் அரசியல் செல்வாக்குள்ள நபராக மாற்றியது. ஆனால் அவருடைய உண்மையான புகழ், தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கிய அவருடைய நாட்குறிப்புகளைச் சார்ந்துள்ளது. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு, முக்கியமாக துய்ப்ளே ஆளுநராக இருந்த காலப்பகுதியின் வரலாற்றுக்கு மிகவும் மதிப்புமிக்க சான்றாதாரமாகும். மேலும் அது சமகால நிகழ்வுகள் குறித்த அவருடைய பார்வை மற்றும் கருத்துக்களின் பதிவுமாகும்.

### ஆம்பூர் போர் (1749)

ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முஜாபர் ஜங், கர்நாடக அரியணைக்கு உரிமைகோரிய சந்தா சாகிப் ஆகிய இருவரும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிரெஞ்சுக் காலாட்படைகளின் உதவியோடு அன்வாருதீன் படைகளைத் தாக்கி பெருமளவு சேதத்தை ஏற்படுத்தினர். போரில் அன்வாருதீன் கொல்லப்பட்டார். சந்தா சாகிப் நவாபாக ஆற்காட்டினுள் நுழைந்தார். இதே சமயத்தில் அன்வாருதீனின் மகனான முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றார்.

வங்காள நவாப்பால் கைது செய்யப்பட்ட 146 ஐரோப்பியர் 18க்கு 15 அடி அளவுள்ள ஓர் அறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர்களில் 23 பேர் மட்டுமே உயிர்பிழைக்க மற்றவர்கள் மூச்சுத்திணறி இறந்து போனதாகவும் பழி சொல்லப்பட்டது. இருட்டறைத் துயரம் (Black Hole Tragedy) என ஆங்கிலேய ஆவணங்களில் சுட்டும் இந்நிகழ்வின் உண்மைத் தன்மை குறித்து வரலாற்று அறிஞர்களிடையே விவாதம் நடைபெறுகிறது.



சிராஜ்–உத்–தௌலா

ராபர்ட் கிளைவ் 1725 செப்டம்பர் 29இல் பிறந்தார். அவருக்குக் கல்வியில் ஆர்வமில்லை. படிப்பில் ஆர்வமின்மை, ஒழுக்கமின்மையால் மூன்று பள்ளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். மேலும் சண்டைக்காரன் என்ற அவப்பெயரையும் பெற்றார். அவருடைய நடத்தையால் வெறுப்புக் கொண்ட அவரின் தந்தை அவரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தர் பணியில் அமர்த்தி இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். கிளைவ் சென்னை மாகாண ஆளுநராக உருவானார். முதல்முறை ஆளுநராக இருந்தபோது (1755–60) பிளாசிப் போரில் வெற்றிபெற்று அதன்மூலம் இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசிற்கு அடித்தளமிட்டார். இரண்டாவது முறை 1764–1767 ஆளுநராக இருந்தபோது பக்சார் பேரில் வெற்றி பெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமைகொள்ளச் செய்தார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் போது மிகப் பெரிய செல்வராக வெளியேறினார். அவரின் தனிப்பட்ட சொத்தாக 2,34,000 பவுண்டுகள் இருந்தது. அது தவிர வங்காளத்திலுள்ள அவரது ஜாகிர் மூலம் 27,000 பவுண்டுகள் வருடாந்திர வாடகை வருவாயைப் பெற்றார். அவர் இங்கிலாந்து திரும்பியபோது தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்துப் பாராளுமன்ற விசாரணையை எதிர் கொண்டார். கிளைவ் தன் மீதான குற்றசாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டபோதிலும் தற்கொலை செய்து கொண்டார்.

1772 வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தலைவர் ஆளுநரே ஆவார் (வில்லியம் கோட்டையிலோ ஜார்ஜ் கோட்டையிலோ வீற்றிருப்பார்). வில்லியம் கோட்டையில் ஆளுநராகப் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டத்தின் (1773) மூலமாக கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார். கவர்னர் ஜெனரல் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் மன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். 1833 பட்டயச் சட்டம் மூலமாக அப்பதவி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்று நிலையேற்றம் பெற்றது. அப்பதவியும் இயக்குநர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, பதவி வகிப்பவர் இயக்குநர் மன்றத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கடமையுமிருந்தது. 1857 பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசின் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து இங்கிலாந்து அரசு நேரடியாக எடுத்துக்கொள்ள வகைசெய்த 1858இன் 'விக்டோரியா ராணியாரின் பிரகடனம்' முதன்முறையாக அரசப் பிரதிநிதி (வைஸ்ராய் மற்றும் கவர்னர் ஜெனரல்) என்ற சொற்றொடரைக் கையாண்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரலாக கானிங் நியமிக்கப்பட்டார்.

## காலக்கோடு

| | |
|---|---|
| முதல் கர்நாடகப் போர் | 1746–48 |
| இரண்டாம் கர்நாடகப் போர் | 1749–54 |
| ஆம்பூர் போர் | 1749 |
| மூன்றாம் கர்நாடகப் போர் | 1756–63 |
| வந்தவாசிப் போர் | 1760 |
| பிளாசிப் போர் | 1757 |
| பக்சார் போர் | 1764 |

வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1833) மகல்வாரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நிலவருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரோடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்பவரிடமிருந்தே வசூலிக்கப்பட்டது.

பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே இருப்புப்பாதை 1853ஆம் ஆண்டு அமையவும், ஹௌராவுக்கும் ராணிகஞ்சிற்கும் இடையே 1854–55ஆம் ஆண்டுகளில் அமையவும் செய்தது. தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856ஆம் ஆண்டு மதராஸுக்கும், அரக்கோணத்திற்கும் இடையே அமைக்கப்பட்டது. அவ்வாண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்.



பம்பாய்–தானே முதல் இருப்புப்பாதை

பட்டயம் (charter) என்பது ஒரு நாட்டின் இறையாண்மை அதிகாரத்தை மையமாகக்கொண்டு சகல அதிகாரங்களும், சலுகைகளும் உள்ள ஒரு வணிக நிறுவனத்தையோ, பல்கலைக்கழகத்தையோ, நகரத்தையோ உருவாக்க வழங்கப்படும் சட்டமாகும். கிழக்கிந்தியக் கம்பெனி, மகாராணி எலிசபெத் 1600இல் வழங்கிய பட்டயத்தின் மூலம் துவங்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக 1773ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமானது. பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட 1853ஆம் ஆண்டின் பட்டயச்சட்டமே கடைசியானது ஆகும்.

தாமஸ் மன்றோ: தாமஸ் மன்றோ 1780 இல் மதராஸ் வந்தடைந்தார். முதல் பன்னிரெண்டு வருடங்கள் அவர் ஒரு படை வீரராக மைசூர் போரில் பங்கேற்றார். அவர் பாரமஹால் பகுதியில் (சேலம் மாவட்டம்) 1792 முதல் 1799 வரையிலும், கன்னட பகுதியில் 1799 முதல் 1800 வரையிலும் பணியிலிருந்தார். பிரித்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான கடப்பா, கர்னூல், சித்தூர், அனந்தபூர் ஆகியவற்றிற்கு ஆட்சியராக பணி புரிந்தார். இக்காலத்தில்தான் அவர் இரயத்துவாரி முறை பற்றி யோசிக்கலானார். அவர் 1820 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்று அதன் பின் ஏழு வருடங்கள் சேவையாற்றினார். அப்போது 1822 ஆம் ஆண்டில் இரயத்துவாரி முறையை செம்மையாக அறிமுகப்படுத்தி செயலாட்டினார். அவர் ஆளுநராக இருந்த காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு கல்விக்கான செலவீனங்களை எதிர்காலத்திற்கான முதலீடாகவே கருதினார். அவர் நிர்வாகத்தில் இந்தியர்கள் பெருமளவில் பங்காற்றுவதை ஆதரித்தார். அவர் ஜூலை 1827 ஆம் ஆண்டு கர்னூலில் அமைந்துள்ள பட்டிக்கொண்டாவில் காலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். மக்களிடையே பிரபலமாகியிருந்த ஆளுநரான அவரின் நினைவாக பல நினைவிடங்கள் எழுப்பப்பட்டதோடு, குழந்தைகள் பலருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து அவரது சிலை வடிவமைக்கப்பட்டு 1839 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.



தாமஸ் மன்றோ

மாகாணம் (Presidency) என்பதற்கும் மாநிலம் (Province) என்பதற்குமான வேறுபாடு: கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும். அவ்விதத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும். பின்னர் இம்மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம் போன்ற பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டன.

அன்றைய சென்னை மாகாணத்தின் குண்டூர் மாவட்டத்தில் 1833ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் பற்றிய ஒரு நேரடிப் பார்வையாளரின் (ஆங்கிலேயர்) கூற்று வருமாறு: மிகுந்த நெருக்கடியான சூழலில் மனிதர்கள் எத்தகைய அருவருப்பான உணவை உட்கொள்வார்கள் என்பதை யோசிக்கவே மிகவும் அச்சமாக உள்ளது. ஏனென்றால் உயிர் பிழைத்த சிலர் ஒரு செத்த நாயையும் குதிரையையும் பேராசையோடு சுவைப்பதைக் கண்டேன். மற்றொரு சமயம் ஒரு துரதிருஷ்டமான கழுதை கோட்டையை விட்டு வெளியேறிய அக்கணத்திலேயே அதன் மீது ஓநாய்கள் போல் பாய்ந்து முன்னங்கால், பின்னங்கால் வேறுபாடில்லாமல் பாய்ந்து அங்கேயே கொன்று சுவைத்ததைக் கண்டேன்.

இங்கிலாந்து மக்களவையின் தேர்வுக்குழு (Select Committee) 1840 ஆம் ஆண்டு அங்கம் வகித்த சார்லஸ் ட்ராவல்யன் இவ்வாறு தன் பார்வையை முன் வைக்கிறார். வங்காளத்தில் முன்பு விளைந்த ஒருவகைப் பட்டு போன்ற பருத்தியிலிருந்து டாக்கா மஸ்லின் என்ற மெல்லிய துணியை நெய்வார்கள், அது போன்ற ஒன்றை பார்ப்பது அரிதாகிவிட்டது. டாக்கா நகரின் மக்கள் தொகை 1,50,000லிருந்து 30,000 அல்லது 40,000 என்ற அளவில் விழுந்து விட்டது என்பதோடு அந்நகரை மலேரியா நோயும், காடுகளும் வேகமாக சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மான்செஸ்டர் என்று கருதப்பட்டு வந்த நகரம் இன்று சிறப்பிழந்து வறுமை சூழ்ந்து சிறுத்துவிட்டது. அங்கே நிலவும் அசாதாரணச் சூழல் உண்மையில் படு பயங்கரமானது.


அபே டுபாய்

அபே டுபாய் என்ற பிரெஞ்சுக் கத்தோலிக்க சமயப் போதகர் தான் ஐரோப்பாவிற்குத் திரும்புவதற்கு முன் 1823ஆம் ஆண்டு இவ்வாறு கூறுகிறார். "கவலையும், இறப்பும் எங்கெங்கும் நிறைந்து சென்னை மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் பசியால் செத்து மடிகிறார்கள்." "வணிக வரலாற்றில் இதற்கு சமமான ஒரு துயரம் நிகழ்ந்ததில்லை. பருத்தி நெசவாளர்களின் எலும்பு இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பரப்புகளை வெளுக்கச் செய்கின்றன" என்று கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் கூறுகிறார்.

ஒப்பந்தக் கூலிமுறை: இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான, தண்டனைக்குரிய ஒப்பந்தமுறை ஆகும் இது. இம்முறையின்படி கூலி (ஒப்பந்தத் தொழிலாளரை அழைக்கும் பெயர்) சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும். பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காகத் திரிந்தாலோ உத்தரவுக்குக் கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்தக் காலம் முடியுமுன் பணியைவிட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத் தண்டனை வழங்கவோ முடியும். ஓர் அற்பப் பிரச்சனைக்காகக்கூட சட்டச் சரத்துக்களைக்காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையிலடைக்கவோ செய்தனர். கூலி உயர்வுக்காவோ அல்லது ஒப்பந்தத்தை முறிக்கவோ செய்திட சங்கம் வைத்துப் போராட ஒப்பந்தக் கூலிச் சட்டம் தோட்டத் தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை. பாரதி தனது 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலில் பெண் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டுவந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது. இந்த முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.

| | |
|---|---|
| ஒழுங்குமுறைச் சட்டம் | 1773 |
| பிட் இந்தியச் சட்டம் | 1784 |
| நிலையான நிலவரித் திட்டம் | 1793 |
| இரயத்துவாரிச் சட்டம் | 1822 |
| சதி ஒழிப்புச் சட்டம் | 1829 |
| இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து அறிமுகம் | 1853 |
| சென்னை மாகாணப் பஞ்சம் | 1876–1878 |

வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக்கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து அதை அழித்தார். நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.

யூசுப் கானின் இயற்பெயர் மருதநாயகம் பிள்ளை. அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம் சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752–54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார். ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராகப் பொறுப்பு வகித்தார். யூசுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பற்றினார். லாலியின் மதராஸ் முற்றுகை (1758–59) யின்போது யூசுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார். மதுரை கோயில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள் வசமிருந்த கோயில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.

விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது. திப்புசுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது. 'பகோடா மரத்தை உலுக்குதல்' என்ற சொலவடை இங்கிலாந்து மக்களிடையே நிலவியது. ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்கும் வாய்ப்புகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன என்ற ஐரோப்பியர்களின் அக்கால மனநிலையை இதன் மூலம் நாம் உணரலாம். தமிழில் இதனை வராகன் என்பர்.

சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937–39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது.

கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறுகிறார். டபிள்யூ. ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரியால் 1806 செப்டம்பர் 23 அன்று நிறைவேற்றப்பட்டது.

**முதலாம் ரெஜிமெண்ட்டின் முதல் படைப்பிரிவு**

| | | |
|---|---|---|
| பீரங்கி முனையில் கட்டிச் சுடப்பட்டவர்கள் | – | 1 ஹவில்தார், 1 நாயக் |
| சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் | – | 1 நாயக், 4 சிப்பாய்கள் |
| தூக்கிலிடப்பட்டவர்கள் | – | 1 ஜமேதார், 4 சிப்பாய்கள் |
| நாடு கடத்தப்பட்டவர்கள் | – | 3 ஹவில்தார்கள், 2 நாயக்குகள், 1 சிப்பாய் |

**23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு**

| | | |
|---|---|---|
| பீரங்கி வாயில் கட்டிச் சுடப்பட்டவர்கள் | – | 2 சுபேதார்கள், 2 லஸ்கார்கள் |
| தூக்கிலிடப்பட்டவர்கள் | – | 2 ஹவில்தார்கள், 1 நாயக் |

பயனெறிமுறை (Utilitarianism): மிக அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்பட்ட மகிழ்ச்சியைக் கோரிய நவீனச் சிந்தனையாளர்கள்.

சுவாமி விவேகானந்தர் இளமை, தைரியம் ஆகியவற்றின் மறுவடிவமாவார். நவீன இந்தியாவின் விடிவெள்ளி எனக் குறிக்கப்படுகின்றார். வாலன்டைன் சிரோல் என்பாரின் வார்த்தைகளில் "தனது ஆளுமைத் திறனால் வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கும் அதனுடைய புதிதாகப் பிறப்பெடுத்துள்ள தேசம் எனும் உரிமைக் கோரிக்கைக்கும் கண்கூடான அங்கீகாரத்தைப் பெற்று தந்த முதல் இந்தியர்" ஆவார்.

## காலக்கோடு

| | |
|---|---|
| மதராஸ் உடன்படிக்கை | 1769 |
| இரண்டாம் மைசூர் போர் ஆரம்பம் | 1780 |
| ஹைதர் அலியின் இறப்பு | 1782 |
| பாரிஸ் உடன்படிக்கை | 1783 |
| மங்களூர் உடன்படிக்கை | 1784 |
| வேலூர் கிளர்ச்சி | 1806 |
| இந்தியப் பெருங்கிளர்ச்சி | 1857 |
| விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை | 1858 |

| | |
|---|---|
| செராம்பூர் சமயப்பரப்புக் குழு வருகை | 1799 |
| வைகுண்ட சாமிகளின் பிறப்பு | 1809 |
| இராமலிங்க அடிகளின் பிறப்பு | 1823 |
| பிரம்ம சமாஜம் | 1828 |
| அயோத்திதாச பண்டிதரின் பிறப்பு | 1845 |
| பிரார்த்தனை சமாஜம் | 1867 |
| ஆரிய சமாஜம் | 1875 |
| அலிகர் இயக்கம் | 1875 |
| இராமகிருஷ்ண மிஷன் | 1897 |
| சீக்கிய குருத்வாராச் சட்டம் | 1922 |

எக்கஸ் – குதிரை, கழுதை, வரிக்குதிரை ஆகிய விலங்குகளை உள்ளடக்கியப் பேரினம்.

**தேரி**

தேரிகள் என்பன மணற்குன்றுகளால் உருவாக்கப்படும் கடற்கரைப் பகுதிகளாகும். இம்மண் வகை புத்துயிரூழியின் இரண்டாம் கட்டத்தில் உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தொல்தாவரவியலாளர்கள் (Palaeobotanists) பழமையான வேளாண்மையையும் மனிதருக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவையும் குறித்து ஆய்வு செய்கிறார்கள்.

## மெஹர்காரில் தொடக்க கால பல்மருத்துவம்

மனித மூதாதையருக்கு மருத்துவக் குணம் கொண்ட மூலிகைகள் குறித்த அறிவு இருந்திருக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து அவர்களால் தங்களது உடல்நலத்தைப் பராமரிக்க முடிந்தது. வாழ்க்கைமுறை மாறியபோது புதிய நோய்கள் தோன்றின. அவற்றுக்கான மருந்துகளைக் கண்டறிய வேண்டியிருந்தது.

புதிய கற்காலத்திலிருந்து மக்கள் அரைத்த தானியங்களையும் சமைத்த உணவுகளையும் உண்ணத் தொடங்கினார்கள். இது பல் கோளாறுகளுக்கும் பிற உடல் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தது. உயிருள்ள ஒரு மனிதரின் பல்லில் துளையிட்டதற்கான மிகப் பழமையான சான்று மெஹர்காரில் கிடைத்துள்ளது. இது பல்மருத்துவத்துக்கான ஒரு முகவுரையாகத் தோன்றுகிறது. பொ.ஆ.மு. 5500–7000க்கு உட்பட்ட காலத்துக்கு உரிய மண்மை போடுகள் இதற்கான சான்றுகளாக உள்ளன.



புதியகற்கால களிமண்

| பொருள் | நகரம் |
|---|---|
| சங்கு | நாகேஷ்வர், பாலகோட் |
| வைடூரியம் | ஷார்டுகை |
| கார்னிலியன் (மணி) | லோத்தல் |
| ஸ்டீட்டைட் (நுரைக்கல்) | தெற்கு ராஜஸ்தான் |
| செம்பு | ராஜஸ்தான், ஓமன் |

ரோரி செர்ட்: இந்தப் படிகக்கல் பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதியில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.

## ஜென்ட் அவெஸ்தா

ஜென்ட் அவெஸ்தா எனப்படும் இப்பாரசீக/ஈரானிய நூல் ஜொராஸ்டிரிய மதத்தைச் சேர்ந்த நூலாகும். இந்தோ-ஈரானிய மொழிகளைப் பேசிவந்த மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு, அவர்களின் கடவுள்கள் குறித்து இந்நூல் பல செய்திகளைக் கூறுகிறது. இந்தியாவின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளைப் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள சொற்கள் வேதநூல்களின் சமஸ்கிருதச் சொற்களோடு மொழி ஒப்புமை கொண்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே அமைந்திருந்த ஆரியர்களின் தொடக்ககால வாழிடங்கள் பற்றி அறிந்துகொள்ள ஏதுவான துணைச்சான்றுகளை இந்நூல் கொண்டுள்ளது.

## சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்

இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகரமயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும்.

சிந்து நாகரிகத்தின் தோற்றமும் தோற்றுவித்தவர்கள் குறித்த செய்திகளும் விவாதத்துக்கு உரியனவாகவே உள்ளன. சிந்து எழுத்துகளின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை. தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்ட வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்துக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவுவதற்கான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடைக்கற்காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உறுதியானதொரு முடிவுக்கு வர இன்னும் அதிக ஆய்வுகள் தேவை.

பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

**தீக்கோழி முட்டை ஓடுகள்**

இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலப் பண்பாடு நிலவிய இடங்களில் தீக்கோழிகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பறவையின் முட்டை ஓடு மணிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாட்னேயில் கிடைத்த தீக்கோழி முட்டை ஓட்டின் காலம் பொ.ஆ.மு. 25,000 எனக் கணிக்கப்படுகிறது. பிம்பெட்கா, பாட்னே ஆகிய இடங்களிலும் தீக்கோழி முட்டை ஓடுகள் கிடைத்துள்ளன.




கருப்பு, சிவப்பு வண்ண மட்கலன்கள், மனித எலும்புச் சான்றுகள் மற்றும் இரும்புப் பொருட்களுடன் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி அருகில் உள்ள வடமலைக்குண்டாஎனும் இடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு சில கற்பலகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகள் பழமையான குத்துக்கல் திருப்பூர் மாவட்டம் சிங்காரிபாளையம் குந்தலம் அருகே நடந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது; இது, உப்பாறு நதிக்கரையில் பண்டைய கால மனிதர்களின வாழிடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

மொழியியல் ஆய்வாளர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் மொழியை, அது எழுதப்பட்ட வடிவத்திலும் வாய்மொழி வடிவத்திலும் ஆய்வு செய்கின்றனர். சொற்பிறப்பியல், வரலாறு, மொழியியல், ஒப்பீட்டு மொழியியல், இலக்கிய விமர்சனம் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

ஜனா என்ற சொல்லுக்குப் பழங்குடி, இனக்குழு எனப் பொருள்

ஒரு பொதுமூதாதையரிடமிருந்து உருவாகும் தலைமுறைகள் வம்சாவளி/ கொடிவழி/ பரம்பரை எனப்படும்.

சத்யமேவ ஜயதே (வாய்மையே வெல்லும்) என்ற சொற்றொடர் முண்டக உபநிஷத் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

காலனிய கால அறிஞர்கள் பண்டைய இந்திய இலக்கியங்களின் மீது ஆர்வம் கொள்வதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே, 1657இல் மொகலாய இளவரசரான தாராசுகோ உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

### இரும்புத்தொழில்நுட்பத்தின் தாக்கம்: பல்வேறு பார்வைகள்

- தெற்கு பிகாரில் கிடைக்கும் இரும்புக் கனிமத்தைத் தேடி அடைந்து, அதன் மீது ஏக போகத்தினை நிலைநாட்டும் நோக்குடன் இந்தோ-ஆரியர்கள் கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தார்கள். மகத அரசு அரசியல் மேலாதிக்கம் பெறுவதற்கு இரும்புத்தாது வளமே காரணமாக இருந்தது – டி.டி.கோசாம்பி
- கங்கை வடிநீர்ப் பகுதியில் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைய இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் வழிவகுத்தன – ஆர்.எஸ்.சர்மா
- காடுகள் அழிக்கப்படவும் உபரி வேளாண் உற்பத்தி ஏற்படவும் இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் காரணம் என்பது கட்டுக்கதை. ஏனெனில், 16, 17 ஆம் நூற்றாண்டு வரைகூட கங்கைச்சமவெளி அடர்ந்த வனப்பகுதியாகவே இருந்தது – மக்கன் லால்
- கங்கைப்பகுதியின் காடுகள் நெருப்பின் மூலமாகவும் அழிக்கப்பட்டிருக்கலாம் – ஏ.கோஷ், நிஹாரஞ்சன் ரே

"மக்களின் அறிவுசார் ஆர்வத்தை அடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களின் மனம் அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறது. இத் தவிர்க்கமுடியாத எதிர்வினைகள் எல்லாவிதமான முறைசார்ந்த அதிகாரங்களையும் பொறுத்துக்கொள்ள இயலாத தன்மையாக வெளிப்படுகிறது. அது சடங்குரீதியான மதத்தின் கட்டுப்பாட்டால் காலம்காலமாக ஒடுக்கப்பட்ட வாழ்விலிருந்து ஆவேசமாக விடுபடும் உணர்வாக உள்ளது"
– இந்தியத் தத்துவ மேதை குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

### தமிழ்நாட்டில் ஆசீவகர்கள்

மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகியவை ஆசீவகக் கொள்கை குறித்து குறிப்பிடுகின்றன. நீலகேசியின் உண்மைக்கான தேடல் அவளை புத்தரிடமும், புராணனிடமும் இட்டுச் செல்கிறது. புராணன் ஆசீவகர்களின் தலைவர். சோழர்கள் ஆசீவகர்கள் மீது வரி விதித்ததாகக் கூறப்படுகிறது.

#### மும்மணிகள் (திரிரத்தினம்)

சமண மதத்தினர் சில கடுமையான சட்டதிட்டங்களுக்கு உட்பட வேண்டும். அனைத்து சமணர்களும் கடைபிடிக்க வேண்டிய மூன்று கொள்கைகள் மும்மணிகள் (திரிரத்தினங்கள்) என்று அழைக்கப்படுகின்றன. அவையாவன :

1. நன்னம்பிக்கை (சம்யோக்-தர்ஷனா)
2. நல்லறிவு (சம்யோக்-ஞானா)
3. நன்னடத்தை (சம்யோக்-மஹாவ்ரதா)

#### ஐம்பெரும் சூளுரைகள்

துறவிகள் ஐம்பெரும் சூளுரைகளை (பஞ்ச-மஹாவ்ரதா) மேற்கொள்ள வேண்டும்.

1. கொல்லாமை. (அஹிம்சா); 2. கள்ளாமை (அஸ்தேயா); 3. பொய்யாமை (சத்யா); 4. புலனடக்கம் (பிரும்மச்சரியா); 5. பொருள் பற்றின்மை (அபரிக்ரஹா)

## பசித்த புலி : ஒரு ஜாதகக் கதை

நல்லொழுக்கத்திற்கும், ஆன்மீக நெறிக்கும் பெயர் பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்த போதிசத்துவர் சிறந்த அறிஞராக, ஆசிரியராக உயர்ந்தார். செல்வம் பற்றிய ஆசை எதுவும் இன்றி, அவர் கானகம் சென்று துறவியாக வாழ்ந்தார். கானகத்தில் அவர் அப்போதுதான் பிரசவித்திருந்த பசியோடிருந்த புலியைப் பார்த்தார். புலி பசியில் தான் ஈன்ற குட்டிகளில் ஒன்றையே தின்ன இருந்தது. அருகில் வேறு உணவு எதுவும் இல்லாத நிலையில், போதிசத்துவர், இரக்கம் மேலிட, தனது உடலையே அதற்கு உணவாக அளித்தார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஈரானில் உள்ள பெர்சிபோலிசில் காணப்படும் முதலாம் டாரியஸின் கல்வெட்டில்தான் "இந்து" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது. பொதுவாக நதியையும், குறிப்பாக சிந்து நதியையும் குறிக்கும் "சிந்து" என்ற சொல் பாரசீகத்தில் "இந்து" வானது. கிரேக்கர்கள் Sindu என்பதில் உள்ள S ஐ நீக்கிவிட்டு, Indu என்றார்கள். அது பின்னர் 'ஹிந்து' என்றானது. பின்னர் அதிலிருந்து 'இந்தியா' வந்தது.

பரந்து பட்ட, அதிகார வர்க்கத்தை உருவாக்கவும், நிர்வாகத்தையும் ராணுவத்தையும் நடத்த நிதிஆதாரத்தையும் ஆட்களையும் திரட்டவும் ஒரு புதிய நிர்வாக அமைப்பு ஒரு மையப்படுத்தப்பட்ட அரசிற்கு தேவைப்பட்டது. வரிவிதிப்பின் மூலம் அரசின் செலவுகளுக்குத் தேவையான நிதியைத் திரட்ட ஒரு வருவாய் நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. இத்தகைய ஒரு அரசியல் உருவாக்கம் நிர்வாக மையங்களாக, நகரங்களை மாற்றுவதற்கு இட்டுச் சென்றது. இவை கிராமங்கள், ஊரகப் பகுதிகளிலிருந்து மாறுபட்டவை. பேரரசை விரிவுபடுத்தவும் பாதுகாக்கவும் ஒரு பெரிய நிலையான ராணுவம் தேவைப்பட்டது.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பனிரெண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பாலர்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்டு கிழக்கு இந்தியாவை ஆண்டனர். அவர்களது நாட்டில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகள் பயன்பாட்டில் இருந்தன. பாலர்கள் புத்த மதத்தின் மகாயான பிரிவைப் பின்பற்றினர்.

## சமஸ்கிருதத்திற்கும் பாரசீகத்திற்கும் உள்ள தொடர்பு

ரிக் வேதத்திற்கும் அவஸ்தாவிற்கும் பல மொழியியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆரியர்கள் என்ற சொல்லைப் பண்டைக்கால பாரசீகர்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்திய மொழி-பண்பாட்டு ஆய்வாளர் தாமஸ் பரோவின் கூற்றின்படி, உச்சரிப்பு மட்டும் காலப்போக்கில் மாறியிருக்கலாம். பொ.ஆ.மு. 1380ஐச் சேர்ந்த போகஸ் கோய் (வடகிழக்கு சிரியா) கல்வெட்டு ஒன்று ஒரு ஹிட்டைட் அரசனுக்கும், மிட்டன்னி அரசனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. அது சில ரிக்வேத கடவுளர்களான இந்தரா, உருவ்னா (வருணா), மித்ரா, நஸதயா (அஸ்வினி) ஆகிய பெயர்களைக் குறிப்பிடுகிறது.

### ஸ்தூபிகள்

ஸ்தூபி என்பது புதை மேடுகளின் மேல் களிமண்ணால் கட்டப்பட்டதாகும். இறந்தோரை எரித்த சாம்பல் இங்கு வைக்கப்படும். தொடக்கத்தில் புத்தரின் அஸ்தி எட்டு ஸ்தூபிகளில் வைக்கப்பட்டன. இவ்வாறு பௌத்தத்தின் புனிதக் கட்டடக்கலை தோற்றம் பெற்றது. அரைக்கோள வடிவமுள்ள ஸ்தூபி பேரண்டத்தைக் குறிக்கின்றது. அத்துடன் புத்தர் ஆன்மீக உலகின் பேரரசர் என்பதையும் குறிக்கிறது. ஸ்தூபிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்டப் பாதையில் பக்தர்கள் வலம் வருவர்.

### சங்க காலப் பெண்பாற் புலவர்

சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களில் முப்பது பெண்பாற் புலவரும் அடங்குவர். அவர்களுள் அவ்வையார், அல்லூர் நன்முல்லையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கியப் பெண்பாற் புலவர்களாவர்.

| காலக்கோடு | |
|---|---|
| முக்கிய நிகழ்வுகள் | ஆண்டுகள் |
| சைரஸ் (பாரசீகப் பேரரசர்) படையெடுப்பு | பொ.ஆ.மு. 530 |
| நந்தர்கள் மகதத்தில் தங்களது பேரரசைத் தோற்றுவித்தல் | பொ.ஆ.மு. 362 |
| அலெக்சாண்டரின் படையெடுப்பு | பொ.ஆ.மு. 326 |
| சந்திரகுப்தர் மௌரியப் பேரரசைத் தோற்றுவித்தல் | பொ.ஆ.மு. 321 |
| சந்திரகுப்தரால் செலியுகஸ் தோற்கடிக்கப்படுதல் | பொ.ஆ.மு. 301 |
| சந்திரகுப்தருக்குப் பின் பிந்துசாரர் ஆட்சியில் அமர்தல் | பொ.ஆ.மு. 297 |
| அசோகர் தலைமையில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடியது | பொ.ஆ.மு. 250 |
| அசோகரின் மறைவு | பொ.ஆ.மு. 231 |

### காந்தாரக் கலை

பண்பாட்டுத் தாக்கங்கள் சங்கமிக்குமிடத்தில் அமைந்துள்ள காந்தாரம் கிரேக்க மற்றும் ரோமானியப் பண்பாடுகளின் செல்வாக்குக்கும் உட்பட்டது. பொ.ஆ. முதல் நூற்றாண்டில் காந்தாரக் கலை வடிவங்கள் வளர்ச்சியடைந்தன. குஷாணப் பேரரசுக் காலத்தில், ரோமுடனான அதன் தொடர்புகளினால் ரோமானியக் கலை நுட்பங்கள் இந்தியக் கலை நுட்பங்களோடு கலந்து, வட மேற்கு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டன. ஆன்ம நிலையில் – கண்கள் பாதி மூடிய நிலையில் – தியானத்திலிருக்கிற புத்தரைச் சித்தரித்ததற்காகக் காந்தாரக் கலை புகழ்பெற்றது.

குப்தர் அதிக எண்ணிக்கையில் தங்க நாணயங்களையும், ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையில் வெள்ளி, செம்பு நாணயங்களையும் வெளியிட்டனர். எனினும் குப்தர் காலத்திற்குப் பின்னர் தங்க நாணயங்களின் சுழற்சி குறைந்துபோனது.

| | |
|---|---|
| க்ஷேத்ரா | பயிரிடக்கூடிய நிலம் |
| கிலா | தரிசு நிலம் |
| அப்ரஹதா | காடு அல்லது தரிசு நிலம் |
| வாஸ்தி | குடியிருக்கத் தகுந்த நிலம் |
| கபடசஹாரா | மேய்ச்சல் நிலம் |

பண்டைய காலத்தில் உருவான ஸ்மிருதிகள் நல்லொழுக்கம், அரசியல், பண்பாடு என்று பல்வேறு கருப்பொருள்கள் குறித்துப் பேசிய சமய நூல்களாகும். தர்மசாஸ்திரங்களும் புராணங்களும் இந்த இலக்கியக்கட்டமைப்பின் மையப்பொருளை வடிவமைத்தன.

சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களின் குடும்பம் வம்சாவளி ஆகியன குறித்து எக்குறிப்பும் காணப்படாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர். பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதி காலத்தில் களப்பிரர்கள் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

### மதுரா பாடலிபுத்திரம் குறித்து பாஹியான்



மதுராவில் மக்கள்தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் தமது குடும்பத்தைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.... அரசருக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் மட்டும்தான் தானியத்தில் ஒரு பகுதியை அரசருக்குத் தரவேண்டும். ... சூழலைப் பொறுத்து குற்றவாளிகளுக்கு மிதமாகவோ, கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது....

மீண்டும் மீண்டும் கலகம் செய்தால், குற்றமிழைத்தால், வலது கை துண்டிக்கப்படும்... நாடு முழுவதும் மக்கள் எந்த உயிரினத்தையும் கொல்வதில்லை. எந்த மதுபானத்தையும் அருந்துவதில்லை.... பாடலிபுத்திரத்தில் வசிப்பவர்கள் நல்ல பணக்காரர்கள்; வசதியானவர்கள்; ஈகைக் குணத்தில் ஒருவரோடொருவர் போட்டி போடுபவர்கள். ...

நகரங்களில் வைசியக் குடும்பத்தினர் தர்மம் செய்வதற்கும் மருத்துவத்திற்கும் சத்திரங்களைக் கட்டியிருக்கிறார்கள். அனைத்து ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள், குழந்தையில்லாதவர்கள், அங்கவீனர்கள், ஊனமுற்றவர்கள் என அனைவருக்கும் அனைத்துவிதமான உதவிகளும் செய்யப்படுகின்றன.

பதினெட்டு முக்கிய புராணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளில் பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், ஸ்கந்த புராணம், சிவமகா புராணம், மார்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், மத்ஸ்ய புராணம், ஸ்ரீமத்பகவத் புராணம் ஆகியன நன்கு அறியப்பட்டவையாகும்.

ஹுணர்களின் தோற்றம் குறித்து உறுதியாக எதுவும் தெரியவில்லை. ரோமானிய வரலாற்றாளர் டாசிடஸின் கூற்றுப்படி, அவர்கள் காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இனக்குழுக்கள். ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். அட்டில்லாவின் தலைமையில் திரண்ட இவர்கள் ஐரோப்பாவில் கொடுங்கோண்மைக்குப் பெயர் பெற்றவர்கள். வெள்ளை ஹுணர்கள் என்று அழைக்கப்பட்ட ஹுணர்களின் ஒரு பிரிவு மத்திய ஆசியாவிலிருந்து இந்தியா நோக்கி நகர்ந்தது. இவர்களது படையெடுப்பு குஷாணர்கள் காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பமானது.



## நிலப்பிரபுத்துவம்

நிலப்பிரபுத்துவம் என்ற சமூக அமைப்பு இந்தியாவின் மத்தியகால சமூகத்தின் ஒரு பண்புநிலை ஆகும். வரலாற்றாளர் ஆர்.எஸ். சர்மா பின்வரும் நிலப்பிரபுத்துவ பண்புகளைப் பட்டியலிடுகிறார்: அரசர் அளிக்கும் நில மானியம், நிதி, நீதி உரிமைகளை பயனாளிகளுக்கு மாற்றித்தருதல்; விவசாயிகள், கலைஞர்கள், வணிகர்கள் மீது நில உடைமையாளர்களுக்கு உரிமை அளித்தல்; அடிக்கடி நிகழ்ந்த கட்டாய உழைப்பு நிகழ்ச்சிகள்; உபரியை அரசு எடுத்துக்கொள்ளல்; வணிகத்திலும், நாணயம் அச்சடித்தலிலும் வீழ்ச்சி; அதிகாரிகளின் ஊதியத்தை நில வருவாய் வசூல் மூலம் பெற்றுக்கொள்ள அனுமதிப்பது; சமந்தா எனப்படும் நிலப்பிரபுத்துவ துணை நிலை ஆட்சியாளர்களின் அதிகாரங்கள் அதிகரித்தல் ஆகியன.

## பல்வேறு விதமான நிலகுத்தகை முறை

| நிலகுத்தகை வகை | உரிமையின் தன்மை |
|---|---|
| நிவி தர்மா | அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம் – இம்முறை வடக்கு, மத்திய இந்தியா மற்றும் வங்கத்தில் நிலவியது |
| நிவி தர்ம அக்சயனா | நிரந்தரமான அறக்கட்டளை – பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம் |
| அப்ரதா தர்மா | வருவாயைப் பயன்படுத்தலாம். ஆனால் அதை பிறருக்குத் தானம் செய்யமுடியாது. நிர்வாக உரிமையும் இல்லை. |
| பூமிசித்ராயனா | தரிசு நிலத்தை முதன்முதலாகச் சாகுபடி நிலமாக மாற்றுபவருக்குத் தரப்படும் உரிமை. இந்த நிலத்திற்குக் குத்தகையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. |

## ஏனைய நிலக்கொடைகள்

| | |
|---|---|
| அக்ரஹார மானியம் | பிராமணர்களுக்குத் தரப்படுவது. இது நிரந்தரமானது. பரம்பரையாக வரக்கூடியது. வரி கிடையாது. |
| தேவக்கிரஹார மானியம் | கோயில் மராமத்து, வழிபாடு ஆகிய பணிகளுக்காகப் பிராமணர்கள், வணிகர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் நில மானியம். |
| சமயச் சார்பற்ற மானியம் | குப்தர்களுக்குக் கீழிருந்த நிலப்பிரபுக்களுக்குத் தரப்பட்ட மானியம். |

| வரி | அதன் தன்மை |
|---|---|
| பாகா | விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்காகும். |
| போகா | அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள் போன்றவை. |
| கரா | கிராமத்தினர் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி (இது வருடாந்திர நிலவரியின் ஒரு பகுதியல்ல) |
| பலி | ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியாக இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்டது. இது ஒரு ஒடுக்குமுறை வரி. |
| உதியங்கா | காவல் நிலையங்களின் பராமரிப்பிற்காக விதிக்கப்பட்ட காவல் வரியாக இருக்கலாம். அல்லது நீர் வரியாகவும் இருக்கலாம். எனினும், இது ஒரு கூடுதல் வரிதான். |
| உபரிகரா | இதுவும் ஒரு கூடுதல் வரிதான். இது எதற்காக வசூலிக்கப்பட்டது என்பது குறித்து அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர். |
| ஹிரண்யா | தங்க நாணயங்கள் மீது விதிக்கப்படும் வரி என்பது நேரடிப் பொருள். நடைமுறையில் இது சில குறிப்பிட்ட தானியங்களின் விளைச்சலில் ஒரு பங்கினை, அரசின் பங்காகப் பொருளாகவே அளிப்பதாகும். |
| வாத–பூதா | காற்றுக்கும் ஆவிகளுக்கும் செய்ய வேண்டிய சடங்குகளுக்காக விதிக்கப்பட்ட பல்வேறு வரிகள் |
| ஹலிவகரா | கலப்பை வைத்திருக்கும் ஒவ்வொரு உழவரும் கட்ட வேண்டிய கலப்பை வரி |
| சுல்கா | வர்த்தகர்கள் நகரத்திற்கோ துறைமுகத்திற்கோ கொண்டுவரும் வணிகச் சரக்குகளில் அரசருக்கான பங்கு. இதைச் சுங்க, நுழைவு வரிகளுக்கு ஒப்பிடலாம். |
| கிளிப்தா; உபகிளிப்தா | நிலப்பதிவின் போது விதிக்கப்படும் விற்பனை வரி |

# ஹர்ஷர்

## சான்றுகள்

### இலக்கியச் சான்றுகள்

பாணரின் ஹர்ஷ சரிதம்

யுவான் சுவாங்கின் சியூகி

### கல்வெட்டுச் சான்றுகள்

மதுபனி செப்புப் பட்டயக் குறிப்புகள்

சோன்பட்டு செப்பு முத்திரைக் குறிப்புகள்

பன்ஸ்கெரா செப்புப் பட்டயக் குறிப்புகள்

நாளந்தா களிமண் முத்திரைக் குறிப்புகள்

### கன்னோசியின் அரசராக ஹர்ஷர்

கன்னோசியின் (மௌகரி அரசின் தலைநகர்) முக்கியமானவர்கள் தங்களது அமைச்சரான போனியின் அறிவுரையின்படி ஹர்ஷரை அரியணையில் அமர அழைப்பு விடுத்தனர். தயக்கம் காட்டிய ஹர்ஷர் அவலோகிதேஷ்வர போதிசத்வரின் அறிவுரையின்படி ராஜ்புத்திரர், சிலாதித்யா ஆகிய பட்டங்களுடன் ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். ஹர்ஷரின் ஆட்சியின் கீழ் தானேஸ்வரமும் கன்னோசியும் ஒன்றாக இணைந்தன. பின்னர் ஹர்ஷர் தனது தலைநகரைக் கன்னோசிக்கு இடம் மாற்றிக் கொண்டார்.

127

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பனிரெண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பாலர்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்டு கிழக்கு இந்தியாவை ஆண்டனர். அவர்களது நாட்டில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகள் பயன்பாட்டில் இருந்தன. பாலர்கள் புத்த மதத்தின் மகாயான பிரிவைப் பின்பற்றினர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

பாணரின் ஹர்ஷ சரிதம் ஒரு அரசரின் முதல் வாழ்க்கை வரலாற்று நூலாகும். அது இந்தியாவில் புதிய இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தது.

### ஹர்ஷரின் முக்கிய நிர்வாக அதிகாரிகள்/ மேற்பார்வையாளர்கள்/ அமைச்சர்கள்

| | | |
|---|---|---|
| 1. அவந்தி | – | அயலுறவு மற்றும் போர் விவகாரங்களுக்கான அமைச்சர் |
| 2. சிம்மானந்தா | – | படைத் தளபதி |
| 3. குந்தலா | – | குதிரைப்படைத் தலைவர் |
| 4. ஸ்கந்தகுப்தர் | – | யானைப் படைத் தலைவர் |
| 5. திர்கத்வஜர் | – | அரச தூதுவர்கள் |
| 6. பானு | – | ஆவணப் பதிவாளர்கள் |
| 7. மஹாபிரதிஹாரர் | – | அரண்மனைக் காவலர்களின் தலைவர் |
| 8. சர்வகதர் | – | உளவுத் துறை அதிகாரி |

### யுவான் சுவாங்:

'பயணிகளின் இளவரசன்' என்று புகழப்படும் யுவான் சுவாங் ஹர்ஷரின் ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். பொ.ஆ. 612இல் பிறந்த யுவான் சுவாங் தனது இருபதாம் வயதில் துறவு பூண்டார். அவர் இந்தியாவில் தங்கியிருந்தபோது, வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல்வேறு புனிதத் தலங்களைப் பார்வையிட்டார். நாளந்தா பல்கலைக்கழகத்திலும் பயின்றார். புத்தர் மீதான யுவான் சுவாங்கின் ஆழமான பற்றும் பௌத்த மதத்தில் அவருக்கு இருந்த பரந்த அறிவும் ஹர்ஷரின் பாராட்டுக்குரியதாக இருந்தன. புத்தர் நினைவுச் சின்னங்களாக 150 பொருள்கள், தங்கத்திலும் வெள்ளியிலும் சந்தனத்திலும் ஆன புத்தரின் உருவச்சிலைகள், 657 தொகுதிகள் கொண்ட அரிய கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை யுவான் சுவாங் இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றார்.

ஹிரண்யகர்ப்பம் என்றால் தங்கக் கருப்பை என்று பொருள். மதகுருக்கள் விரிவான சடங்குகளை நடத்திய பின்னர் தங்கத்தாலான கருப்பையிலிருந்து வெளிவரும் நபர் மேலுலக ஆற்றல் கொண்ட உடலைப் பெற்றவராக, மறுபடியும் பிறப்பெடுத்தவராக அறிவிக்கப்படுவார். சாதவாகன வம்சத்து அரசரான கௌதமிபுத்ர சதகர்ணி என்பவர் சத்திரிய அந்தஸ்தை அடைவதற்கு ஹிரண்யகர்ப்பச் சடங்கை நடத்தினார்.

## கூரம் செப்பு பட்டயத்தில் இருந்து...

(வரி: 12) கிழக்கு மலையில் இருந்து சூரியனும் சந்திரனும் எழுவது போல, தனது இன அரசு வம்சாவளியில் இருந்து (தோன்றிய) நரசிம்மவர்மனின் பேரன்; அவர் இளவரசர்களின் மகுடங்களுக்கெல்லாம் மணிமகுடம்; அவர் தலை எதற்கும் (எங்கும்) பணிந்ததில்லை; எதிரி அரசர்களின் யானைப் படைகளை எதிர்த்து விரட்டிய சிங்கம், நரசிம்மாவால் ஆசிர்வதிக்கப்பட்ட தோற்றமுடையவர்; அவரே இளவரசராக (பூமிக்கு) வந்திருக்கிறார்; சோழர்கள், சேரர்கள், களப்பிரர்கள், பாண்டியர்களை மீண்டும் மீண்டும் தோற்கடித்துள்ளார். அவர் ஆயிரம்கரமுடையான் (ஆயிரம் கரமுடைய காத்தவராயன் போல), நூற்றுக்கணக்கான போர்களில் ஆயிரம் கரங்கள் கொண்டு போரிட்டது போல் செயல்பட்டவர்; பரியாலா, மணிமங்கலம், சுரமாரா போர்களில் வெற்றிச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் புலிகேசியின் முதுகில் பொறித்து புறமுதுகிட்டு ஓடச் செய்தார்; குடமுனி (அகத்தியர்) அரக்கன் வாதாபியை அழித்தது போல் வாதாபி நகரை அழித்தார்.

## இரண்டாம் புலிகேசியின் ஐஹொல் கல்வெட்டு

ஐஹொல் (கர்நாடகா) மேகுடி கோயில் ஒரு குன்றின் மேலுள்ளது. இச்சமணக் கோயிலின் கிழக்குச் சுவரில் 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று உள்ளது. (சக வருடம் 556: 634–635 காலத்தைச் சார்ந்தது). இக்கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர் ரவிகீர்த்தி என்ற கவிஞர். இக்கல்வெட்டு சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும். குறிப்பாக அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த இரண்டாம் புலிகேசி 'சத்யஸ்ராய' (உண்மையின் உறைவிடம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கல்வெட்டு சாளுக்கியரின் அரசவம்ச வரலாற்றை, இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்சவர்தனரைத் தோற்கடித்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**சேரர் குறித்து**

பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை கேரளா, சேர பெருமாள் அரசர்களால் ஆளப்பட்டிருந்தாலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை அவர்களது வரலாறு குறித்து ஓரளவே தெரியவந்துள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?** எல்லோரா குகைகளை 1983இல் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

1879இல் புதுச்சேரிக்கு அருகே உருக்காட்டுக்கோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினோரு செப்புப் பட்டயங்கள் கண்டறியப்பட்டன. அரசன் நந்திவர்மனின் இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமம் குறித்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கம் அரசரைப் பற்றிய சமஸ்கிருத மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமஸ்கிருத செய்யுளோடு முடிவடைகிறது.

அடிமை வம்சத்தை மம்லக் வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது, 'ஓர் அடிமை' என்பதற்கான அரபுத் தகுதிப் பெயருமாகும்.

பாரசீக வரலாற்று ஆவணங்கள், தில்லி சுல்தானியம் குறித்து மிகைப்படுத்திக் கூறுகின்றன. குறிப்பிட்ட சுல்தானின் ஆட்சியில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்த அவற்றின் கருத்துகள் எந்த விமர்சனமும் இன்றி நவீன கல்விப்புலத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன - சுனில் குமார்

அரபியரும் இரானியரும் இந்தியாவை 'ஹிந்த்' என்றும், இந்தியர்களை 'ஹிந்துக்கள்' என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு 'ஹிந்து' எனும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களைக் குறிப்பதாயிற்று.

லக்ஷ்மணர் கோயில், விஸ்வநாதர் கோயில், கந்தரியா மஹாதேவர் கோயில் உள்பட பல கோயில்களைக் கொண்ட உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோயில் வளாகம், கஜுராஹோவிலிருந்து ஆட்சிபுரிந்த புந்தேல்கந்த் சந்தேலர்களால் கட்டப்பட்டது.

கணிதவியலாளரும் தத்துவஞானியும் வானியலாளரும் வரலாற்று ஆசிரியருமான அல்-பெருனி, கஜினி மாமுதுவுடன் இந்தியா வந்தார். கிதாப்-உல்-ஹிந்த் என்ற தனது நூலை இயற்றுவதற்கு முன்பு அவர் சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார்; இந்து மத நூல்களையும் தத்துவ நூல்களையும் கற்றார். யூக்ளிடின் கிரேக்க நூலைக்கூட அவர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஆரியபட்டரின் முக்கிய நூலான ஆர்யபட்டியம் (புவி, அதன் அச்சில் சுழல்வது இரவு பகலை ஏற்படுத்துகிறது போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்) என்பதை அவர் மேலை நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். இந்தியாவுக்கும் பிற உலக நாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்.

புகழ்பெற்ற நாளந்தா பௌத்தப் பல்கலைக் கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா நூலகத்தில் இருந்த இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன.

பண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும்; இச்சொல்லுக்குப் படை அடிமை என்று பொருள். இராணுவப் பணி அனுபவம், பேரரசருடனான நெருக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். இந்த நம்பிக்கை, அவர்கள் ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கப்படுவதற்கு வழிகோலியது. வட இந்தியாவில் குரித் பண்டகன், மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இந்த அடிமைகளுக்கு சொந்தச் சமூக அடையாளம் இல்லை; இதனால் அவர்களது எஜமானர்கள் அவர்களுக்குப் புதிய பெயர்கள் சூட்டினர்; 'நிஸ்பா' என்பதையும் உள்ளடக்கிய அப்பெயர்கள் அவர்களது சமூக அல்லது பிரதேச அடையாளத்தைக் குறித்தன. அடிமைகள், தங்களது எஜமானர்களின் நிஸ்பாவைக் கொண்டிருந்தனர்; எனவே மொய்சுதீன் அடிமை, மொய்சு எனும் நிஸ்பாவைக் கொண்டிருப்பார்; சுல்தான் சம்சுதீன் இல்துமிஷின் அடிமை, ஷம்ஸி பண்டகன் என்று குறிப்பிடப்படுவார்.

∴பெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயரதிகாரியாக இருந்த புகழ் பெற்ற கான்-இ-ஜஹன், இசுலாமுக்கு மாறிய ஒரு பிராமணர். ஆதியில், கண்ணு என்று அறியப்பட்ட அவர், (தற்போதைய தெலங்கானாவின்) வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானியப் படையெடுப்பு ஒன்றின் போது சிறைப் பிடிக்கப்பட்டவர்.

ஜிஸியா என்பது இசுலாமிய அரசுகளால் அவர்களின் நிலத்தில் வாழும் இசுலாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும். இதன் மூலம் அவர்கள் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. இந்தியாவில் முதன்முறையாக இசுலாமியர் அல்லாதார் மீது ஜிஸியா விதித்தவர் குத்புதீன் ஐபக். முகலாய அரசர் அக்பர், பதினாறாம் நூற்றாண்டில் ஜிஸியாவை ஒழித்தார் என்றாலும், பதினேழாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.

இந்தியாவில் இசுலாமியர் ஆட்சியின் முக்கியத்துவம் என்னவென்றால், இசுலாமிய ஆட்சியாளர்களின் சூறையாடல்கள், அபகரிப்புகள் இருந்தாலும், நீண்ட காலம் இந்து மதத்துடன் சக வாழ்வு வாழ்வதற்கான மன ஏற்பு தொடக்க காலம் முதல் காணப்படுவதே. இந்தியாவை வென்றடக்கிய முகமது கோரி, தமது தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லக்ஷ்மியின் உருவத்தைப் பொறித்திருக்கிறார். 1325இல் முகமது-பின்-துக்ளக், சமணத் துறவிகளுக்கு அனைத்து அரசு அலுவலர்களும் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று ஒரு ஆணை வெளியிட்டார். அவரேகூட ஹோலி பண்டிகையில் பங்கெடுத்ததோடு யோகிகளுடன் நல்ல நட்புடன் இருந்திருக்கிறார்.

'பல கடவுள் வழிபாட்டாளர்களையும், இந்துக்களையும், மங்கோலியர்களையும், நாத்திகர்களையும் பஞ்சணையில் அமர வைத்து சகல மரியாதைகளும் செய்கிறார்கள்' என்று இசுலாமிய ஆட்சியாளர்கள் குறித்து பரணி வெறுப்புடன் எழுதுகிறார். மேலும், "இந்துகள் எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து கோயில்கள் கட்டிக்கொள்ளவும், திருவிழாக்கள் நடத்தவும், இசுலாமிய வேலையாட்களை வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இசுலாமியர்களுக்கு நிகராக ராய், ராணா, தாகூர், ஷா, மஹ்தா, பண்டிட் போன்ற அரசு பட்டங்கள் இந்துக்களுக்கும் வழங்கப்படுகின்றன" என்றும் பரணி எழுதுகிறார்.

### ரஸியா சுல்தானா (1236–1240)

இவர் பேரரசர் இல்துமிஷின் மகள். ரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்கிய பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான தடைகளைக் கடந்தே ரஸியா பேரரசியாகப் பதவி ஏற்றார். மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணி, இபின் பதூதாவின் கூற்றுப் படி 'குதிரை மீது ஆண்கள் சவாரி செய்வதைப் போல், கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ ரசியாவும் சவாரி செய்தார். தனது முகத்துக்கு அவர் திரையிடவில்லை'. இருப்பினும் அவர் மூன்றரை ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை அவர் குதிரை இலாயப் பணித்துறைத் தலைவராக (அமீர்-இ-அகுர்) ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினார். இது, துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. யாகுத்துக்கும் அரசி ரஸியாவுக்கும் இருந்த நெருக்கத்தைப் பெரிதுபடுத்த, பிரபுக்கள், அரசியைப் பதவியிலிருந்து இறக்க முயன்றனர். ரஸியாவுக்குப் பொதுமக்கள் ஆதரவு இருந்ததால், தில்லியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெற்குப் பஞ்சாபில் கலகக்கார ஆளுநர் அல்துனியாவைத் தண்டிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைச் சதிகாரர்கள் பயன்படுத்தி அவரை ஆட்சியிலிருந்து அகற்றினர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று, முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தில் வந்த ஆலம் ஷா – *Abraham Eraly, The Age of Wrath.*

சுல்தான் ஃபெரோஸ் துக்ளக், 1,80,000 அடிமைகள் வைத்திருந்ததற்காகப் புகழ்பெற்றவர். இதில் 12,000 பேர் கைவினைஞர்களாகப் பணிபுரிந்தனர். அவரது முதன்மை அமைச்சர் கான் ஜஹான் மக்பூல் 2000த்துக்கும் அதிகமான பெண் அடிமைகளை வைத்திருந்தார்.

**கலீபா**

முகமது நபியின் வாரிசாகக் கருதப்படும் கலீபாக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தின் குடிமை, மதம் தொடர்பான விவகாரங்களின் மீது அதிகாரம் செலுத்தி வந்தனர். 1258 இல் பாக்தாத் நகரை மங்கோலியர் கைப்பற்றும்வரை கலீபா அந்நகரை ஆட்சி செய்தார். பின்னர் எகிப்தில் 1516–17ஆம் ஆண்டுகளில் ஆட்டோமானியர் வெற்றி பெறும்வரை ஆட்சி செய்தார். இதன் பின்னர் ஆட்டோமானிய சுல்தான்களே இப்பதவியை வகித்து வந்தனர். ஆடடோமானியப் பேரரசு நீக்கப்பட்டு (1920) முஸ்தபா கமால் அத்தாதுர்கின் தலைமையில் துருக்கியக் குடியரசு உருவானபோது இக்கலீபா பதவி ஒழிக்கப்பட்டது.

இல்துமிஷ் கட்டி முடித்த போது 72.5 மீட்டர் உயரமிருந்த குதுப் மினார், ஃபெரோஸ் ஷா துக்ளக் மேற்கொண்ட பழுதுநீக்கும் பணிகளால் 74 மீட்டராக உயர்ந்தது. 379 படிகள் கொண்ட மினார், அதன் உயரத்துக்காகவும், மாடிகளை அடையாளப்படுத்துகிற துருத்தி நிற்கிற உப்பரிகைகளுக்காகவும், படிப்படியான கோபுரச் சரிவுக்காகவும், கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள சரிவான விளிம்பு அலங்கரிப்புகள் ஒரு வளைவு தோற்றத்தைத் தருவதற்காகவும் சிறப்புடையது.



**தில்லி சுல்தானிய ஆட்சிகள் 1206–1526**

| மம்லுக் ஆட்சி 1210–1290 | கில்ஜி ஆட்சி 1290–1320 | துக்ளக் ஆட்சி 1320–1414 | சையது வம்சம் 1414–1451 | லோடி வம்சம் 1451–1526 |
|---|---|---|---|---|
| சம்சுதீன் இல்துமிஷ் 1210–1236 | ஜலாலுதீன் கில்ஜி 1290–1296 | கியாசுதீன் துக்ளக் 1320–1324 | கிசர் கான் 1414–1421 | பஹ்லல் லோடி 1451–1489 |
| நசிர் அல்-தின் முகமது II 1246–1266 | அலாவுதீன் கில்ஜி 1296–1316 | முகமது-பின்-துக்ளக் 1324–1351 | | சிக்கந்தர் லோடி 1489–1517 |
| கியாசுதீன் பால்பன் 1266–1287 | முபாரக் ஷா கில்ஜி 1316–1320 | ஃபெரோஸ் துக்ளக் 1351–1388 | | இப்ராஹிம் லோடி 1517–1526 |

### உள்ளாட்சித் தேர்தல்களும் உத்தரமேரூர் கல்வெட்டுகளும்



பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்தரமேரூரில் (உத்தரமல்லூரர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ. 919இலும் 921இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன. அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை பொதுப்பணிக்குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன: ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 75 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும்.

வரியாக வசூலிக்கப்பட்ட நெல் 'களம்' என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அளவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

மணிமேகலையை இயற்றிய சீத்தலைச்சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பிடத்தக்கது. அங்குள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் 'ஜலமய ஜெயஸ்தம்பம்' என்று குறிப்பிடுகிறார். அதற்கு, 'நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்' என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெருனி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். "எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது" என்று அல்பெருனி பதிவு செய்துள்ளார். சான்று: ஜவஹர்லால் நேரு, *Glimpses of World History*.

இராஜராஜேஸ்வரம், பிருகதீசுவரர் கோயில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் பெரிய கோயில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்குத் தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோயில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது. இக்கோயிலின் கருவறை மீது அமைக்கப்பட்ட விமானம்80 டன் எடைகொண்ட ஒரே கல்லால் ஆனது. கருவறையின்



வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர்(பிச்சை ஏற்கும் கோலத்தில் உள்ள சிவன்) ஆகிய உருவங்கள் சிறப்பு அம்சங்கள் ஆகும். புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோயில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோழ ஆட்சியாளர்களின் சமயக் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. நடனப் பெண்கள், இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் இவை நாடு என்ற பகுதிகளைச் சேர்ந்த பல குடியிருப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுக், கோயில்களோடு இணைக்கப்பட்டனர். கோயில்களில் பக்திப்பாடல்களைப் பாடுவதற்காகப் பாடகர்கள் நியமிக்கப்பட்டனர்.

**உங்களுக்குத் தெரியுமா?** சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோ போலோ நேர்மையான நிர்வாகத்துக்காவும் வெளிநாட்டு வணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியதற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து வாசா:ப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: "காயல் மற்றும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ 10,000 குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 1,400 குதிரைகள் ஜமாலுதீனுக்குச் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்களாகும்."

சிந்தாமணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், திருவாடானை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை). சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

**ஒப்பந்தத் தொழிலாளர் முறை:** உழைப்புடன் கூடிய கடுங்காவல் தண்டனை போன்ற இவ்வொப்பந்தக் கூலித்தொழிலாளர் முறையின் கீழ் தொழிலாளர்கள் ஐந்து வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இறுதியில் அவர்கள் குறைந்த அளவு கூலியைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பலாம். வறுமையில் உழன்ற பல விவசாயிகளும் நெசவாளர்களும் ஓரளவுப் பணம் சம்பாதிக்கும் நம்பிக்கையுடன் சென்றனர். ஆனால் அது அடிமைத் தொழிலை விடவும் மோசமாக அமைந்தது. வறுமையில் வாடிய ஏழைத் தொழிலாளர்களைச் சூழ்ச்சியின் மூலமோ அல்லது கடத்தியோ கொண்டுவர அரசு தனது முகவர்களை (கங்காணிகள்) அனுமதித்தது. நீண்ட கடல் பயணத்தில் தொழிலாளர்கள் பெருந்துயரங்களுக்குள்ளாயினர். பலர் வழியிலேயே இறந்தனர். 1856–1857இல் கல்கத்தாவிலிருந்து டிரினிடாட் சென்ற கப்பலில் பயணம் செய்த ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்களின் இறப்பு விகிதம் பின்வருமாறு: ஆண்களில் 12.3 விழுக்காட்டினரும், பெண்களில் 18.5 விழுக்காட்டினரும், 28% சிறுவர்களும், 36% சிறுமிகளும், 55% குழந்தைகளும் இறந்துவிட்டனர்.

T.B. மெக்காலே 1834 முதல் 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர். மெக்காலே இந்தியாவிற்கு வருவதற்கு முன்னதாக 1823இல் பொதுக்கல்விக்கான பொதுக்குழு உருவாக்கப்பட்டது. கல்வி தொடர்பாகவும், எம்மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழிகாட்டுவது இக்குழுவின் பொறுப்பாகும். இவ்வமைப்புப் பின்னர் இரண்டு குழுக்களாகப் பிரிந்தது. கீழ்த்திசைக் குழுவானது கல்வி பிராந்திய மொழிகளில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன்வைத்தது. ஆங்கில மரபுக்குழு மேலைக் கல்வியானது ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன் வைத்தது.



T. B. மெக்காலே

மெக்காலே ஆங்கில மரபுக்குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார். 1835இல் அவர் தனது புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் (*Minute on Indian Education*)" எனும் குறிப்புகளை வெளியிட்டார். இக்குறிப்புகளில் ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார். ரத்தத்திலும் நிறத்திலும் இந்தியராகவும் விருப்பத்தில், கருத்தில், ஒழுக்க நெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்கும் ஒரு மக்கள் பிரிவினரை இந்தியாவிற்குள்ளே உருவாக்க அவர் விரும்பியதே அவர் ஆங்கில மரபுக் குழுவை ஆதரித்ததன் காரணமாகும்.

**சுதேசி சிந்தனையின் பரிணாம வளர்ச்சி**

விடுதலைப் போராட்டத்தின்போது சுதேசி இயக்கம் என்ற எண்ணம் முதன்முதலாக 1905இல் ஒரு சில காங்கிரஸ் தலைவர்களாலும், பின்னர் 1920களில் மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலும் ஒரு தத்துவமானது.

'சுதேசி' என்பதன் பொருள் 'ஒருவரது சொந்தநாடு' என்பதாகும். இத்தத்துவத்தின் தோற்றமானது 1872இல் பூனாவில் மகாதேவ் கோவிந்த் ரானடே தனது தொடர் சொற்பொழிவுகளின் மூலம்இச்சிந்தனையைப்பிரபலப்படுத்தியதிலிருந்துத் தொடங்குகிறது. ரானடேயின் கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

1920களில் காந்தியடிகள் இதை அனைத்து இந்தியர்களும் தாங்கள் பிறந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளோடு இணைத்துச் சுதேசி சிந்தனைக்குப் புதிய பொருளைக் கொடுத்தார். காந்தியடிகளைப் பொருத்தமட்டில் சுதேசி என்பது ஒருவர் தனது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மட்டும் பயன்படுத்துவது என்பது மட்டுமல்ல. அவர் பின்வரும் வார்த்தைகளில் சுதேசியை விளக்குகிறார். சுதேசி என்பது நமக்குள்ளிருக்கும் ஆன்மபலம் அது வெகு தொலைவிலிருந்து கிடைப்பனவற்றை ஒதுக்கி வைத்து நமக்கு வெகு அருகேயுள்ள சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் பயன்களையும் சேவைகளையும் பயன்படுத்தும் வண்ணம் இங்கு உள்ளவர்களால் தயார் செய்யப்படும் பொருட்களை மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். அப்படியான தொழில்கள் எங்கு தேவைப்படுகின்றனவோ அங்கே அவைகள் திறம்படவும் முழுமையாகவும் செயல்படச் சேவை செய்ய வேண்டும்.

1905இல் ஒரு சமயம் அரவிந்த கோஷிடம் ஒருவர் எவ்வாறு நாட்டுப்பற்று உடையவராக ஆவது? எனக் கேட்டார். சுவரில் தொங்கிய இந்திய வரைபடத்தைச் சுட்டிக்காட்டிய அரவிந்தர், "நீ அந்த வரைபடத்தைப் பார்க்கிறாயா? அது ஒரு வரைபடமல்ல மாறாக பாரத மாதாவின் உருவப்படம் அதனுடைய நகரங்களும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் அவளுடைய உடலை உருவாக்கியுள்ளன. அவளுடைய குழந்தைகளே அவளுடைய பெரிதும் சிறியதுமான நரம்புகள்.... பாரதத்தை வாழ்கின்ற தாயாக நினைத்து கவனம் செலுத்தி ஒன்பது மடங்கு அதிக பக்தியுடன் அவளை வழிபடு" என பதிலுரைத்தார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

வட்டார மொழியில் கல்வி, எனும் கருத்து சுதேசி இயக்கத்திற்கு வெகு முன்னரே 1902இல் சதீஷ் சந்திராவால் விடிவெள்ளிக் கழகம் (Dawn Society) நிறுவப்பட்ட போதே உருவாகி விட்டது.

பேரரசருக்கு எதிரான வ.உ.சி, சுப்ரமண்ய சிவா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் சில பகுதிகள் (நவம்பர் 4, 1908)

ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டுவது அது எப்போதானாலும் சரி மிக மோசமான குற்றமென்றே எனக்குத் தோன்றுகிறது. இம்மாகாணத்தில் இவ்வகைப்பட்ட வழக்குகளில் இதுவே முதல் வழக்கு என்பது உண்மை. ஆனால் இக்குற்றம் கால் ஊன்றுவதற்கு எந்த மாகாணங்களிலெல்லாம் இடத்தைப் பெற்றுவிட்டதோ, அவைகளில் நிலவும் இப்போதைய நிலைமைகள், மிதமான தண்டனைகளான சில மாதங்கள் சிறை தண்டனை அல்லது ஒன்று அல்லது இரண்டாண்டுகள் சிறை தண்டனைகளானது தகுதியற்றோர்க்கு வழங்கப்பெற்ற சலுகைகள் எனச் சுட்டிக்காட்டுவதாய்த் தோன்றுகிறது. தண்டனையின் குறிக்கோளானது குற்றவாளிக்கு மட்டுமல்ல, அவருடைய முன்னுதாரணத்தை பின்பற்ற விழையும் மற்றவர்க்கும் அச்சமூட்டுவதாய் அமைய வேண்டும். ஏறத்தாழ ஒரு புரட்சியாக முடிந்து விட்ட ஒரு அரசு எதிர்ப்பியக்கத்தைக் கையாள வேண்டியுள்ளது. கலகங்களை அடக்கும் போது இழக்கப்பட்ட உயிர்களுக்கு தார்மீக அடிப்படையில் இவர்களே பொறுப்பாவர் என்பது அவர்களைக் கைது செய்தலில் உறுதியாகிவிட்டது.

**தன்னாட்சி:** மத்திய அல்லது பிரதேச அரசிடமிருந்து அதனைச் சார்ந்த அரசியல் பகுதிகளுக்கு, அங்கு வாழும் மக்கள் அதற்கு அரசியல் ரீதியாக விசுவாசமாக இருப்பார்கள் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் தன்னாட்சி அதிகாரத்தைக் குறிக்கிறது. பழங்கால ரோமானிய அரசிலும், நவீன ஆங்கிலேய அரசிலும் இது பொதுப்படையான அம்சமாக இருந்தது. 1880 களில் அயர்லாந்தில் தன்னாட்சி இயக்கம் முடுக்கம் பெற்றதை அடுத்து அயர்லாந்து அரசு சட்டத்தின் (1920) கீழ் வட அயர்லாந்தின் ஆறு நாடுகளிலும் பிறகு தெற்கில் ஆங்கிலோ–அயர்லாந்து ஒப்பந்தத்தின் (1921) கீழ் எஞ்சிய 26 நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது.

பிரிட்டிஷ் அரசின் கீழ் இந்தியா தன்னாட்சி பெறுவது அல்லது கனடா, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் வழியில் தன்னாட்சிப் பகுதித் (டொமினியன்) தகுதியைப் பெறுவது ஆகியவற்றுக்காகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோருவதற்காக இந்திய காமன்வெல்த் லீக் என்று தன்னாட்சி இயக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1929இல் இந்திய லீக் என்று வி.கே. கிருஷ்ணமேனன் மாற்றம் செய்தார்.

சோஹன் சிங் பக்னாவைத் தலைவராகக் கொண்டு பசிபிக்பிரதேச இந்துஸ்தான் அமைப்பை சான்பிரான்சிஸ்கோவில் வசித்துவந்த லாலா ஹர்தயாள் 1913இல் நிறுவினார். இந்த அமைப்பு கதார் கட்சி என்று அழைக்கப்பட்டது. (உருது மொழியில் கதார் என்றால் கிளர்ச்சி என்று பொருள்). அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய சீக்கியர்களே பெரும்பாலும் இந்தக் கட்சியில் இடம்பெற்றிருந்தனர். 'கதார்' என்ற பத்திரிகையையும் இக்கட்சி வெளியிட்டது. 1913 நவம்பர் முதல் தேதி சான் பிரான்சிஸ்கோவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது. பின்னர் உருது, பஞ்சாபி, இந்தி மற்றும் இதர மொழிகளிலும் அது வெளியானது.


லாலா ஹர்தயாள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கதார் இயக்கம் மிக முக்கிய அத்தியாயமாகும். கோமகடமரு (Comagatamaru) என்று பெயரிடப்பட்ட கப்பல் இந்தியாவில் இருந்து குடியேறிவர்களுடன் கனடாவில் இருந்து திரும்பியது. இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் ஏற்பட்ட மோதலில் அந்தக் கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

பல்வேறு சாதி, பிரதேசங்கள், மதங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்க இந்திய பணியாளர் சங்கத்தை கோபால கிருஷ்ண கோகலே 1905இல் நிறுவினார். பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட நாட்டின் முதலாவது மதச்சார்பற்ற அமைப்பு இதுவாகும். நிவாரணப் பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக்கடமைகளில் உறுப்பினர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். ஐந்தாண்டு காலத்துக்கு பயிற்சி பெறவேண்டிய உறுப்பினர்கள் குறைவான சம்பளத்துக்குப் பணியாற்ற ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த அமைப்புக்குத் தலைமையகம் மகாராஷ்டிராவின் பூனாவிலும், சென்னை (மதராஸ்), மும்பை (பம்பாய்), அலகாபாத் மற்றும் நாக்பூரில் முக்கிய கிளைகளும் இருந்தன.

தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு கெய்சர்–இ–ஹிந்த் தங்கப்பதக்கம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. 1906இல் ஆம்புலன்ஸ் படையில் இந்திய ஆர்வலர்களின் ஒரு அதிகாரியாகச் செயல்பட்ட அவரது சேவைகளைப் பாராட்டி ஜூலு போர் வெள்ளிப்பதக்கம் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்டது. 1899–1900களில் போயர் போரின்போது தூக்குபடுக்கை (Stretcher) கொண்டு செல்வோர் படையில் இந்திய ஆர்வலர்களின் துணைக் கண்காணிப்பாளராக சேவை புரிந்தமைக்காக போயர் போர் வெள்ளிப்பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது. கிலாபத் இயக்கத்தின் தொடர்பில் ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கியபோது, அனைத்துப் பதக்கங்களையும் திரும்ப ஒப்படைத்த அவர் இவ்வாறு தெரிவித்தார். "கடந்த ஒரு மாத காலமாக நடந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது கிலாபத் இயக்க விஷயத்தில் ஏகாதிபத்திய அரசு நேர்மையற்ற, நியாயமற்ற வகையிலும் மற்றும் கிரிமினல் போலவும் நடந்துகொண்டதுடன், தங்கள் நேர்மையற்றத் தன்மையைப் பாதுகாக்கத் தவறுக்கு மேல் தவறு செய்தன. இத்தகைய அரசு மீதான மதிப்பையோ அல்லது அன்பையோ என்னால் இருப்பு வைக்க இயலவில்லை.

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு இரவீந்திரநாத் தாகூர் தனது அரசப் பட்டத்தை உடனடியாகத் துறந்தார். 1919 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி அரசப்பிரதிநிதிக்கு (வைசிராய்) அனுப்பிய எதிர்ப்புக் கடிதத்தில் தாகூர் இவ்வாறு எழுதினார். "இணக்கமற்ற சூழல் நிலவும் வேளையில் அவமானத்தின் சின்னமாக இந்த மதிப்புக்குரிய பட்டம் திகழ்கிறது. மனிதர்களாகக் கூடக் கருத முடியாத நிலையில் மதிப்பிழந்து போன எனது நாட்டு மக்களுக்கு ஆதரவாக எனது தரப்பில் நான் மேற்கொள்ளும் செயலாக, எனக்கு வழங்கப்பட்ட அனைத்து சிறப்புப் பட்டங்களையும் திரும்ப ஒப்படைக்கிறேன்."


உதம் சிங்

கால்சா ஆதரவற்றோர் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட சீக்கிய பதின்பருவ இளைஞரான உதம் சிங் இந்த நிகழ்வை தனது கண்களால் கண்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பழி தீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30இல் லண்டனின் காக்ஸ்டன் அரங்கில் மைக்கேல் ஓ டையரை உதம் சிங் படுகொலை செய்தார். லண்டனின் பெண்டோன்வில்லே சிறையில் உதம் சிங் தூக்கிலிடப்பட்டார்.

| | |
|---|---|
| ஜாலியன் வாலாபாக் (பஞ்சாப்) | ஜாலியன் வாலாபாக் படுகொலை |
| சௌரி சௌரா (உத்திரப் பிரதேசம்) | ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தம் |
| தண்டி (குஜராத்) | சட்ட மறுப்பு இயக்கம் |
| சம்பரான் (பீகார்) | அவுரி விவசாயிகள் இயக்கம் |
| கேதா (குஜராத்) | விவசாயிகள் சத்தியாகிரகம் |
| அகமதாபாத் (குஜராத்) | பருத்தி ஆலை தொழிலாளர்கள் சத்தியாகிரகம் |
| மஹத் (மகாராஷ்டிரா) | மஹத் சத்தியாகிரகம் |


எம். சிங்காரவேலர்

எம். சிங்காரவேலர் (18 பிப்ரவரி 1860 – 11 பிப்ரவரி 1946) மதராசில் பிறந்தார். இவர் இளமைக் காலத்தில் புத்தமதத்தைத் தழுவியவர். பிற கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் பலரைப் போன்று இவரும் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து செயல்பட்டவர். எனினும், சில காலத்திற்குப் பிறகு அவர் புரட்சிகர தேசியவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை இவர் தோற்றுவித்தார். 1923ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார். 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். அதற்காகத் தண்டனை பெற்றார்.


எம்.என்.ராய்

கான்பூர் சதிவழக்கில் ஆரம்பத்தில் 13 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது: 1) எம்.என்.ராய் 2) முசாபர் அகமது 3) சவுகத் உஸ்மானி 4) குலாம் ஹுசைன் 5) எஸ்.ஏ. டாங்கே 6) எம். சிங்காரவேலர் 7) ஆர்.எல்.சர்மா 8) நளினி குப்தா 9) ஷமுத்தின் ஹாசன் 10) எம். ஆர். எஸ். வேலாயுதன் 11) டாக்டர் மணிலால் 12) சம்பூர்ண நந்தா 13) சத்ய பக்தா. 8 பேர் மீதே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது : எம். என். ராய், முசாபர் அகமது, எஸ்.ஏ. டாங்கே, நளினி குப்தா, குலாம் ஹுசைன், சிங்காரவேலர், சவுகத் உஸ்மானி, ஆர். எல். சர்மா. குலாம் ஹுசைன் அரசுத் தரப்புச் சாட்சியாக (அப்ரூவர்) மாறிவிட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். எம். என். ராய், ஆர். எல். சர்மா ஆகியோர் முறையே ஜெர்மனியிலும் பாண்டிச்சேரியிலும் (ஒரு பிரெஞ்சுப் பிரதேசம்) இருந்ததால் நேரில் வரவழைக்காமல் குற்றப்பத்திரிகைகள் அனுப்பிவைக்கப்பட்டன. சிங்காரவேலர் மோசமான உடல்நிலை காரணமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடைசியாக, அந்தப் பட்டியலில் நால்வர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

விசாரணையை மீரட் நகரில் நடத்துவதென்று பிரிட்டானிய அரசு தீர்மானித்தது. (எடுத்துக்காட்டாக, குற்றம் சாட்டப்பட்டவர்களில் அதிகமானவர்கள் பிடிபட்ட பம்பாய் போன்ற இடங்களில் அல்லாமல்). எனவே அவர்கள் நடுவர் விசாரணை என்ற சலுகையைப் பெற முடிந்தது. நடுவர் விசாரணை குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அனுதாபத்தை உருவாக்கக் கூடும் என்று அவர்கள் அஞ்சினர்.

"நான் படிக்க ஆரம்பித்தேன். என்னுடைய முந்தைய நம்பிக்கைகளும் தீர்மானங்களும் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் மாற்றத்திற்கு உள்ளானது. மிகவும் முக்கியமாக நமது முன்னோடிகளிடையே நிலவிய வன்முறைச் செயல்பாடுகள் மீதான மோகம் தீவிரமான சித்தாந்தங்களின் மூலம் மாற்றீடு செய்யப்பட்டது. இதில் மாயத்திற்கு இடமில்லை. கண்மூடித்தனமான நம்பிக்கைக்கும் இடமில்லை. யதார்த்தமான அணுகுமுறையே நமது ஒழுங்குமுறை ஆனது. தீவிரமான தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே வன்முறையைக் கையாள்வது நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கும். அனைத்து வெகுஜன இயக்கங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு கொள்கையாக அஹிம்சை இருக்கும். வழிமுறைகள் ஏராளமாக இருக்கின்றன. நாம் எந்த லட்சியத்திற்காகப் போரிட்டோமோ அதன் தூய கருதுகோளே மிக முக்கியமானது." பகத்சிங்கின் "நான் ஏன் நாத்திகனாக இருக்கிறேன்?" என்னும் நூலிலிருந்து.

ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்பது ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனின் புதுப்பிக்கப்பட்ட ஓர் அத்தியாயமே ஆகும். முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசைத் தூக்கி எறிந்து புரட்சி ஒன்றின் மூலமாக ஒரு சோசலிசச் சமூகத்தை நிலைநாட்டுவதே அதன் குறிக்கோளாகும். ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் லாகூரில் சாண்டர்ஸினைக் கொன்றது போன்ற பல நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. 1928 டிசம்பர் மாதத்தில் லஜபதி ராய் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதற்கும் அதனைத் தொடர்ந்த ராயின் மரணத்திற்கும் பொறுப்பான லாகூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜேம்ஸ் ஏ. ஸ்காட்டுக்குப் பதில் தவறுதலாக சாண்டர்ஸ் பலியானார். 1929, டிசம்பரில் இர்வின் பிரபு (1926 –1931ஆம் ஆண்டுகளில் கவர்னர் ஜெனரலாகவும் வைஸ்ராயாகவும் இருந்தவர்) பயணம் செய்துகொண்டிருந்த ரயிலைக் கொளுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர். 1930ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் இதுபோன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

போர்த் தளவாடக்கிடங்குத் தாக்குதலின் போது தப்பித்த இருவர் 1932 ஜூன் 13இல் அரசுப் படைகளுக்கு எதிராக நேருக்கு நேர் மோதல் ஏற்பட்டபோது, கொல்லப்பட்டனர். அதே வேளையில் அவர்கள் தல்காட் கிராமத்தில் அரசுப்படைகளின் தளபதி கேப்டன் கேமரூனை ஒரு ஏழை பிராமண விதவையான சாவித்ரி தேவி என்பாரின் வீட்டில் கொன்றனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு அவ்விதவைப் பெண்மணி அவரது குழந்தைகளுடன் கைதுசெய்யப்பட்டார். விசாரணையின்போது அப்பெண்மணிக்கு வேண்டியளவு உதவி செய்வதாகத் தூண்டியும் அவரிடமிருந்து ஒரு வார்த்தையைக் கூட காவல்துறையால் பெற முடியவில்லை. படிப்பறிவற்ற ஏழையாயிருந்தும் தங்கம் போன்றப் பொருள்களுக்கு ஆசைப்படாமல் தயக்கமின்றி அத்தனைக் கொடுமைகளையும் பழியையும் தாங்கிக்கொள்ள முடிந்தது.

கல்பனா தத்தின் சுயசரிதையில் இருந்து.
(*Chittagong Armoury Raiders' Reminiscences*)


ஜே.என். டாடா

ஜே.என். டாடா எனப் பிரபலமாய் அறியப்பட்ட ஜாம்ஷெட்ஜி நுஸர்வஞ்சி டாடா (1839 – 1904), பரோடாவில் உள்ள நவ்சாரி என்ற இடத்தில் ஒரு பார்சி (ஜொராஷ்ட்ரியன்) வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர். இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் இவர் என்பதால், இந்திய நவீனத் தொழிலகங்களின் தந்தை என அழைக்கப்படுகிறார். தனது தந்தையின் வியாபாரத்திற்கு உதவும் பொருட்டு, அவர் உலகம் முழுவதிலும் பயணம் மேற்கொண்டார். மேலும் அவருடைய அனுபவம் எதிர்கால முயற்சிகளுக்கு இது உதவியது. 1868இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது. ஒரு தேசியவாதியாய், குர்லா, பம்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு "சுதேசி" எனப் பெயரிட்டார். அவரது மகன்களான தோரப்ஜி டாடா மற்றும் ரத்தன்ஜி டாடா ஆகியோர் அவரது கனவுகளை நனவாக்கி வந்தனர். தோரப்ஜி டாடா அவரது தந்தையின் நீண்ட காலக் கனவான இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை 1907ஆம் ஆண்டில் நிறுவினார். இதற்காக அவர் இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் உள்ள அமெரிக்கன் இரும்புத் தொழிலகங்களில் உத்வேகத்துடன் நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார். ஒரு நீர்மின்சக்தி நிறுவனத்தை அமைப்பதற்கான அவரது மற்றொரு கனவு அவரது வாழ்நாளுக்குள் நிறைவேறவில்லையெனினும் 1910இல் மிகப்பெருமளவில் டாடா நீர்மின்சக்தி நிறுவனம் உதயமானது. தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய அறிவியல் கழகம் ஒன்றை பெங்களூரில் டாடா குழுமம் நிறுவியுள்ளது.

"பின்வரும் இரண்டு வகைகளில் எதை விரும்புவது என்று ஒருவருக்கும் தெரியவில்லை. கருத்து ஒற்றுமையும், செயலும் அரசியல் ரீதியாக பெரிதும் ஆபத்தானவை இது முதல் வகை. கருத்து வேற்றுமையும், மோதலும் நிர்வாக ரீதியாக தொல்லைதருபவை இது இரண்டாவது வகை. இவையிரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தால், இரண்டாவது வகை உரசல் எழும் இடங்களில் இருப்பவர்களுக்கு கவலையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்தக் கூடியது என்ற போதிலும் இதுவே குறைந்த அளவு ஆபத்துடையது எனலாம்"

– அரசுச் செயலாளர் ஹேமில்டன்,
வைஸ்ராய் எல்ஜினுக்கு எழுதிய கடிதத்தில்

**வகுப்புவாதம்:** பிறமதத்தாரோடு பொருள்சார்ந்த பிரச்சனைகளிலும் கூட விரோதப்போக்கோடு சண்டையிடும் வகையில் ஒரு மதத்தினரை உருவாக்குவது. வகுப்புவாதம் என்ற கருத்தாக்கம் அல்லது இயக்கத்தை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமாக வரையறுத்துள்ளனர். நேருவின் கூற்றுப்படி, "வகுப்புவாதம் என்பது பிற்போக்குவாதிகள் நவீன உலகத்திற்குப் பொருந்தாத, காலாவதியான ஒரு கருத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பது என்பதற்கு ஏற்ற சான்றாகும்; இது தேசியவாதம் என்ற கருத்தாக்கத்திற்கு முற்றிலும் எதிரானது". மற்றொரு அறிஞரின் கூற்றுப்படி, "வகுப்புவாதம் என்பது, ஒரு குழு குறுகிய நோக்கில் மற்ற குழுக்கள் அல்லது அரசாங்கத்திடமிருந்து வரும் எதிர்ப்பை மடைமாற்றம் செய்யும் நோக்கத்துடன் அணிதிரட்டும் திட்டமிட்ட முயற்சியே ஆகும்".

பாகிஸ்தான் என்ற எண்ணவோட்டம் 1940இல் முஸ்லிம் லீக் மேடைகளிலிருந்து வெளிப்பட்டாலும் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கவிஞரும் அறிஞருமான முகமது இக்பாலால் சிந்திக்கப்பட்டதாகும். 1930இல் அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் இக்பால் ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத் தான் காண விரும்புவதாகக் கூறினார். இது பின்னர் கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான ரகமது அலியால் வலுவாக வெளிப்படுத்தப்பட்டது. லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது 'இரு நாடு கொள்கை' ஆகும். இதனை முதலில் சர் வாசிர் ஹசன் என்பவர்தான் 1937இல் நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார். இப்பரந்த கண்டத்தில் வாழும் இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சமூகங்கள் அல்ல, ஆனால் பல வழிகளில் இரு நாட்டினராக கருதுதல் வேண்டும் என்றார்.

"இந்து–முஸ்லிம் வகுப்புவாதம், நடுத்தர வகுப்புகளுக்கிடையே நடந்த மோதல்களின் விளைவே ஆகும். மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்புவாதத்திலிருந்து முற்றிலும் விலகியே இருந்தனர்." – ஜவஹர்லால் நேரு

தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி: இந்த வகையான முறையில் முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும். 1909 ஆம் ஆண்டு மிண்டோ–மார்லி சட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது. மாகாண சட்டமன்றங்களின் இடங்களை முஸ்லிம் வேட்பாளர்களுக்குப் பின்வருமாறு ஒதுக்கியிருந்தது. அவையாவன: மதராஸ் 4; பம்பாய் 4; வங்காளம் 5.

பிரிவினைவாத தேசியத்தின் வளர்ச்சி குறித்த தனது மன வேதனையை அரச பிரதிநிதிபின்வருமாறு வெளிப்படுத்தினார்: "தனிமனிதர்களின் எண்ணிக்கையைப் போலவே பல மதங்கள் உள்ளன." ஆனால் தேசியத்தின் ஆன்மா குறித்த விழிப்புணர்வுள்ளவர்கள் மற்றவர்களின் மதங்களில் தலையிடமாட்டார்கள். இந்தியாவிலுள்ள அனைவரும் இந்துக்களாக மட்டுமே இருக்க வேண்டுமென இந்துக்கள் நம்பினால் அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றே பொருள். தங்கள் நாட்டை உருவாக்கிய இந்துக்கள், சீக்கியர்கள், முகமதியர்கள், பார்சிகள், கிறித்துவர்கள் ஆகிய அனைவரும் நாட்டின் சக மனிதர்களே. தங்களுடைய நலன்களுக்காக அவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தாக வேண்டும். உலகத்தின் எந்தவொரு பகுதியிலும் ஒரு நாட்டுரிமையும் ஒரு மதமும் ஒரே பொருளைத் தருகிற வார்த்தைகளாக இல்லை. இந்தியாவில் அவ்வாறு எப்போதுமே இருந்ததில்லை.

மார்ச் 23, 1940 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது: 'பூகோளரீதியில் தொடர்ச்சியாக அமையப்பெற்ற பகுதிகள் பிரிக்கப்பட்டும் தேவைக்கேற்ப இந்தியாவின் வடமேற்கிலும் கிழக்குப் பகுதியிலும் எண்ணிக்கை அளவில் இஸ்லாமியப் பெரும்பான்மை இருப்பது போன்றப் பகுதிகளை உருவாக்கி இவையாவற்றையும் இணைத்து தன்னாட்சியும் இறையாண்மையும் கொண்டவைகளாக மாற்றி அதிலிருந்து ஒரு தனி நாட்டை உருவாக்க வேண்டும்.' (மூலம்: சுமித் சர்க்கார், மாடர்ன் இந்தியா 1885–1947 (ஆங்கிலம்), பியர்சன், 2018, பக்கம் 324)

ஜவகர்லால் நேரு 1947 ஆகஸ்டு 14–15 இடைப்பட்ட நாளன்று நள்ளிரவில் அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களிடம் உரையாற்றினார். அதில் அவர் சுதந்திர இந்தியாவிற்கான திட்டத்தையும் அதன் லட்சியங்களையும் குறிப்பிட்டதோடு அத்தகைய பாதையை தேர்ந்தெடுத்ததற்கான தவிர்க்க முடியாத காரணங்களையும் பொருத்தமாக விளக்கினார். "நீண்ட காலத்திற்கு முன்னர் நாம் விதியோடு ஓர் ஒப்பந்தம் செய்தோம். இப்போது அந்த வாக்குறுதிகளை முழுமையாக அல்லது முழு அளவில் ஆனால் மிகவும் கணிசமாக மீட்கும் நேரம் வந்துவிட்டது." ஆசிரியர்கள் ஜவகர்லால் நேருவின் முழு உரையையும் மாணவர்களைக் கேட்கச் செய்யலாம். அதற்கான இணைப்பு https://www.youtube.com/watch?v=Uj4TfcELODM

வரலாற்று அறிஞர் ஞானேந்திர பாண்டே கூற்றுப்படி, 1947–48இல் 5 இலட்சம் முஸ்லிம் அல்லாத அகதிகள் (இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள்) பஞ்சாப் மற்றும் தில்லிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். தில்லியில் வசித்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் அவர்களது வீடுகளிலிருந்து காலி செய்யப்பட்டனர். வன்முறைக் கும்பலின் தாக்குதலிலிருந்து தப்ப செங்கோட்டை மற்றும் புராணஹிலா கோட்டைகளிலிருந்த முகாம்களில் மக்கள் தஞ்சம் புகுந்தனர். அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் போதுமான தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை.

**பஞ்சசீலக் கொள்கை**

1. இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அவற்றின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.
2. இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.
4. இரு நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.
5. சமாதான சகவாழ்வு

**உங்களுக்குத் தெரியுமா?**

1951ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பன்னிரெண்டு ஐந்தாண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டமே (2012–2017) இறுதியான திட்டமாகும். 2015இல் திட்டக் குழு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக நிதி ஆயோக் (NITI Aayog) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**இணைப்புறுதி ஆவணம்:** இந்திய அரசாங்கச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான ஆவணம் ஆகும். இந்த ஆவணமே பிரிவினையின்போது இந்திய சுதேச அரசர்கள், இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

**இந்திய அரசமைப்பின் உறுப்பு 3 (Article 3) பின்வருமாறு தெரிவிக்கிறது**

நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(அ) ஒரு மாநிலத்திலிருந்து நிலப்பகுதியைப் பிரித்தோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை இணைத்தோ அல்லது ஏதேனும் நிலப்பகுதியை மாநிலப் பகுதிகளோடு இணைத்தோ புதிய மாநிலத்தை உருவாக்கலாம்;

(ஆ) எந்த மாநிலத்தின் நிலப்பகுதியையும் அதிகரிக்கலாம்;

(இ) எந்த மாநிலத்தின் நிலப்பகுதியையும் குறைக்கலாம்;

(ஈ) எந்த மாநிலத்தின் எல்லையையும் மாற்றியமைக்கலாம்;

ஆங்கிலேயர்களால் மூன்று வகையான வருவாய் வசூல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வங்காளம் மற்றும் வடஇந்தியாவின் பெரும்பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்ட நிரந்தர நிலவரித் திட்டத்தின் கீழ், நிலவரியை செலுத்தும் பொறுப்பு ஜமீன்தார்கள் எனப்படும் குத்தகைதாரர்களிடம் விடப்பட்டது. தென்னிந்தியாவில் ரயத்துவாரி (ரயத் என்றால் விவசாயி என்று பொருள்) முறையின் கீழ் விவசாயிகள் நிலவரியை நேரடியாக அரசாங்கத்திடம் செலுத்தினர். மூன்றாவது முறை நாட்டின் ஒரு சில இடங்களில் மட்டும் காணப்பட்ட மகல்வாரி முறை. இதில் நிலவரியைச் செலுத்துவது கிராமத்தின் கூட்டுப் பொறுப்பாகும்.

மாலுமி ஹென்றி என்பவர் போர்த்துகீசிய இளவரசர் ஆவார். அவர் கடலுக்குள் செல்லாத நிலையிலும், கடல்பயணம் குறித்த பள்ளி ஒன்றை போர்த்துகல் நாட்டின் சாக்ரெஸில் தொடங்கினார். வரைபடத்தை உருவாக்குபவர்கள், கப்பல் கட்டுவோர் மற்றும் கருவிகள் உருவாக்குவோர் ஆகியோரை வாடகைக்கு நியமித்து திட்டமிட்ட கடற்பயணங்களை மேற்கொள்ள மாலுமிகளுக்கு அவர் உதவினார்.

**மெடிசி குடும்பம்:** இத்தாலிய நகரங்களில் ஒன்றான பிளாரன்ஸ் சக்திவாய்ந்த வர்த்தகக் குடும்பமான மெடிசி குடும்பம் மூலமாக ஆளுமை செய்யப்பட்ட காசிமோ டி மெடிசி என்பவர் இத்தாலி முழுவதும் வங்கிக்கிளைகளை நடத்தி வங்கித்துறையில் கொடிகட்டிப்பறந்ததோடு 1434 முதல் 1464ஆம் ஆண்டு வரை அரசு நிர்வாகத்தை மறைமுகமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது பெயரன் லாரன்சோ அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அரசைக் கட்டுப்படுத்தினார். லாரென்சோ அனைவராலும் "லாரென்சோ அற்புதமான மனிதர்" என்று அழைக்கப்பட்டார். இந்த காலகட்டத்தில் மைக்கேல் ஆஞ்சிலோ , லியானர்டோ டாவின்சி உள்ளிட்ட பல ஓவியக் கலைஞர்களுக்கு மெடிசி குடும்பம் ஆதரவு அளித்தது.

இயேசு நாதரின் புனித இறுதி விருந்தை ஒத்த புனிதச் சமயச் சடங்கை கத்தோலிக்கர்கள் தங்கள் தேவாலயங்களில் பின்பற்றினார்கள். இயேசு கிறிஸ்து மேற்கொண்ட தியாகங்களை நினைவுகூரும் வகையில் இந்தச் சடங்கில் கத்தோலிக்க கிறித்தவர்கள் பங்கேற்றனர். ரொட்டியும் திராட்சை ரசமும் இயேசுவின் சதையும் இரத்தமும் என்று அவர்கள் நம்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

பிரபுக்களைப் பின்பற்றுவோருக்கு அடையாளக்குறிகள் மற்றும் சீருடை வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரபுக்களின் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க நட்சத்திர சேம்பர் என்ற பெயரில் நீதிமன்றத்தை ஏழாம் ஹென்றி உருவாக்கினார். நீதிமன்ற நடைமுறைகள் நடந்த வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையின் மேல் சுவரில் நட்சத்திரங்கள் ஓவியமாக தீட்டப்பட்டிருந்ததால் இந்தப் பெயர்.

அட்லாண்டிக் கடலைக் கடந்த அடிமை வணிகம் மனிதகுல வரலாற்றில் படிந்த கறையாகும். பதினேழாம் நூற்றாண்டு பிறந்தபோது போர்த்துகீசியர்கள் ஆப்பிரிக்க அடிமை வர்த்தகத்தைத் தொடங்கினர். ஏனைய கிறித்துவ ஐரோப்பிய நாடுகளும் உடனடியாக பின் தொடர்ந்தன. அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள் 1619இல் ஒரு டச்சுக் கப்பலில் வந்தனர். "சந்தேக குணமில்லாத நீக்ரோக்களை" ஆப்பிரிக்காவில் கைப்பற்றி புதிய உலகிலுள்ள (அமெரிக்கா) பெருந்தோட்டங்களில் வேலை செய்ய அவர்களை விற்பதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்க இயலும் என உணர்ந்த முதல் ஆங்கிலேயர் ஜான் ஹாக்கின்ஸ் ஆவார். அவருடைய செழிப்பான வெற்றி, பெரும் லாபம் ஆகிய காரணங்களால் முதலாம் எலிசபெத் அரசியால் நைட் பட்டம் சூட்டப்பட்டார். 11 மில்லியன்களுக்கும் மிகையான ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாக அமெரிக்காவைச் சென்றடைந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஸ்பானிய ஆயுதங்களால் ஏற்பட்ட பேரழிவின் தாக்கம்:** அஸ்டெக்குகள் போதுமான எண்ணிக்கையில் வீரர்கள் ஆயுதங்கள் மற்றும் எஃகு கத்திகளைக் கொண்டிருந்தாலும் ஒரேயொரு ஸ்பானிய வீரர் டஜன் கணக்கில் ஏன் நூற்றுக்கணக்கான எதிரிப்படை வீரர்களைக் கொல்லமுடியும். "அவர்கள் திடீரென, குத்திக் கிழித்துக் கொன்றனர்" ஐரோப்பிய ஆயுதங்களின் மோசமான விளைவு குறித்து ஒரு உள்நாட்டு வரலாற்றாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். மேலும் "மற்றவர்கள் ஒரே வீச்சில் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இதர வீரர்கள் கொலைக்களத்தில் இருந்து ஓடித்தப்பிக்க முயன்றனர். அவர்களின் குடல் அவர்களில் இருந்து கீழே விழுந்து கால்களைச் சுற்றிக்கொண்டது." சிறிய அம்மை பரவியதால் அஸ்டெக் வலு குறைந்து காணப்பட்டது. இதன் மூலம் கார்டெசுக்கு மறுபடியும் குழுக்களை ஒன்று சேர்க்க நேரம் கிடைத்தது. இதனால் இறுதி வெற்றியும் பெற்றனர் .

1587இல் சர் வால்டர் ராலே என்பார் வடகரோலினாவிற்கு அருகே இருந்த ரோவனோக் தீவில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி, கன்னிமை அரசியான ராணியார் முதலாம் எலிசபெத்தின் நினைவாக வெர்ஜினியா எனப் பெயரிட்டார். ஆனால் பூர்வகுடி இந்தியர்களின் வலுவான எதிர்ப்பால் தொடக்கத்தில் குடியேறிய பலர் இங்கிலாந்து திரும்பினர். சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலேய மாலுமிகள் அங்கு சென்றபோது குடியேற்றம் இருந்தற்கான எந்தச் சுவடும் அங்கில்லை. ரோவனோக் தீவு இழக்கப்பட்ட குடியேற்றமானது.

**சுதந்திரப் பிரகடனம் (1776)**

குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக இருத்தல் வேண்டும் எனும் கருத்தை முன் மொழிந்தவர் ரிச்சர்டு லீ ஆவார். பிரகடனத்தை எழுதுவதற்கு வரைவுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அக்குழு தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்கிளின் மற்றும் ஜான் ஆடம்ஸ் ஆகியோரையும் உள்ளடக்கிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

1492இல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் கரீபியனை அடைந்த தருவாயில் அமெரிக்க பகுதிகளில் 10 மில்லியன் பூர்வகுடிகள் வாழ்ந்து வந்தனர். ஆனால் 1900இல் அவர்களின் எண்ணிக்கை 3,00,000 கீழாகக் குறைக்கப்பட்டது. பூர்வகுடிகளை அழித்தொழிக்க ஐரோப்பியர்கள் பின்பற்றிய தந்திரங்களில் ஒன்று நோய்களைப் பரப்புவதாகும். 1763இல் ஏற்பட்ட பெரும் எழுச்சி பென்சில்வேனியாவிலிருந்த ஆங்கிலப் படைகளை அச்சுறுத்தியது. தேவைப்படும் பொருட்கள் குறைவாக இருந்ததால் கவலையும் சில பூர்வகுடி அமெரிக்கர்களின் வன்முறைச் செயல்களால் சினமும் கொண்டிருந்த வட அமெரிக்காவிலிருந்த ஆங்கிலப் படைகளின் தளபதிசர்ஜெப்ரிஆம்ஹர்ஸ்ட்பென்சில்வேனியாவில், பிட் கோட்டையிலிருந்த கர்னல் ஹென்றி போகே என்பாருக்கு "போர்வைகளின் மூலமாக செவ்விந்தியர்களிடையே நோய்களைப் (அம்மை) பரப்பும் முயற்சியை நீங்கள் நன்றாகச் செய்யலாம். மேலும் ஒதுக்கத்தக்க இவ்வினத்தை வேரோடு பிடுங்கி எறிய வேறு முறைகள் அனைத்தையும் முயற்சி செய்யவும்" என எழுதினார். இதன் விளைவாக ஏற்கனவே அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொந்தமான அவர்கள் பயன்படுத்திய போர்வைகள் செவ்விந்திய பூர்வகுடிகளிடையே விநியோகம் செய்யப்பட்டன. காலனியவாதிகள் தங்கம் தேடும் முயற்சியில் (1848) பழங்குடி மக்களின் கிராமங்களில் பதுங்கியிருந்து கொடூரமாகத் தாக்கினர். குடியேற்றவாதிகளுக்கும் அமெரிக்க பூர்வ குடிகளுக்குமிடையே பல போர்கள் வெடித்து பெருமளவிலான உயிர்ச்சேதத்திற்கும், சொத்துப்பறிப்புக்கும், அடக்குமுறைக்கும் அப்பட்டமான இனவாதத்திற்கும் இட்டுச் சென்றது.

ரூஸோ எழுதிய சமூக ஒப்பந்தம் எனும் நூல், "மனிதன் பிறக்கும் போது சுதந்திரமானவனாகப் பிறக்கிறான். ஆனால் அனைத்து இடங்களிலும் சங்கிலிகளில் பிணைக்கப்பட்டுள்ளான்" எனும் புகழ்பெற்ற தொடக்க வரிகளைக் கொண்டுள்ளது. இவ்வரிகளுக்காகவே அவர் போற்றப்படுகிறார்.

பிரான்சில் இப்போதும் ஜூலை 14 பாஸ்டில் நாளாக அல்லது பிரெஞ்சு தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**தாமஸ் (டாம்) பெயின், பொது அறிவு (Common Sense)**

ஆங்கிலேயரான தாமஸ் பெயின் 'பொது அறிவு' (1776) எனத் தலைப்பிடப்பட்ட சிறு பிரசுரமொன்றை எழுதினார். அதில் பெயின் குடியேற்ற நாடுகளின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி விவாதங்களை எழுதியிருந்தார். சுதந்திரம் குறித்து ஹாப்ஸ், லாக், வால்டேர், ரூசோ ஆகியோர் கூறிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்த அவர் அவற்றை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதியிருந்தார். 1,50,000 பிரதிகள் விற்பனையான இச்சிறு பிரசுரம், மக்களின் மீது கிளர்ச்சியூட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பூர்ஷ்வா வகுப்பு கல்வியறிவு பெற்ற இடைத்தட்டு மக்களைக் கொண்டிருந்தது. எழுத்தாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள், நீதிபதிகள், குடிமைப் பணியாளர்கள் ஆகியோர் இவ்வகுப்பை உருவாக்கினர்.

மார்செய்ல்ஸ் எனும் இடத்திலிருந்து பிரெஞ்சுப் படைகளுக்கான ஒரு பாடலை (1792) ரூஜெட் டி லிஸ்லே என்பார் இயற்றினார். அது லா மார்செய்லைஸ் என அறியப்பட்டது. 1795 ஜூலை 14இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி இப்பாடல் பிரான்சின் தேசியகீதமாக அறிவிக்கப்பட்டது.

மனித, குடிமக்கள் உரிமைப் பிரகடனம், ஒரு முகவுரையையும் 17 பிரிவுகளையும் கொண்டுள்ளது. முதல் பிரிவு "மனிதர்கள் பிறக்கும் போது சுதந்திரத்துடனும் உரிமைகளில் சமமானவர்களாகவும் உள்ளனர்" என்ற வாசகத்தைக் கொண்டுள்ளது. சுதந்திரம், சொத்துக்களுக்கான பாதுகாப்பு, அடக்குமுறைக்கு எதிர்ப்பு என விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதே "அரசியல் ரீதியாக ஒன்றுபடுவதின்" நோக்கமாக இருக்க வேண்டும் என இப்பிரகடனம் குறிப்பிடுகிறது. மேலும் இறையாண்மையும் சட்டமும் "பொது விருப்பம்" என்பதிலிருந்து உருவாக வேண்டுமெனவும் அறிவிக்கிறது. பேச்சு சுதந்திரத்தையும் மத சுதந்திரத்தையும் பாதுகாத்து அது சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்துகிறது. அனைத்து மக்களும் தங்கள் வருவாய் ஆதாரங்களுக்கு ஏற்றவாறு வரி செலுத்த வேண்டுமென உறுதிபடக் கூறுகிறது. 1791இல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பிற்கு இப்பிரகடனம் ஒரு முகவுரையாக அமைந்தது.

**சைமன் பொலிவர்:** பொலிவர் கராகஸ் பகுதியின் கிரியோல் வகுப்பைச் சேர்ந்த பழமை வாய்ந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு கொள்கையாளராக, இராணுவத்தலைவராக அவர் விடுதலை இயக்கத்திற்குஅடிப்படைமுக்கியத்துவம் வாய்ந்தவராகத் திகழ்ந்தார். தன்னுடைய புகழ்பெற்ற 'ஜமைக்கா கடிதம்' (Jamaica Letter) எனும் கடிதத்தில் (1815இல் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் எழுதப்பட்டது, நாட்டுப்பற்றாளர்கள் பலமுறை தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் கூட சுதந்திரத்தின்பால் தனக்கிருந்த தளராத நம்பிக்கையை வலியுறுத்தினார். ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்தை விமர்சித்த அவர், தன்னாட்சியுடன் கூடிய மையப்படுத்தப்பட்ட குடியாட்சி அரசை நிறுவுவதே முந்தைய காலனிகளுக்கு இருக்கும் ஒரே பாதை எனக் கருதினார். முடிவாக அவர் விரும்பிய குடியாட்சியானது குழு ஆட்சியாகும் (Oligarchic). ஒரு நாடு இனங்களால் துண்டுபடுமேயானால் அங்கே ஒழுக்கம் நிறைந்த அரசு செயல்பட வாய்ப்பில்லை என நம்பினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் கூட லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்களுக்கும் இடது சாரிகளுக்கும் உத்வேகமூட்டும் ஒரு சக்தியாகவே பொலிவர் திகழ்ந்துள்ளார்.

மிகப்பெரும் கட்டுமானங்களில் இரும்பு பயன்படுத்தப்படுவதைக் கண்டு ஈர்ப்புக்குள்ளான பிரெஞ்சுக்காரர்கள் 1889இல் 324 மீட்டர் உயரமுள்ள ஈபில் கோபுரத்தை (Eiffel Tower) பாரிசில் எழுப்பினர்.

டாக்டர் ஜோசப் – இக்னேஸ் கில்லட்டின் என்பார் ஒரு பிரெஞ்சு மருத்துவராவார். அவர் ஒரு கட்டுரையில் மரண தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளை விரைவாகக் கொல்லும் இயந்திரம் குறித்து எழுதினார். அதுபோன்ற இயந்திரத்தை அவர் கண்டுபிடிக்காவிட்டாலும் அதற்கு அவர் பெயரே வைக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் ஆண்டனி லூயி எனக் கூறப்படுகிறது.

**எமிகிரஸ் (Emigres):** அரசியல் காரணங்களுக்காக தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெளியேறி மற்றொரு நாட்டில் குடியேறுவோரை எமிகிரஸ் என்பர். பிரான்சின் அன்றைய சூழலில் புரட்சியைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் நாட்டை விட்டு ஓடிய பிரபுக்களை எமிகிரஸ் என அழைத்தனர்.

இரண்டாவது தொழிற்புரட்சியானது (1870–1914) எஃகு உற்பத்தியிலும் பெட்ரோலியம், மின்சாரம் ஆகிய துறைகளிலும் புதிய முறைகளை எதிர்கொண்டது. ஒட்டுமொத்த ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் இக்காலப்பகுதியில் முதல் கட்டத் தொழிற்புரட்சியின் தாக்கத்தினை உணரத் தொடங்கின.

மிகப்பெரும் கட்டுமானங்களில் இரும்பு பயன்படுத்தப்படுவதைக் கண்டு ஈர்ப்புக்குள்ளான பிரெஞ்சுக்காரர்கள் 1889இல் 324 மீட்டர் உயரமுள்ள ஈபில் கோபுரத்தை (Eiffel Tower) பாரிசில் எழுப்பினர்.

முதல் உலகப்போருக்கு முன்னர் கலீஃபா, காபா (இஸ்லாமியச் சமயத்தின் புனிதமான இடம்) ஆகியவற்றின் நலன்களைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் முதல் உலகப்போரில் துருக்கியின் தோல்விக்குப் பின்னர் அவ்வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்துவிட்டது. திகைத்துப்போன முஸ்லிம் சமூகத்தினர் ஆங்கிலேயருக்குத் தங்கள் கோபத்தைக் காட்டவும், துருக்கியின் கலீஃபாவை பாதுகாக்கவும், கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர்.

**பீட்டர்லூ படுகொலை:** 1819ஆம் ஆண்டு தொழிலில் மந்தநிலையும் உணவுப்பொருட்களின் விலையேற்றமும் ஏற்பட்ட ஆண்டாகும். பெண்களும் குழந்தைகளும் உட்பட 60,000 அதிருப்தியுற்ற மக்கள் ஹென்றி ஹன்ட் எனும் தீவிரவாதத் தலைவரின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் யாரும் ஆயுதம் வைத்திருக்கவில்லை. ஆர்ப்பாட்டமும் அமைதியான முறையில் நடைபெற்றது. கூட்டத்தின் எண்ணிக்கையையும் அவர்களின் மனநிலையையும் கண்டு பீதியடைந்த அதிகாரிகள் மான்செஸ்டர் யோமனரி எனும் தன்னார்வ குதிரைப்படை காவலர்களைக் கொண்டு கூட்டத்தினரைத் தாக்க உத்தரவிட்டனர். 700க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர், 17 நபர்கள் கொல்லப்பட்டனர். ஹனட்டும் ஏனைய தீவிரவாதத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது.

**டோல்புடில் குற்றவழக்கு:** இங்கிலாந்தின் விக் அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தாரிடையே வளர்ந்து வரும் அதிருப்தியைக் கண்டு அச்சம் கொண்டு, 1834இல் அறிவிக்கப்பட்ட ஊதிய வெட்டுக்கு எதிராக தொழிலாளர்களை ஒன்று திரட்டியதற்காக ஆறு டோல்புடில் தொழிலாளர்களைக் கைது செய்தது. அவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டனையாக ஏழு வருடங்களுக்கு ஆஸ்திரேலியாவில் இருந்த தண்டனைக் காலனிக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் ஆறுபேரும் தொழிலாளர்களுக்காக உயிர்துறந்த தியாகிகள் ஆயினர்.

மெக்காடமயமாக்குதல் என்பது உடைக்கப்பட்ட கற்களைப் பரப்பி அதன்மேல் அடுத்தடுத்த அடுக்குகளாகக் கற்களைப் பரப்பி அதன்மேல் உருக்கப்பட்ட தாரை ஊற்றுவதாகும்.

**அமெரிக்காவில் மாபெரும் இருப்புப்பாதை வேலை நிறுத்தம் (1877):** ஆலைகளில் நிலவிய மோசமான வேலைச் சூழல், பலமணி நேர வேலை, குறைந்த ஊதியம், பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்பட்டது உட்பட அனைத்தும் சேர்ந்து அமெரிக்காவில் தொழிற்சங்கங்கள் உருவாகப் பங்களிப்பு செய்தன. உள்நாட்டு போருக்குப் பின்னர் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களை நடத்தினர். அவற்றில் மிகப்பெரும் வேலை நிறுத்தம் 1877இல் நடைபெற்ற இருப்புப்பாதைத் தொழிலாளர் வேலை நிறுத்தமாகும். நீண்ட பொருளாதார மந்தம் நிலவிய சூழலில் இருப்புப்பாதைத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஊதியவெட்டு வேலை நிறுத்தத்திற்கு இட்டுச் சென்றது. அமைதிப் பாதுகாப்புக் குழுவினர், தேசியக் காவலர்கள், ஐக்கிய அரசின் இராணுவம் ஆகிய அமைப்புகளால் வேலைநிறுத்தம் நசுக்கப்பட்டது.

**ஹேமார்கெட் படுகொலை:** 1886 மே 4இல் சிக்காகோ நகரின் ஹேமார்கெட் சதுக்கத்தில், தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். நாளொன்றுக்கு எட்டு மணிநேர வேலை எனும் கோரிக்கைக்குப் போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் முந்தைய தினம் நடைபெற்ற போலீஸ் தாக்குதலில் பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் அமைதியான ஊர்வலம் தொடங்கியது. காவலர்கள் கூட்டத்தைக் கலைக்க முற்படுகையில் யாரோ ஒருவர் டைனமைட் குண்டை போலீசார் மீது வீசினார். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு ஆகியவற்றில் ஏழு காவல்துறை அதிகாரிகளும் நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் காயமடைந்தனர். ஹேமார்கெட் நிகழ்வை நினைவு கொள்ளும் வகையில் 1887 மே 1 தொழிலாளர் தினமாக அல்லது மே தினமாக அல்லது உலக உழைப்பாளர் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

**இரவலர் சட்டங்கள் (Poor Laws):** பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டு (1597–98) அதன் மூலமாக வயது முதிர்ந்தோருக்கும், நோயாளிகளுக்கும், ஏழை சிறார்களுக்கும், ஆற்றலிருந்தும் வேலைவாய்ப்பில்லாமல் தவித்தோருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

**அரசின்மைவாதம்:** அரசையும் சமூகத்தின் அமைப்பையும் நம்பிக்கைக் கொண்டு, அதற்காக வலிமையைப் பயன்படுத்தாமலும், கட்டாயப்படுத்தாமலும், தன்னார்வ அடிப்படையில் கூட்டுறவாக அமைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டோர்.



மெட்டர்னிக்

ஐரோப்பிய ஒருங்கிணைவு (Concert of Europe): நெப்போலியனின் சகாப்தத்திற்கு பிற்பட்ட காலத்தில் ஐரோப்பாவின் முக்கிய சக்திகளான ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளால் உருவாக்கப்பட்ட இவ்வமைவு ஐரோப்பாவில் ஒழுங்கை நிலை நிறுத்திடவும், அதிகார சமநிலையைக் காத்திடவும் பாடுபட்டது. மெட்டர்னிக்கின் சகாப்தம் (1815 – 1848) என்று சொல்லப்பட்ட காலத்தில், முன்பிருந்த நிலையைப் பாதுகாக்கும் நோக்கத்தை வெளிப்படுத்திக் கொண்ட பெரும்சக்திகள் இவ்விணைவின் ஊடாக உள்நாட்டுக் கலவரத்தால் அச்சுறுத்தப்பட்ட நாடுகளின் விவகாரத்தில் தலையிட்டு இணைவின் ஒட்டுமொத்த முடிவை அந்நாடுகளின் மீது திணித்தது.

பிஸ்மார்க் குறிப்பிட்டதாவது: வெறும் சொற்பொழிவுகளாலும், பெரும்பான்மையினரின் தீர்மானங்களினாலும் நெடுநாளைய பெரும் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது, மாறாக அது இரத்தத்தினாலும், இரும்பினாலுமே சாத்தியமாகும்.

விலையையும், தயாரிப்பையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு பொருளின் தயாரிப்பாளர்கள் அனைவருமோ அல்லது பெரும்பகுதியினரோ கூடி உருவாக்குவதே அறக்கட்டளையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் கனரக தொழிற்சாலைகள் யாவும் அறக்கட்டளை–சங்கம் (Trust–Association) மூலமாகவே நிர்வகிக்கப்பட்டு அவற்றின் தயாரிப்பில் மூலப் பொருள்களை எடுப்பதில் துவங்கி தயாரித்து முடிக்கப்பட்ட பொருள்களை வெளியேற்றுவது வரை கட்டுப்படுத்தியது. ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் அங்கமாக செயல்பட்டு தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் போட்டியை வரையறைப்படுத்த உருவாக்கப்படும் அமைப்பே கார்டெல் ஆகும். ஜெர்மானிய தயாரிப்பாளர்களின் செயல்திறனை உலக வணிகத்தில் பெரிதும் மேம்படுத்தியதால் கார்டெல்கள் செழித்துப் பரவின.

ப்ராவ்தா என்ற ரஷ்ய சொல்லுக்கு "மெய்" என்று பொருள். இதுவே சோவியத் ஐக்கியத்தின் பொதுவுடைமை கட்சிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக 1918 முதல் 1991 வரை இருந்தது.

பல்லாண்டுகால கட்டியெழுப்புதலின் வடிவமான சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவமே நிகிலிசமாகும். நிகிலிசம் நாட்டின் அரசு, கிறித்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது. அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையைச் சுற்றியே அமைந்திருந்தன.


**ஆப்பிரிக்காவை பிரித்தல்:** பெல்ஜிய மன்னரான இரண்டாம் லியோபால்ட் 1876இல் தனது சர்வதேச ஆப்பிரிக்க சங்கத்தின் வாயிலாக ஆய்வுநடத்தி மிகச்சிறந்த ரப்பர் விளையும் பகுதியை அடையாளப்படுத்தி தன் நாட்டோடு இணைத்த பகுதியே தற்காலத்தில் பெல்ஜிய காங்கோ என்றழைக்கப்படுகிறது. அதுபோன்றே பிரெஞ்சுக்காரர்களும் டுனிஸ் பகுதியை தன்னுடன் இணைக்கும் எண்ணம் கொண்டிருந்த இத்தாலியர்களின் அதிருப்தியை சம்பாதிக்கும் விதமாக 1881ஆம் ஆண்டு அப்பகுதியில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தங்கள் வசப்படுத்தினார்கள். இதுபோன்றே 1891இல் ஐவரி கோஸ்ட்டையும், 1892இல் டஹோமேயையும் (Dahomey), 1895இல் மடகாஸ்கரையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவின் நடாலையும் டிரான்ஸ்வாலையும்இணைத்துக்கொண்டதோடு ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளையும் இணைத்தது. பிரிட்டன் 1883ஆம் ஆண்டு எகிப்தின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியது. கோல்ட் கோஸ்ட் காலனிகள், உகாண்டா, சான்சிபார், கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் ரொடீஷியா போன்றவை அடுத்தடுத்து பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் அங்கங்களாயின. ஜெர்மனி 1884ற்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் டோகோலாந்து, கேமரூன், ஜெர்மானிய தென்–மேற்கு ஆப்பிரிக்கா, ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்நூற்றாண்டின் முடிவில் நில ஆக்கிரமிப்பிற்கான போட்டி இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆப்பிரிக்கா முழுமையும் பெரும் ஐரோப்பிய சக்திகளுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட வழி ஏற்படுத்தியது. லைபீரியா, மொராக்கோ, அபிசீனியா ஆகிய நாடுகளே இணைக்கப்படாமல் எஞ்சி நின்றன.

1952 நவம்பர் 1இல் பசுபிக் பகுதியின் மார்ஷல் தீவுகளில் எலுஜெலாப் அட்டோல் எனுமிடத்தில் அமெரிக்கா, 'மைக்' எனப் பெயரிடப்பட்ட உலகின் முதல் ஹைட்ரஜன் அணுகுண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1955 நவம்பர் 22இல் சோவியத் யூனியன் தனது முதல் ஹைட்ரஜன் குண்டை வெடித்துப் பரிசோதனை செய்தது.

போரின் விளிம்பு வரை செல்வதென்பது, ஒரு நிகழ்வு, தனக்குச் சாதகமாக முடியவேண்டும் என்பதற்காக ஆபத்தான நிகழ்வுகளை உண்மையான போர் நடைபெறுவதற்கான விளிம்புவரை நகர்த்திச் செல்வதாகும். பன்னாட்டு அரசியலில், வெளியுறவுக் கொள்கைகளில், இராணுவ உத்திகளில் இது இடம் பெறுகின்றது. இது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தையும் உள்ளடக்கியதாகும்.

## உலகளாவிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சபையின் பங்கு

"போர்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து தொடங்குவதால் அம்மனிதர்களின் மனங்களில்தான் அமைதிக்கான பாதுகாப்புகளும் கட்டப்பட வேண்டும்" (ஐ.நா.சபை சாசனத்தின் முகவுரை)



ஜான் A. ஹாப்சன்

ஆங்கிலப் பொருளாதார நிபுணரான ஜான் A. ஹாப்சன் ஏகாதிபத்தியத்தை இவ்வாறு வரையறுக்கிறார்: ஏகாதிபத்தியம் என்பது தொழிலை கட்டுப்படுத்துவோர் தங்கள் செல்வங்கள் சென்றுசேரும் பாதையை விசாலப்படுத்தி அயல்நாட்டு சந்தைகளையும், அயல்நாட்டு நிதியையும் பயன்படுத்தி தாங்கள் உள்ளூரில் விற்க முடியாத பொருள்களையும், சந்தைப்படுத்த முடியாத மூலதனத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சியே என்கிறார்.

**Q கப்பல்களும் U படகுகளும்:** முதல் உலகப்போரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் நீர்மூழ்கிகள் அல்லது U-படகுகளாகும். பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள். ஒரே மாதத்தில் 880,000 டன்கள் கனத்திற்கு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. Q-கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும். பிரிட்டன் 200க்கும் மேற்பட்ட நீராவி கப்பல்களையும், மீன்பிடி கப்பல்களையும், சரக்கு படகுகளையும் கொண்டு வாணிப நடவடிக்கையை மேற்கொள்வது போன்று ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி U-படகுகள் விளைவித்த ஆபத்துகளை எதிர்கொண்டது. பிரிட்டன் இக்கப்பல்களின் வாயிலாக ஜெர்மனியை தாக்குதலைத் தூண்டச்செய்து பின் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களையும் படைபலத்தையும் கொண்டு பதிலடி கொடுக்கும் உத்தியைக் கையாண்டது.

**அகழிப் போர்முறை:** தோட்டாக்களும், குண்டுகளும் பறந்து கொண்டேயிருந்த போர்க்களங்களை உள்ளடக்கிய முதல் உலகப்போர் எழுப்பிய ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத்தோண்டி அதனுள் அடைக்கலம் தேட வைத்தது. துருப்புகளால் தோண்டப்பட்ட அகழிகளோ, குழிகளோ அவர்களை குண்டுகள் வெளியிட்ட தீயிலிருந்து பாதுகாக்க உதவின. ஜெர்மானியர்கள் தங்கள் காலாட்படைப் பிரிவிற்கு நன்றாகத் தோண்டப்பட்ட அகழிகளையும், அதில் மின்சாரம் மற்றும் படுக்கை வசதிகளையும் செய்து கொடுத்தது. உலகப்போரை அடையாளப்படுத்தும் அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும். ஒவ்வொரு அகழியையும் எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்லமுடியாதபடி நேர்கோட்டில் இல்லாமல் வளைந்துநெளிந்து வடிவமைத்திருந்தனர். அகழிகளின் முக்கிய வரிசைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவும், பின்புறத்தில் தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக உணவு, வெடிபொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன.

**கலிபோலி படையெடுப்பு 1915-16:** டார்டெனெல்ஸ் படையெடுப்பு என்றும் கூறப்படும் இப்படையெடுப்பு தோழமை நாடுகளால் ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்கு செல்லும் கடற்வழிப் பாதையைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு நடத்தப்பட்டு தோல்வியில் முடிந்தது. போதுமான உளவு தகவல்களை சேகரிக்காததும் போரிடும் பகுதியின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாததும் துருக்கியர்களின் கடும் எதிர்ப்பும் ஒருசேர்ந்து படையெடுப்பின் வெற்றியைத் தடுத்தன. தாங்கள் துவங்கிய இடத்திலிருந்து சிறிதளவே முன்னேறி கடும் சேதங்களை சந்தித்தும் அக்டோபர் மாதத்தின் பாதி வரை தோழமை நாடுகள் தவித்துக் கொண்டிருந்தன.

**காம்ப்ராய் போர் (Battle of Cambrai):** (நவம்பர்–டிசம்பர் 1917) பிரிட்டிஷாரால் அதிகஅளவில் டாங்கி வகை பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டமை பிரான்சின் காம்ப்ராயில் நடந்தப் போரிலாகும். திடீரென 340 டாங்கிகள் போர்முனையில் தோன்றியதும் ஜெர்மானியர்கள் பெரும் திகைப்பிற்கு உள்ளானார்கள்.

**பாசிசவாதம்:** பாசிசம் என்ற பதத்தின் மூலச்சொல்லான பாசஸ் என்னும் லத்தீன் சொல் ரோமானிய தேசத்தின் அதிகாரத்தைக் குறிக்கும் தடிகளால் சூழப்பட்ட கோடாரியைச் சுட்டுவதாகும்.

பாசிசம் என்பது ஒருவகையான தீவிர அதிகாரங்கொண்ட உயர் தேசியவாதம் கலந்த சர்வாதிகார சக்தியையும், அதனால் வலுப்பெற்ற எதிரிகளை ஒடுக்கும் தன்மையையும், சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மையப்படுத்தும் போக்கையும் உள்வாங்கி இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் முக்கியத்துவமடைந்த ஒன்றாகும்.

**குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சனின் முன்மொழிவு உள்ளடக்கியவைகளாவது:** 1. திறந்த உடன்படிக்கைகள் வெளிப்படையாகவே உருவாக்கப்படுதல். 2. கட்டுப்பாடுகள் யாவும் கடல்வெளியில் தளர்த்தப்படல். 3. நாடுகளுக்கிடையே பொருளாதாரத் தடைகள் அகற்றப்படல். 4. போர்த்தளவாட உற்பத்தி குறைக்கப்படல். 5. காலனி சார்ந்த சிக்கல்களை சம்மந்தப்பட்ட மக்களின் விருப்பமறிந்து பாரபட்சம் காட்டாமல் தீர்விற்கு உட்படுத்தல். 6. ரஷ்யா தனக்கு ஏற்றதாகக்கருதும் எத்தகைய அரசையும் நிறுவ அதற்கு வாய்ப்பளிப்பதோடு அவ்வரசை பிறநாடுகள் ஏற்றுக்கொள்ளவும், ஆதரிக்கவும், வரவேற்கவும் செய்தல். 7. பெல்ஜியத்தை மீண்டும் சுதந்திர நாடாக்குதல். 8. அல்சேசையும், லொரைனையும் பிரான்சிடமே மீண்டும் ஒப்படைத்தல். 9. இத்தாலிய எல்லையை தேசிய அடிப்படையில் மறுநிர்ணயித்தல் 10. தேசிய சுயநிர்ணயம். 11. ருமேனியா, செர்பியா, மான்டிநீக்ரோ ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட்டு செர்பியாவிற்கு கடலை அடைய வழி ஏற்படுத்தல். 12. துருக்கி மக்களை தன்னாட்சி கொண்ட வளர்ச்சி முறைக்கு கொண்டு செல்வதோடு கருங்கடல் நீர்ச்சந்தியிலிருந்து மத்தியதரைக்கடல் வரை "நிரந்தரமாக திறந்துவிடல்." 13. போலிஷ் மக்களுக்கென்றே சுதந்திரமான போலந்து உருவாக்கப்பட்டு அதற்கு கடல் தொடர்பு ஏற்படுத்துதல். 14. பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தல்.

**மா சே-துங் (1893-1976)**

தென்-கிழக்கு சீனாவில் அமைந்த ஹுனான் பகுதியில் மாவோ பிறந்தார். அவரது தந்தையார் ஒரு வசதியான விவசாயி என்பதோடு அவர் மஞ்சு அரசவழியின் தீவிர ஆதரவாளர் ஆவார். மாவோ புரட்சி நடந்த ஆண்டில் (1911) சாங்ஷாவில் இருந்த இளையோர் கல்லூரியில் சேர்ந்தார். அவர் புரட்சிப் படையில் சேர்ந்தாலும் சாங்ஷாவில் அமையப்பெற்ற ஆசிரியப் பயிற்சி கல்லூரியில் சேரும் பொருட்டு அதிலிருந்து வெளியேறினார். அங்கே 1918 வரை இருந்த மாவோ நூலகத்தில் நீண்ட நேரத்தினை செலவிட்டார். பின்னர் பீகிங்கிற்குப் பயணப்பட்ட அவர் பீகிங் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பொறுப்புவகித்தார். அதற்கு அடுத்த ஆண்டு முழுமையான அரசியல் செயல்பாட்டாளராக மாறிய மாவோ, ஹுனானில் அமைப்பாளராக பொறுப்பேற்றதோடு தீவிர பொதுவுடைமைவாதியாகவும் உருப்பெற்றார்.

**தைபிங்** (பெரும் அமைதி என்று பொருள்) **கிளர்ச்சி** ஒரு விவசாய கிளர்ச்சியாக மட்டுமே துவங்கியது. ஆனால் விரைவில் அது ஹங் ஹிஸியு-சுவான் என்ற வேளாண் பின்புலத்தைக் கொண்டு பள்ளி ஆசிரியரின் தலைமையில் ஒரு புரட்சி இயக்கமாகவே வடிவெடுத்தது. அவர் மக்களிடையே சமத்துவம், நிலத்தை சமமாக பகிர்தல், பழைய சமூக வேற்றுமைகளுக்கு முடிவுகட்டல் போன்ற கருத்துக்களை எடுத்துச் சென்றார். 1853இல் இவ்வியக்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு மில்லியன் என்ற அளவை எட்டி நான்கிங் பகுதியை வெற்றிகரமாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றதோடு நாட்டின் 40 சதவீதப் பகுதிகளை தனிநாடாக பாவித்து இயக்கமே நிர்வகிக்கலானது. ஆனால் தைபிங்கின் தலைமை விவசாய குடிகளின் ஏற்றத்திற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமலே இருந்தது. மறுசீரமைக்கப்பட்ட சீனப் பேரரசின் படைகள், பிரிட்டனாலும், பிரான்சாலும் வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களைக் கொண்ட பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான மேஜர் கோர்டன் தலைமையில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. நான்கிங் 1864இல் மீண்டும் பேரரசோடு இணைக்கப்பட்டது.

**பாக்ஸர் கிளர்ச்சி (1899-1901):** பாக்ஸர் என்பது ஈஹிகுவான் என்ற சீன இரகசிய சங்கத்தை குறிக்க அயல்நாட்டினர் பயன்படுத்திய சொல்லாகும் (Yihequan எனும் பதம் "நியாயம் மற்றும் ஒருமைப்பாட்டின் கரம்" என்ற பொருள் கொண்டது). பாக்ஸர்கள் பல்வேறு பின்புலத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட ஷான்டுங் மாகாணத்தை பிறப்பிடமாக கொண்ட விவசாயிகளேயாவர். பாக்ஸர்களின் முக்கிய குறிக்கோள் என்பது மஞ்சு வம்சத்தை முடிவிற்குக் கொண்டு வருவதோடு முறைகேடாக சலுகைகளைப் பெற்று வந்த மேற்கத்தியர்களை சீனாவைவிட்டு அப்புறப்படுத்துவதுமாகும். பாக்ஸர்கள் தேவாலயங்களையும், அயல்நாட்டினரின் வீடுகளையும் தீக்கிரையாக்கி கிறித்தவ சமயத்தை தழுவிய சீனர்களைப் பார்த்த இடத்திலேயே கொன்று குவித்தார்கள். பன்னாட்டுப் படை ஒன்று பீகிங் நகரை சூறையாடியதில் பேரரசியும் அவர்தம் அவையாரும் ஓட்டம்பிடித்தனர். ஏறக்குறைய 100,000 மக்கள் மடிந்தனர். இறந்தோரில் பெரும்பான்மையானோர் சாதாரண குடிமக்கள் என்பதும், அதில் ஆயிரக்கணக்கான சீன கிறித்தவர்களும், 200 முதல் 250 வரையான அயல் நாட்டினரும் (பெரும்பாலும் சமய போதகர்கள்) அடங்குவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

**விளாடிமிர் இலிச் லெனின் (1870 – 1924):** லெனின் மத்திய வோல்கா பகுதியில் பிறந்தார். அவரது மூத்த சகோதரர் 1887ஆம் ஆண்டு சார் மன்னரைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். கார்ல் மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடையமுடியும் என்று நம்பினார். அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஆலை ஊழியர்களின் வாசகவட்டத்திற்கு மார்க்சியம் குறித்து வகுப்புகள் எடுத்து காலத்தை செலவழித்துக் கொண்டிருந்தார். அவர் 1895இல் கைதுசெய்யப்பட்டு சைபீரியாவில் சிறைவைக்கப்பட்டார். பின்னர் 1900இல் விடுவிக்கப்பட்ட அவர் ஐரோப்பாவின் பெரு நகரங்களில் ஒரு விடுதியிலிருந்து மறுவிடுதிக்கென்று புலம்பெயர்ந்து கொண்டேயிருந்தார். இடதுசாரிகளில் இருந்து காங்கிரசிற்கு தேர்வு செய்யப்பட்ட 43 உறுப்பினர்களைக் கொண்ட முக்கிய கட்சியான சமூக ஜனநாயக கட்சி 1903இல் லண்டனுக்கு புலம்பெயர்ந்தது. அங்கு அமைப்பு, உத்தி போன்ற பிரச்சனைகளை முன்னிறுத்தி காங்கிரஸ் பிளவுபட்டது. போல்ஷ்விக் என்னும் ஒரு சிறு பெரும்பான்மையினை (போல்ஷின்ஸ்ட்வோ) லெனின் ஆதரிக்க அதுவே பின்னர் போல்ஷ்விக் கட்சியாக உருவெடுத்தது. சிறுபான்மையாக இருந்த அவரது எதிரணியினர் மென்ஷ்விக்குகள் என்றழைக்கப்பட்டார்கள்.



லெனின்

**பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸும் (பிலிப்பைன்ஸ் பொதுவுடைமை கட்சி) ஹக் கிளர்ச்சியும்:** அமெரிக்க அரசால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் அமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என ஆரம்பத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அது சட்டரீதியான அங்கீகாரம் பெற்று ஜப்பானிய ஆதிக்கத்தை எதிர்த்த மக்களின் படை எனப்படும் ஹக்பாலாஹப்பின் தலைமைப் பொறுப்பை தக்கவைத்துக் கொண்டது. ஹக்பாலாஹப் ஒரு வலுவான கொரில்லா அமைப்பாக உருவான காலகட்டத்தில் மறு–ஆக்கிரமிப்பை முடித்து திரும்பிக் கொண்டிருந்த அமெரிக்கப்படைகள் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸின் உறுப்பினர்களையும், ஹக் என்றழைக்கப்பட்ட பொதுவுடைமைவாத விவசாயிகளையும் அவர்கள் போர்க்காலத்தில் தோழர்கள் என கருதியவர்களே தாக்கினார்கள். அரசின் படைகளால் ஹக்குகளின் பகுதிகள் தாக்குதலுக்கு உள்ளானதால் பர்திதோ கொமுனிஸ்டா ங்க் பிலிப்பினாஸ் கொரில்லா போர் முறையை கையாண்டது. ஆரம்பத்தில் அதை தற்காப்பு அடிப்படையில் மட்டுமே கைக்கொண்டார்கள். ஆனால் 1950 முதல் அக்கட்சி அதிகாரத்தை பெறும் உத்தியாக அதைப் பயன்படுத்திக் கொண்டது. எனினும் 1950களின் மத்தியில் பிலிப்பைன்ஸ் அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவைப் பெற்று "ஹக் கிளர்ச்சியை" ஒடுக்கியது.

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்:** 1964க்கு முன்பு இரகசிய எதிர்ப்பியக்கங்களாக செயல்பட்ட பல்வேறு பாலஸ்தீனக் குழுக்களை ஒருங்கிணைப்பதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கம் (Palestine Liberation Organisation – PLO) 1964இல் உருவாக்கப்பட்டது. 1967ஜூனில் நடைபெற்ற அரபு–இஸ்ரேல் போருக்குப் பின்னர் இவ்வமைப்பு முக்கியத்துவம் பெற்றது. 1990களில் அமைதிப் பேச்சு வார்த்தைகளுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு 1980கள் முடிய PLO இஸ்ரேலுடன் நீண்ட நெடிய தற்காப்பு கொரில்லாப் போர்களில் ஈடுபட்டிருந்தது. யாசர் அராபத் இவ்வமைப்பின் மகத்தான தலைவராவார்.

**சன் யாட்–சென் (1866–1925)**



ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த டாக்டர் சன் யாட்–சென் ஒரு மிஷன் பள்ளியில் பயின்று பின் மருத்துவரானார். அரசியலில் அவர் கொண்ட ஆர்வம் அவரை கிங் அரசிற்கு எதிரான 1895ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் ஈடுபட தூண்டியது. அக்கிளர்ச்சி தோற்றதால் சன் யாட்–சென் அடுத்த பதினாறு ஆண்டுகளை நாடுதுறந்து கழிக்கும்படி ஆயிற்று. சீன மாணவர்களிடமும், வெளிநாடு வாழ் சீனர்களிடமும் அவரது புரட்சிகர கருத்துக்களைப் பரப்புவதில் தனது நேரத்தை செலவிட்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் உருவாக்கிய அரசியல் கட்சி கோமின்டாங் அல்லது தேசிய மக்கள் கட்சி என்று ஆனது.

சன் யாட்–சென் மூன்று சித்தாந்தங்களை வலியுறுத்தினார்: தேசியவாதம், ஜனநாயகம், மற்றும் சோஷலிஸம். சன் யாட்–சென் 1894ஆம் ஆண்டு சீன மறுமலர்ச்சி சங்கத்தை உருவாக்கி அதில் அவர்களின் பெருமைக்கு விதிவிலக்காக சீனா மீது அயல்நாடுகளால் திணிக்கப்பட்ட "சமநிலை மீறிய இரு ஒப்பந்தங்களை" சுட்டிக் காட்டினார். இச்சங்கம் அதிவேகத்தில் வளர்ந்ததோடு அதிக அளவில் இளைஞர்களை ஈர்த்தது. அது 1912ஆம் ஆண்டு தனது பெயரை கோ–மின்–டாங் என்று மாற்றிக் கொண்டது. இவ்வமைப்பின் உந்து சக்தியாக விளங்கிய சன் யாட்–சென் ஒரு குடியரசை விரும்பினாரேயன்றி அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட மன்னராட்சியை அல்ல.

போரிஸ் யெல்ட்சின் (1931 – 2007) 1961இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968இல் கட்சியின் முழுநேர ஊழியரானார். எழுபதுகளில் பரவலாக அறியப்பட்டவரான இவர் கட்சியில் முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார். கோர்பசேவ் பதவிக்கு வந்த பின்னர் அவர் மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் களைவதற்காக போரிஸ் யெல்ட்சினை (1985) தேர்ந்தெடுத்தார். 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் (சோவியத் யூனியனின் உயர்மட்ட கொள்கை முடிவு செய்யும் அமைப்பு) உறுப்பினராக உயர்த்தப்பட்டார். விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார். கட்சி கூட்டங்கள் சீர்திருத்தப் பணிகள் மிக மெதுவாக நடைபெறுவதாக இவர் விமர்சனம் செய்ததால் கோர்பச்சேவின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்படவேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்படவேண்டும் எனும் கருத்துக்களை அவர் முன்வைத்ததால் சோவியத் வாக்காளர்களிடையே பிரபலமானார். 1989 மார்ச்சில் சோவியத் யூனியனின் புதிய பாராளுமன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார். ஓராண்டுக்குப் பின்னர், 1990 மே 29இல் கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.